வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 26 | சுடர்: 28 | கதிர்: 169 | வள்ளுவர் ஆண்டு: 2044 | சித்திரை 31, செவ்வாய் 14.05.2013

ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும்
29°C 25°C

குடாநாட்டை அதிகாலை உலுக்கியது 'மகாசென்'

மக்கள் இடம்பெயர்வு பெரும் சொத்தழிவு

குருநகரில் நேற்று இடிமின்னல் தாக்கத்துக்கு உள்ளாகி இடிந்து சேதமுற்ற கார் மேல் மாதா ஆலயத்தில் இடிபாடுகளுக்கு நடுவே காணப்படும் மாதா சொரூபம்.

யாழ்ப்பாணம், மே 14

மணிக்கு 750 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய 'மகாசென்' புயல் நேற்று அதிகாலை திடீரென குடாநாட்டை உலுக்கியது. பல இடங்களிலும் இதனால் பாதிப்பு ஏற்பட்டது. 42 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன. புயலினால் பெரும் சொத்தழிவும் ஏற்பட்டது.

அதிகாலை 4 மணி முதல் காலை 7 மணி வரையில் 'மகாசென்' புயல் உலுப்பியது. இதன் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இயல்புநிலை பாதிக்கப்பட்டது. சில பாடசாலைகள் மூடப்பட்டன.

பனை மரங்கள், தென்னை மரங்கள் என்பன சரிந்து வீடுகள் மீது வீழ்ந்ததால் பெரும் சொத்தழிவு ஏற்பட்டது.

ஆலயம் சேதம்

குருநகரில் புனித கார்மேல் மாதா ஆலயம் மோசமான இடிமின்னல் தாக்கத்துக்கு இலக்கானது. இதனால் ஆலய முன்பக்கத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தது. காலை 7 மணியளவில் ஆலயத்தில் இடிவிழுந்தது. யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிலேயே அதிகூடிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மல்லாகம் கோணாப்புலம் முகாமிலிருந்து 15 குடும்பங்களும், கொல்லன் கலட்டியைச் சேர்ந்த 27 குடும்பங்களுமாக மொத்தம் 42 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 4 வீடுகளும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 4வீடுகளுமாக மொத்தம் 8 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 200க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

மின்தடை

மரங்கள் முறிந்து மின்கம்பிகளை அறுத்ததால் மின் விநியோகமும் பல மணி நேரம்முற்றாகத்தடைப்பட்டது. இதனை உடனடியாகச் சீர் செய்யும் பணிகள் மின்சார சபையினால் முன்னெடுக்கப்பட்டன. மாலை 4 மணிக்கு முன்னர் பெரும்பாலான பகுதிகளுக்குமின்சாரம் மீண்டும் கிடைத்தது. புயலின் மையத் தாக்கம் கடலிலேயே இருந்ததனால் நிலப்பரப்பில் கடும் சேதம் தவிர்க்கப்பட்டது என்று அதிகாரிகள் கூறினர்.

(த-5-14-51)

ஒருவரை காணோம் ஒன்பது பேர் காயம்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.குடாநாட்டில் நேற்று அதிகாலை வீசிய 'மகாசென்' புயல் மற்றும் இடிமின்னல் தாக்கத்தினால் ஒருவர் காணாமற்போனதுடன் 9 பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

தொடர்ச்சி: பக் 24

18ஆம் திகதி வவுனியாவில் முள்ளிவாய்க்கால் நினைவு

கோப்புப்படம்

யாழ்ப்பாணம், மே 14

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வவுனியா நகரசபை உபதலைவர் எம்.எம்.ரதன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2009 மே இல் இடம்பெற்ற இனப்படுகொலையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அவர்களின் உயிர்த் தியாகம் என்றைக்கும் வீண் போகாது.

அவர்களை நினைவு கூர்ந்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவதோடு அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்றார்.

(த-4)

கைதடியில் விபத்து 48 பயணிகள் காயம்

இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதின

யாழ்ப்பாணம், மே 14

கைதடியில் நேற்று இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் அவற்றில் பயணித்த சுமார் 48 பயணிகள் காயங்களுக்குள்ளாகி சிகிச்சைக்காக யாழ். போதனா

தொடர்ச்சி: பக்கம் 24

புயல் அபாயம் நீங்கியது

யாழ்ப்பாணம், மே 14

யாழ். குடாநாட்டில் புயல் அபாயம் நீங்கிய போதும் மப்பும் மந்தாரமுமான கால

தொடர்ச்சி: பக்கம் 24

எட்டு வருடங்களின் பின்னர் சிவராம் கொலை விசாரணை

கொழும்பு,மே 14

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை வழக்கில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை 8 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று முதற் தடவையாக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு ஏப்ரல் [illegible] கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் சடலம் நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகில் மீட்கப்பட்டது. சிவராம் கொலை தொடர்பில் புளொட் இயக்கத்தைச் சேர்ந்த ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தராஜா என்ற

தொடர்ச்சி: பக்கம் 24

உலகம்

அன்னையர் தினப் பேரணியில் துப்பாக்கிதாரிகள் தாக்குதல்

பக். 06

செய்திகள்

நாடளாவிய ரீதியில் 20 இல் வேலை நிறுத்தம்

பக். 11

விளையாட்டு

50ஆவது பட்டத்தை கைப்பற்றினார் செரீனா வில்லியம்ஸ்

பக். 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீதியால் சென்று கொண்டிருந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி மதகு ஒன்றினுள் விழுந்து விபத்துக்குள்ளாகியது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு கொக்குவிலில், ஆடியபாதம் வீதியில் இடம்பெற்றது. (த-4)

ஜனில் தமிழினி விடுதலை

கொழும்பு,மே 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை மகளிர் பிரிவுத் தலைவியாக இருந்த தமிழினி என்று அழைக்கப்படும் சிவசுப்ரமணியம் சிவகாமி, புனர்வாழ்வுப் பயிற்சிகள் நிறைவடைந்த நிலையில் அடுத்த மாதம் விடுதலையாகவுள்ளார். இவ்வாறு விடுதலையாகும் தமிழினி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்று சில தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனைப் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

வவுனியாவிலுள்ள பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வரும் தமிழினி, எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் விடுதலையாகவுள்ளார் என்றும் பிரிகேடியர் குறிப்பிட்டார்.

தமிழினி தனது விடுதலையின் பின்னர் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதையே விரும்புகின்றார் என்று தெரிவித்த புனர்வாழ்வு ஆணையாளர், அவர் அனைவர் மத்தியிலும் பிரசித்தமடைவதை விரும்புவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், முன்னாள் போராளிகள் பலர், எதிர்வரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள நிலையில், தமிழினிக்கும் அதற்கான வாய்ப்பை வழங்க அரசியல் முக்கியஸ்தர்கள் முன்வரலாம்.

ஆனால், அந்த வாய்ப்பைத் தமிழினி எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகிறார் என்பது குறித்து உறுதியாகக் கூற முடியாது என்றும் ஆணையாளர் மேலும் கூறினார். (த)

பொலிஸாரின் புதுவருடக் கொண்டாட்டம்

மதுப் போத்தல்களால் நிறைந்த மல்லாகம் மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம்,மே 14

பொலிஸாரின் புதுவருடக் கொண்டாட்டத்தால் பாடசாலை வளாகம் மதுப் போத்தல்களால் நிறைந்து காணப்பட்டன. மாணவர்களும் மதுப்பிரியர்களாக மாறி அட்காசத்தில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் புதுவருடக் கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

புதுவருடக் கொண்டாட்டத்துக்கு என காலை முதல் மாலை வரை விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நிகழ்வுகளுக்கு பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அன்றையதினம் பகல் போட்டி நிகழ்வுகளைத் தொடர்ந்து இரவு விசேட பாட்டுக்கச்சேரி பாடசாலையின் மைதானப் பகுதியில் ஒழுங்கமைக்கப்பட்ட நிலையில் பாட்டுக் கச்சேரிக்கென அந்தப் பகுதி மக்கள் பெரும் எண்ணிக்கையில் பங்குபற்றியிருந்தனர்.

பாட்டுக்கச்சேரி இடம்பெற்ற மைதானப் பகுதியில் மதுபான சாலையும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. வயது வித்தியாசமின்றி பாடசாலை மாணவர்களும் மதுப்பிரியர்களாக மாறி குழுமியிருந்த கூட்டத்தில் அட்காசத்தில் ஈடுபட்டனர்.

மைதானப் பகுதியில் மது விற்பனை இடம்பெற்றதால் பாடசாலை வளாகம் எங்கும் மதுப்போத்தல்கள் குவிக்கப் பட்டிருந்தன.

அத்துடன் பாடசாலையின் வகுப்பறைகள் எங்கும் மதுப் பிரியர்கள் விழுந்து கிடந்ததுடன் குடிதண்ணீர் குழாய்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

பொலிஸாரின் புதுவருடக் கொண்டாட்டத்தால் நேற்றையதினம் பாடசாலைக்குள் உள்நுழைந்த ஆசிரியர்களும், மாணவர்களும் வகுப்பறைக்கு செல்ல முடியாமல் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள நேரிட்டது.

மதுப் போத்தல்களை மாணவர்கள் ஒரு இடத்தில் குவிக்கும் செயலில் ஈடுபட்டனர்.

பாடசாலையின் வளாகத்தில் இவ்வாறானதொரு நிகழ்வு நடத்தப்பட்டதுடன் மாணவர்களைச் சீரழிக்கும் செயற்பாடாக இது அமைந்ததாகவும் இதனால் நேற்று பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை எனவும் அந்தப்பகுதிமக்கள்விசனம்தெரிவித்துள்ளனர். (ம-14-422)

கச்சதீவு விவகாரம் மீள் பரிசீலனைக்கு

இந்திய மத்திய அரசு தயார்

சென்னை,மே 14

கச்சதீவு விவகாரத்தில் மறுபரிசீலனை செய்ய, மத்திய அரசு தயாராக உள்ளதாக, மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். சென்னை சென்ற, மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி, விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய - இலங்கை, ஒப்பந்த அடிப்படையில், கச்சதீவு, இலங்கையிடம் வழங்கப்பட்டது.எனினும் அங்கு இடம் பெறும் விழாவில், இந்தியர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

> **“இந்திய மீனவர்கள், மீன் பிடிக்க செல்லும்போது, கச்சதீவில் ஓய்வெடுக்க, மீன் வலைகளை உலர வைக்க, அனுமதி உள்ளது.**

இந்திய மீனவர்கள், மீன் பிடிக்க செல்லும்போது, கச்சதீவில் ஓய்வெடுக்க, மீன் வலைகளை உலர வைக்க, அனுமதி உள்ளது.எனினும், சமீப காலமாக, இந்த ஒப்பந்தம் மீறப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

இந்த நிலையில், தமிழக முதல்வர் ஜெயலலிதா, கச்சதீவை இலங்கையிடம் இருந்து திரும்பப்பெற, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் கருணாநிதியும், கச்சதீவை மீட்க, உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார்.

தமிழக மக்களின் ஒருமித்த கருத்தை அடுத்து, கச்சதீவு விவகாரத்தில் மறுபரிசீலனை செய்ய, மத்திய அரசு தயாராக உள்ளது-என்றார். (த)

கருத்தியல் இணக்கம் இல்லையேல் கட்சிகளின் ஒற்றுமை சாத்தியமாகாது

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே 14

கருத்தியல் ரீதியாக உடன்பாடு எட்டப்பட்டால் அன்றி தமிழ்க் கட்சிகள்அனைத்தையும் ஒரே குடையின் கீழ்கொண்டு வரும் முயற்சிவெற்றியளிக்காது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை ஒரு தீர்வாகவோ அல்லது அதிலிருந்து படிப்படியாக தீர்வு நோக்கி முன்னேறிச் செல்ல முடியும் என்ற வாதத்தையோ நாம்ஏற்கவேஇல்லை இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ்த்தேசியபேரவை அமைக்க முயற்சித்தால் நாம் அதில் பங்கெடுக்க மாட்டோம்" என்றார் அவர்.

அவரது அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை ஊடகவியலாளர்களைச் சந்தித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சனிக்கிழமை மன்னார் ஆயர் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும், சிவில் சமூகத்துக்கும் இடையே கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது தற்போது இடம் பெற்று வரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை எதிர்க்கும் வகையிலும், தமிழ் மக்களின் ஆகக் குறைந்த அரசியல் தீர்வுக்கு தமிழ்க் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை எட்டும் வகையிலும் தமிழ்த் தேசியப் பேரவை அமைக்கப்பட்டுபொதுவேலைத் திட்டத்தை முன்னெடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதில் இறுதி அரசியல் தீர்வு என்ன என்ற விடயத்திலும், [illegible] தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை ஊடாக படிப்படியாகத் தீர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்றனர். எங்களைப் பொறுத்தவரையில் மாகாண சபை முறைமையில் தீர்வை சிங்கள தேசமே தீர்மானிக்கும்.

தமிழ்த் தேசத்தின் இறைமை, சுயநிர்ணயம், தனித்துவமும் அங்கீகரிக்கப்படுகின்ற வேளை சிங்கள தேசத்தின் இறைமை, சுயநிர்ணயம், தனித்துவம் அங்கீகரிக்கப்பட்டு இரு தேசங்களின் கூட்டாக தீர்வு அமைய வேண்டும் என்பதே எமது கருத்து.

இதனை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் எமது கட்சி தமிழ்த் தேசிய பேரவைக்குச்செல்லாது-என்றார்.

(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘மகாசென்’ புயலால் சேதமுற்ற கோணப்புலம் முகாம் புனரமைப்பு



யாழ்ப்பாணம்,மே 14

மல்லாகம் கோணப்புலம் முகாமில் சேதமடைந்த வீடுகளை புனரமைப்புச் செய்யும் நடவடிக்கைகள் இராணுவத்தினரைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை யாழ்ப்பாணத்தில் திடீரென வீசிய மினிப்புயல் காரணமாக, மல்லாகம் கோணப்புலம் முகாமில் அமைந்துள்ள 25 வீடுகள் வரையில் சேதமடைந்தன.

பனைமரம் மற்றும் ஏனைய மரங்கள் முறிந்து வீழ்ந்தமையாலேயே இந்த அழிவு ஏற்பட்டது.

நேற்றுக் காலை குறித்த முகாமுக்குச் சென்ற பிரதேச செயலர் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் மரங்களை வெட்டித் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் குறித்த இடத்துக்கு வந்த இராணுவத்தினர் வீடுகளைப் புனரமைக்கும் பணிகளை முன்னெடுத்தனர். (த-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

உடல் நலத்தை முதன்மையாக்க நிலைபேண் தகு நிலைக்கு மனம் கொள்வோம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வைத்திய சாலைகளின் தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. ஆனால் அவற்றின் தேவைகள் அனைத்தையும் சுகாதாரத் திணைக்களம் நிறைவு செய்யும் என்று எதிர்பார்த்திருக்க இயலாது. அவ்வாறு எதிர்பார்த்திருப்பதால் அது நோயா ளருக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடும். வேண்டிய தேவைகளை நிறைவு செய்வதில், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் காலதாமதம் உண்டாக வாய்ப்புண்டு.

இத்தகைய நிலையில் வைத்தியசாலை பிரதேசம் சார் சமூகம் தமது பகுதி வைத்தியசாலை வளவசதிகளை நிறைவு செய்வதற்கு விழிப்புணர்வோடு முன்வரவேண்டும். இதனைத் தமது சமூகத்துக்குச் செய்யும் சேவையாகக் கருதி ஆற்ற வேண்டும்.

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன். அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகை யிலேயே யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

சங்கானை, கரவெட்டி, சாவகச்சேரி வைத்தியசாலைகள் சார் சமூகத்தினர் வழங்கிவரும் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பினால் அவற்றின் சேவைகளின் தரம் உயர்ந் துள்ளது. குறிப்பிட்ட வைத்தியசாலைகளின் தேவைகளை இனங்கண்டு குறிப்பிட்ட பிரதேசங்களின் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன- என்றும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார். அவரது கருத்து, வேண்டுகோள் பிரதேச மக்களால் மிகுந்த ஈடுபாட்டுடன் மனங்கொள்ளப்பட வேண்டியது என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடம்இருக்க முடியாது.

போர்க் காலத்தில் வடக்கின் வைத்திய சேவை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஆண்டுகள் நான்கு கழிந்த நிலையிலும் பிரதேச மட்டங்களில் மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு வைத்திய சேவை சீர்பெறவில்லை.

சுகாதார சேவைகளை முழுக்க முழுக்க அரசு பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் அந்தந்த வைத்தியசாலை சார் சமூகம் தனது பங்களிப்பை நல்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாகிறது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில், வைத்தியர் பற்றாக் குறை ஓரளவில் நீங்கி வந்தாலும் வளக் குறைவுகள் தொடரவே செய்கின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் வைத்திய சேவைக்கான வளங்கள் அழமட்டத்திலேயே இன்னமும் மூழ்கி உள்ளன.

அவற்றை நிவர்த்தி செய்வதற்கு வெளிநாடுகளில், புலம்பெயர் நாடுகளில் வாழும் அந்தந்தப் பிரதேச உறவுகளின் உதவி பெரிதும் தேவை.

குடாநாட்டுடன் ஒப்பிடும்போது வன்னி மாவட்டங்களில் தொற்று நோய்கள் பரவுவதற்கான ஏதுநிலைகள் அதிகம். அந்த மாவட்டங்களின் சுகாதாரத் தேவைகளை, சேவைகளைப் பூர்த்தி செய்வதில் அந்தந்தப் பிரதேசம் சார் வெளிநாட்டு உறவுகளின் உதவி அங்கே மிகப் பெரிதும் வேண்டப்படுகிறது.

வடமாகாண மக்களின் சுகாதார அபிவிருத்திக்கென ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அனைத்துலக நிதியம் ஒன்றினால் பல மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ள தாகப் பிந்திய தகவல்கள் வெளியாகி உள்ளன.

அந்த நிதி மலேரியா, டெங்கு, காசநோய் தடுப்பு அலகுகளை நிறுவுதல், ஆய்வுகூடங்களை நிறுவுதல் உட் படப் பல வசதிகளுக்கு வாய்ப்பளிக்கும் என எதிர்பார்க் கப்படுகிறது.

அரசாங்கம் தனித்து வடக்கின் சுகாதாரத் தேவைகளை நிறைவேற்றும் என்று காத்திருக்கக் கூடாது. நம் கையே நமக்கு உதவி என்பதனை மறந்துவிடாது சுகாதார மற்றும் வைத்திய தேவைகளை நிறைவேற்ற அந்தந்தப் பிரதேசம் சார் சமூகத்தினரின் அக்கறையும், பங்களிப்பும் தவிர்க்க முடியாதவை.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். உணவு மற்றும் உடைத் தேவைகளுக்கு அடுத்து அன்றாட வாழ்வில் சுகநலம் மிகப் பிரதான அலகு.

பிரதான தேவைகளுக்கு அன்றி அத்தியாவசியமற்ற செலவுகளுக்கு ஒதுக்கும் பணத்தில் ஒரு பகுதியை, தத்தம் பிரதேசம் சார் மக்களின் சுகாதாரம் பேணலுக்கு வழங்கு வதற்கு வசதிகளும் வாய்ப்புகளும் உடையோர் முன்வர வேண்டும். எந்தச் சுகதேகியும் என்றோ ஒருநாள் திடீரென நோயாளியாவது மனித வாழ்வில் இயல்பு. அதனை மனதிற் கொண்டு பிரதேச வைத்திய தேவைகளுக்கு உதவுவதற்கு இதயபூர்வமாக விரும்பி முன்வருவோமாக.

உயிர் காக்க உடல்நலம் முதன்மையானது. அதனை நிலைபேண் நிலைக்குக்குக் கொண்டு செல்வதற்கு உதவி ஒவ்வொரு மனிதனும் மனம் கொள்ளட்டும்.

யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறையை நீக்குக

மத்திய சுகாதார அமைச்சிடம் கோரிக்கை

அச்சுவேலி, மே 14

வடக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள யாழ்.மாவட்ட வைத்தியசா லைகளில் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகிறது. வைத்தி யசாலைகளில் நிலவும் தாதிய உத்தி யோகத்தர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு பொருத்தமான நட வடிக்கை எடுக்குமாறு மத்திய சுகா தார அமைச்சிடம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலை தவிர ஏனைய வைத்தியசாலைகள் அனைத் தும் மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ளன. இந்த வகையில் 43 வைத்தியசாலைகள் யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனை யின் கீழ் செயற்படுகின்றன.

யாழ்.மாவட்ட வைத்திய சாலைகளில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையில் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறை முன்னணியில் உள்ளது என்றும் கூறப்படுகின்றது.

தாதிய உத்தியோகத்தர்கள் தொழில் சார் நிலையில் குறிப்பிட்ட காலம் பயிற்சி வழங்கப்பட்டு உள்ளகப் பயிற்சி, இறுதிப்பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்த பின்னரே நியமனம் வழங்கப்படுகின்றது.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தாதியர் பயிற்சிப் பாடசாலை யில் அணி, அணியாக பயிற்சி முடித்து வெளியேறுபவர்களில் இருந்து புதிய நியமனம் வழங்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வ தற்கு தற்போதைய நிலையில் அந்த எண்ணிக்கை போதாமல் இருப்ப தாகக் கூறப்படுகிறது.

தாதியர் பயிற்சிப் பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள் ளும்போது தற்பொழுது உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு பாடங்களில் சித்தி யடைந்தவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இதனால் மிகமிக குறைந்த எண் ணிக்கையானவர்கள் யாழ்.மாவட் டத்தில் இருந்து பயிற்சியில் இணைத் துக் கொள்ளப்படுகின்றனர். ஏனை யோர் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வர்கள். அவர்கள் பயிற்சி முடித்து தமது சொந்தப் பிரதேசங்களில் நியமனம் பெறுகின்றனர்.

தாதியர் பயிற்சிப் பாடசாலை அனு மதிக்கான கல்வித் தகைமை விஞ் ஞான பாடம் தவிர்ந்த ஏனைய பாடத்துறைகளும் அங்கீகரிக் கப்

> **“ தாதியர் பயிற்சிப் பாடசாலையில் மாணவர் களைச் சேர்த்துக் கொள் ளும்போது தற்பொழுது உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு பாடங்களில் சித்தி யடைந்தவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர்.**

பட்டிருந்த வேளையில் யாழ்ப்பா ணம் தாதியர் பயிற்சிப் பாடசாலை யில் பயிற்சி பெற்றவர்களின் பெரு மளவு எண்ணிக்கையானோர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அத னால் யாழ்.மாவட்ட வைத்தியசாலை களில் தாதிய உத்தியோகத்தர் பற் றாக்குறை கணிசமான அளவு நிவர்த்தி செய்யப்பட்டது.

இந்த வகையில் யாழ்.மாவட்ட வைத் தியசாலைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறையை போக்குவதற்கு வசதியாக ஏற்புடைய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மத்திய சுகாதார அமைச்சிடம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது. (ம-11)

பண மோசடியில் ஈடுபட்ட

சமூர்த்தி உத்தியோகத்தர் மீது இதுவரை நடவடிக்கை இல்லை

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பண மோசடியில் ஈடுபட்ட சமூர்த்தி உத்தி யோகத்தர் ஒருவருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின் றது.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில், யாழ் மேற்கு சமூர்த்தி வங்கிச் சங்கத்தி லேயே பண மோசடி இடம்பெற்றுள் ளது.

அங்குள்ள சமூர்த்தி உத்தியோகத்தர் தனது வேலை முன்னேற்றத்தைக் காட்டுவதற்காக, சமூர்த்திப் பயனாளி களின் வைப்பிலுள்ள 91 ஆயிரத்து 500 ரூபா பணத்தைத் தனது சொந் தக் கணக்கில் வைப்பில் வைப்புச் செய்துள்ளார்.

இந்தத் தவறான நிதி கையாடலுக்கு குறித்த சமூர்த்தி வங்கியின் காசாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகி யோரும் உடந்தையாக இருந்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோசடி தொடர்பில் சமூர்த்தி உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்கு தெரியப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சமூர்த்தி மாவட்ட இணைப்பாளர், வங்கிக் கண்காணிப்பு அதிகாரி ஆகி யோரைக் கொண்ட குழுவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட் டன. விசாரணைகளில் தவறான நிதி கையாடல் உறுதிப்படுத்தப்பட்ட போதும் இதுவரையில் நடவடிக்கைகள் எவை யும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அரு மைநாயகத்தை பலமுறை தொடர்பு கொண்ட போதும் அவர் பதிலளிக்க வில்லை. (ம-5)

இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்

வலி வடக்கு, மே 14

தேசிய இளைஞர் சேவைகள் மன் றத்தின் இரண்டாவது இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக இடம் பெற்ற வேட்பு மனுத்தாக்கலைத்தொடர்ந்துவெளியான முடிவுகளின் அடிப்ப டையில் ஏகமன தாக போட்டியற்ற முறையிலும் தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்டத்தின் இளை ஞர் நாடாளுமன்ற உறுப்பினர் களின் விவரம் வருமாறு:-

தேர்தல் அடிப்படையில் தெரிவு செய் யப்பட்டவர்கள்.

உடுவில் இ.பிரணவரூபன், சங்கானை கோ.கோர்டன், நெடுந்தீவு கிறிஸ்ரின் அலென்ஜெலன், ஊர்காவற்துறை இ.டிவி, பருத்தித்துறை செல்வி சர்மிலா தேவராசா, சண்டிலிப்பாய் க.உ சாந்தன், நல்லூர் அன்ரன்யோகநாதன், யாழ்ப் பாணம் செல்வி பரமயோகநாதன் இராஜசோபனா, தெல்லிப்பழை செ.அகில்ராஜ், காரைநகர் ச.பிரதீபன், கோப்பாய்ப.விஜிதரன், கரவெட்டிசி.சிவச் செல்வம், வேலணை சி.பார்த்திபன், சாவகச்சேரி ச.மதியழகன், மருதங் கேணி க.கார்த்திபன். (ம-86)

முன்னறிவித்தல் எதுவுமின்றி ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள்

பாலூட்டும் ஆசிரியத் தாய்மாரும் இதில் அடங்குவர்

யாழ்ப்பாணம்,மே 14

எந்தவித முன்னறிவித்தலுமின்றி வட மாகாண கல்வித் திணைக்களம் யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கு வன்னிப் பிரதேசங்களுக்கு இடமாற் றக் கடிதங்கள் அனுப்பி வைத்துள் ளமையை இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள் ளது.

ஸ்தாபன விதிக்கோவைகளுக்கு முர ணாக ஆளுநரின் ஆணைப்படி என்று இடமாற்றக் கடிதத்தில் குறிப் பிட்டு அடாத்தான முறையில் இந்த இட மாற்றக் கடிதங்கள் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றக் கடிதங்கள் மனதி நோயினால் பாதிப்புற்ற ஆசிரியராக ளுக்குமே அதிகமாக அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

வடமாகாணக் கல்வித் திணைக் களத்தால் தேசிய இடமாற்றக் கொள் கைகள் புறந்தள்ளப்பட்டு ஸ்தாபன விதிக் கோவைகளை முற்றாக மீறி இந்த இடமாற்றச் செயற்பாடுகள் மிக மோசமாக முன்னெடுக்கப்பட்டுள் ளன.

அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கப் படாத நிலுவைகள், சீர் செய்யப்படாத கோவைகள், வழங்கப்படாத பதவி உயர்வு குறித்து பலமுறை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு எடுத்துக் கூறியும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் யாழ். மாவட்டத்தில் உள்ள இளம் ஆசிரி யர்கள், குழந்தைப்பேறு பெற்ற ஆசிரி யர்கள், நோய் நிலையில் உள்ள ஆசிரி யர்களுக்கு எந்தவித முன்னறிவித்த லும் இன்றி வலயக் கல்விப் பணிப் பாளர்களுக்கோ, பாடசாலை அதிபர் களுக்கோ, ஆசிரிய சங்கங்களுக்கோ தெரியப்படுத்தாமல் இடமாற்றக் கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிர்ப்பந்திப்பை வடமாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டமை மனித உரிமை மீறலாக உள்ளது.

எனவே இந்த இடமாற்றத்தை இரத்து செய்யாவிட்டால் பல கோரிக்கை களை முன்வைத்து அதிபர், ஆசிரி யர்கள் சுகவீனப் போராட்டத்தை மேற்கொள்ள நேரிடும் எனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டுக்கோட்டை வடக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த **பரமேஸ்வரன் - மாலா** தம்பதியரின் புதல்வியும் சீக்காய் வயல் வீதி, வழக்கம்பரையைச் சேர்ந்த **சி.சிவகணேசன்** அவர்களின் துணைவியுமான

திருமதி சர்மிலா சிவகணேசன்

அவர்கள் 21.04.2013 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் B.A.(Communication) பட்டம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேன் மேலும் கல்வியில் உயர்வடைந்து சிறப்படைய வட்டு வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகரையும், கொத்தன்வளவு ஞானவைரவரையும் வேண்டுகின்றோம்.

Best Wishes

வட்டு.வடக்கு, சித்தன்கேணி. (C/9179)(3.6) **சுற்றத்தினர்.**

பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டுக்கோட்டை வடக்கு,சித்தன்கேணியைச் சேர்ந்த **சிவகுமார்-சோமேஸ்வரி** தம்பதியினரின் புத்திரி

செல்வி **சிவகுமார் பகீரதி**

அவர்கள் 2012 க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 2A,B பெற்றதுடன் மாவட்ட நிலையில் முதலிடத்தினையும் பெற்று, மருத்துவபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமையைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் சிறப்படைய வட்டு வடக்கு கற்பக விநாயகரையும், கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகர விநாயகரையும்,கொத்தன்வளவு ஞான வைரவரையும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

அப்பப்பா, அம்மம்மா, மாமா குடும்பம், சித்தப்பா குடும்பம்.

விற்பனைக்கு

யாழ் நகரப் பகுதியில் தட்டாதெருச்சந்திக்கு மிக அண்மையாக 2¾ பரப்புக் காணியில் அமைந்த மிக விசாலமான மாடி வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. வாகனங்கள் நிறுத்தக் கூடிய தரிப்பிட வசதியும் உண்டு.

T.P - 0779229041

கிராம வலம் வருவார் வைரவர்

வட்டுக்கோட்டை, மே 14

வட்டு வடக்கு கொத்தன்வளவு ஞானவைரவர்ப் பெருமானின் அலங்கார உற்சவத்தின் ஒன்பதாம் நாளான இன்று மாலை நடைபெறவுள்ள வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி கிராம வலம் வருதல் நிகழும்.

நாளை மறுதினம் வியாழக்கிழமையன்று கிராம நன்மை விருத்திச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மகாசங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

ஆலய உற்சவம் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

தவறவிடப்பட்டது

மானிப்பாய் சுதுமலை அம்மன் கோயிலடியில் (வெள்ளை நிற Samsung Galaxys Duos) கையடக்கத் தொலைபேசி தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு:

இ.மதுகதன்.0774598369, 077 6599714 குமாரலிங்கம் வீதி, இணுவில்

கண்ணீர் அஞ்சலி

எமது விவசாய பீடத்தின் இரசாயன வியல் துறையின் தலைவர் கலாநிதி திருமதி நளினா ஞானவேல்ராஜா அவர்களின் அன்புத் தந்தை

அமரர் சரவணமுத்து பரநிரூபசிங்கம்

இறைபதம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய பீட நலன்புரி சங்கம், விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

வேலையாள் தேவை

முன் அனுபவமுள்ள உதவியாளர்,வான் சேல்ஸ் உதவியாளர்கள் தேவை. ஆதாரபூர்வமான தகைமையுடன் வரவும்.

NEWTONE ELECTRICAL

169,SIR PON RAMANATHAN ROAD, PARAMESWARA JUNCTION, THIRUNELVELY,JAFFNA (C/9196)(6.11)

கண்ணீர்க் காணிக்கை

எமது சக உத்தியோகத்தர் **ஐ. மயூரனின் அன்புத் தந்தையாரான அமரர் சின்னத்தம்பி ஐயாத்துரை** அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், சக உத்தியோகத்தர்களும்.

எட்டாம் நாள் நினைவும் விருந்துபசார அழைப்பும்

சேவியர் றோசலின்

தோற்றம் 16 03 1949

மறைவு 06 05 2013

கடந்த 06.05.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி சேவியர் றோசலின் அவர்களின் 8ஆம் நாள் நினைவு இன்று 14.05.2013 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மெலிஞ்சி முனை, ஊர்காவற்றுறை. (36546) (23-16) குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி.

இரத்தினம் நாகம்மா

அம்மம்மா என்று அன்புடனே அழைக்க இருந்தீர்கள் வழி தெரியா நேரத்தில் வழிகாட்டியாய் இருந்தீர்கள் என் அன்பு மகன் விஷ்ணுவின் வளர்ப்பினிலே பொழுதொரு வண்ணமும் அக்கறையை காட்டினீர்களே! விதி செய்த வினையால் எம்மை விட்டு சென்றீர்கள் பிரார்த்திக்கின்றோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய

பாசமுள்ள பேரன் கெ.சிவபாலன். (36547) (23-16) பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

புஸ்பராசா சயந்தன்

(சாவகச்சேரி யா/டிறிபேக் கல்லூரி மாணவன்)

சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராசா சயந்தன் நேற்று (13.05. 2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராசா (ஆதார வைத்தியசாலை-சாவகச்சேரி)-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கலிஸ்ரா, அனோஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான தில்லை-நேசம் தம்பதியர் மற்றும் மருதன்-மரியாள் தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 11 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி, கச்சாய் வீதி, சாவகச்சேரி. (சி/9280) (10-6) தகவல்: **தி.புஸ்பராசா** (தந்தை)

மரண அறிவித்தல்

திருமதி நாகம்மா இரத்தினம்

காரைநகர், கருங்காலியை பிறப்பிடமாகவும், மருதடிப் பிள்ளையார் கோயிலை வதி விடமாகவும், தற்போது கொழும்பு, மூர் வீதியை வதி விடமாகவும் கொண்ட திரு மதி நாகம்மா இரத்தினம் 12.05.2013 அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற க.கு.ச. இரத்தினத்தின் (பிர பல வர்த்தகர், க.கு.ச. இரத் தினம் ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி றோட், யாழ்ப் பாணம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகமுத்து (பிரபல வர்த்தகர், ருவன் வெல நாகமுத்து) - அமராவதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (பிரபல வர்த்தகர், க.கு.சங்கரப்பிள்ளை ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்)- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், சரோஜினிதேவி, தனலெட்சுமி, மகேஸ்வரி, கமலாதேவி, நகுலாதேவி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற Dr. செல்வரட் ணம், கெங்காதரன், சிவபாதவிருதயர், இராஜேந்திரம், அமிர்த லிங்கம், அனுசா ஆகியோரின் அன்பு மாமியும், சந்திரிகா, சந்திரலதா, சிவபாலன், சிவகௌரி, சிவகாந்தன், கிருஷ்ண வேணி, நிஷாந்தன், கஜப்பிரியன், விசாகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபிரூபா, அபிஈசன், விஷ்ணுகன் ஆகி யோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்றவர்களான கந்த சாமி, நடராசா மற்றும் நவரட்ணம் (J.P), சுந்தர லிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.05.2013, 15.05.2013 அஞ் சலிக்காக கல்கிசை மகிந்த மலர்சாலையில் வைக்கப்பட்டு 16.05.2013 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No.22½, Moor Road, Colombo - 06. (C/9080)(10.6) தகவல்: **க.கு.ச. இ.விக்கினேஸ்வரன் (மகன்)**

மரண அறிவித்தல்

கதிராமு இராஜேந்திரன்

(அதிபர்-அப்புத்தளை, பங்கட்டி தோட்டம்)

கொல்லன்கலட்டி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிராமு இராஜேந்திரன் நேற்று (13.05.2013) திங்கட் கிழமை இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான கதிராமு- சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, நரசிங்கம், மீனாட்சிப் பிள்ளை, அன்னப் பிள்ளை மற்றும் வேலுப் பிள்ளை, சிவகாமிப் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், மதி வதனி (ஆசிரியர், நீர்/வி.இ.ம.க), சிவநேசன் (இறைபணி கானான் திருச்சபை), சிவகுமார், சூரியகலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவநீதராஜா, கவிதா, விருஷ்ணி, மன்மதராஜா ஆகியோரின் அன்பு மாமனும், சுஜீரா, சோபனா, தனுஷ்காந்த், நஜீவ், கஜி, பௌவ்யா, கஜீபன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாலை 4 மணியளவில் நீர்கொழும்பு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 8/A, லக்ஸ்மன் மாவத்தை, கடற்கரை வீதி, நீர்கொழும்பு. 031-2226201 (C/9197)(10.6) தகவல்: **இ.சிவநேசன் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்புநிலையைக் குலைத்தது 'மகாசென்'

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.குடாநாட்டையும் சுழற்றியது 'மகாசென்' சூறாவளி.

நேற்றுக்காலை 6.30 மணியளவில் காற்று மற்றும் இடிமின்னலுடன் திடீரென மழை பெய்ததால் மக்களின் இயல்பு வாழ்வு முற்றுமுழுதாக ஸ்தம்பித்துப் போனது.

பல்வேறு பகுதிகளிலும் வெள்ளம்

இந்தக் காற்றுடன் கூடிய கன மழையால் குடாநாட்டின் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளம் தேங்கியது. இதனால் அந்தப் பகுதிகளில் குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.

பயன்தரு மரங்கள் அழிவு

ஆயிரக்கணக்கான பயன்தரும் மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் பெரும்தொகை நஷ்டம் ஏற்பட்டது. மாமரங்கள், வாழை மரங்கள் போன்றனவே இதனால் அதிகம் அழிவடைந்தன.நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் மூன்றரை ஏக்கர் வாழைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களிலும் பனை மரங்களும் முறிந்து வீழ்ந்தன. ஒருசில வீடுகளுக்கு மேலும் விழுந்த போதும் உயிராபத்துகள் எதுவும் ஏற்படவில்லை.

பாடசாலை செயற்பாடுகளில் ஸ்தம்பிதம்

பெரும்பாலான பாடசாலைகள் இயங்காத நிலையிலேயே இருந்தன. ஒரு சில பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்ற போதும் வரவு மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

மழையால் போக்குவரத்து வசதிகள் இன்மையாலும் மாணவர்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பணியாளர் வரவுகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன.

தனியார் கல்வி நிறுவனங்களிலும் அதிகாலை வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

கூரைகள் தூக்கி வீசப்பட்டன

கடும் காற்றால் குடியிருப்புகள், தொழிலிடங்கள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. இதனால் வர்த்தக நிலையங்களில் பொருள்கள் மழையில்நனைந்து பெரும் நஷ்டம் ஏற்பட்டது. நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 31 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மல்லாகம் மகாவித்தியாலய மேல்மாடிக் கட்டட கூரைத் தகடுகளும் தூக்கி வீசப்பட்டன. இதனால்நூலகம் மழையில் நனைந்தது.

தீவுப் பகுதியில்

தீவுப் பகுதியில் ஒரு சில வீடுகள் சேதமடைந்துள்ள துடன் சில மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன.

நெடுந்தீவுக்கான படகுச் சேவை வழமைபோன்று காலையில் இடம்பெற்றது. சமுத்திர தேவா, வடதாரகை படகுகள் தமது குறிப்பிட்ட நேரத்துக்கு பயணத்தை ஆரம்பித்தன. கடல் கொந்தளிப்பு ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சியில்

கடும்காற்றுடன் கூடிய மழை பெய்த போதும் பெரியளவில் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும் ஒருசில இடங்களில் பயன்தரும் மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

வடமராட்சியில்

வடமராட்சிப் பிரதேசத்தில் 'மகாசென்'னால் பெருமளவில் இலத்திரனியல் பொருள்கள் சேதமடைந்தன.

பருத்தித்துறை துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஏழு இயந்திர வள்ளங்கள் அலை வேகமாக அடித்ததால் சேதமடைந்தன. வல்வெட்டித்துறைக் கடலிலும் சில வள்ளங்கள் சேதமடைந்தன. வடமராட்சி கிழக்கு கடலில் அலைகள் மேல் எழுந்து அடித்ததால் மீனவர்கள் அச்சமடைந்து காணப்பட்டனர்.

இது குறித்த வடமராட்சிப் பிரதேசத்தை நிர்வகிக்கும் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன், கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ ஆகியோருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது இடிமுழக்கம், மின்னல், காற்று, மழையினால் பெரியளவில் தாக்கங்கள் ஏதும் ஏற்படவில்லை என்று கூறினர்.

(ம-7-8-9-17-86-ரி-122-253)

திருநெல்வேலி

கொக்குவில் முதலி கோவில் வீதி

கஸ்தூரியார் வீதி

நல்லூரில் குறுக்கு வீதி ஒன்றில் வெள்ளம்

மருதனார்மடம் சந்தியில் வியாபாரம் பாதிப்பு

மல்லாகம் கோணப்புலம் நலன்புரி முகாம்

இளவாலை வசந்தபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையர் தின பேரணியில் துப்பாக்கிதாரிகள் தாக்குதல்

சிறுவர்கள் உட்பட 19 பேர் காயம்



நியூயோர்க், மே 14

அமெரிக்காவின் நியூ ஒர்லீன்ஸ் மாகாணத்தில் அன்னையர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேரணியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 19 பேர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்களில் சிறுவர்களும் அடங்குகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

''மூன்று துப்பாக்கிதாரிகள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கும் தீவிரவாத அமைப்புகளுக்கும் தொடர்பில்லை என்றே நம்புகின்றோம். முதற்கட்ட விசாரணைகள் நடைபெறுகின்றன'' என்று தெரிவித்தார் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் ரெமி பிராடன்.

300க்கும் மேற்பட்டவர்கள் அந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந்தனர். வாத்திய இசைக்குழுக்களும் பங்கேற்றிருந்தன. பேரணியில் கலந்து கொண்டவர்கள் நெருக்கமாகச் செல்லாததால் உயிரிழப்புகள் ஏற்படுவது தடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

''நாங்கள் பேரணியாக சென்று கொண்டிருந்தோம். திடீரென அங்கு வந்த மூவர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கிகளை வெளியே எடுத்தார்கள். நான் நடக்கப்போகும் விபரீதத்தை உணர்ந்து கொண்டு அங்கிருந்து தப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன்'' என்று தெரிவித்தார் பேரணியில் கலந்துகொண்ட பெண் ஒருவர்.

''இது ஒரு திட்டமிடப்படாது அவசர கதியில் செய்யப்பட்ட ஒரு செயல். இதை பயங்கரவாத அமைப்புகள் ஏதாவது திட்டமிட்டுச் செய்திருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

இதுகுறித்த விசாரணைகள் துரிதமாக நடந்து வருகின்றன. அந்தப் பகுதி முழுவதும் பொலிஸார் தடைகளை ஏற்படுத்தித் தேடுதல் மேற்கொண்டு வருகின்றனர். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற பகுதியில் 10க்கும் மேற்பட்ட வெற்றுக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.'' என்று மேலும் குறிப்பிட்டார் ரெமி பிராடன்.

காயமடைந்தவர்கள் தற்போது ஆபத்தான நிலையைத் தாண்டி விட்டனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் காயமடைந்தவர்கள் தொடர்ந்து தீவிர மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் கூறப்பட்டது. (ற)

> ''இது ஒரு திட்டமிடப்படாது அவசர கதியில் செய்யப்பட்ட ஒரு செயல். இதை பயங்கரவாத அமைப்புகள் ஏதாவது திட்டமிட்டுச் செய்திருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

காஷ்மீர் குறித்து பேச்சு நடத்தலாம்

நவாஷ் ஷெரீப் தெரிவிப்பு



இஸ்லாமாபாத், மே 14

''காஷ்மீர் பிரச்சினை குறித்து இந்தியாவுடன் மீண்டும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படும். இந்தப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு காண்பதற்குரிய முயற்சிகள் விரைந்து மேற்கொள்ளப்படும்,''- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாகிஸ்தானின் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நவாஷ் ஷெரீப்.

பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றியை அடுத்து செய்தியாளர்களைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''அயல் நாடுகளுடனான உறவுகளை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். காஷ்மீர் விவகாரத்தில் சுமூகமான தீர்வு காண்பதற்காக இந்தியாவுடன் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும். பாகிஸ்தான் மண்ணில் தீவிரவாதிகள் செயற்படுவதற்கு அனுமதிக்கமாட்டோம். அதற்கான நடவடிக்கைகளை இனிவரும் காலங்களில் பாகிஸ்தான் அரசு மேற்கொள்ளும்'' என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நவாஷ் ஷெரீப்பின் இந்தக் கருத்துக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளார் காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா. ''இருநாடுகளும் கைகோர்த்தே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். அவ்வாறான செயற்பாடுகளுக்கு நாம் வரவேற்புத் தெரிவிக்கின்றோம். முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மேற்கொண்ட வழிமுறைகளைப் பின்பற்றி பாகிஸ்தானுடன் பேச்சுகளை நடத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்க வேண்டும்,'' என்றார் உமர் அப்துல்லா. (ற)

> 1990 ஆம் ஆண்டு பதவியில் இருந்த நவாஷ் ஷெரீப், அப்போது இராணுவத் தளபதியாக இருந்த பர்வேஷ் முஷாரப்பால் ஆட்சி கவிழ்க்கப்பட்டு சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்தப்பட்டார். தற்போது 14 ஆண்டுகளின் பின்னர் தனது 63 ஆவது வயதில் மீண்டும் பாகிஸ்தான் பிரதமராகிறார் ஷெரீப்.

தொழிலாளர் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை

டாக்கா, மே 14

பங்களாதேஷில் ஆடைத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு ஆடைத் கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய சுமார் மூன்று மில்லியன் ஆடைத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் டாக்காவிலுள்ள கைத்தொழில் தொழிற்சாலையொன்று இடிந்து வீழ்ந்ததில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். அதையடுத்து அரசு மீதான அழுத்தங்கள் அதிகரித்தன. தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் அனர்த்தங்களைச் சுட்டிக்காட்டி, பணியாளர்களின் வசதிகளை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல்வேறு தரப்புகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையிலேயே தொழிலாளர்களின் சம்பளங்களை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று பங்களாதேஷ் ஆடைத் கைத்தொழில் அமைச்சர் அப்துல் லத்திப் சித்திக் அறிவித்துள்ளார். (ற)

இருவாரங்களுக்கு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இடம்பெற்ற கட்டட விபத்தில், மீட்புப் பணி கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இந்தநிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1124 ஆக அதிகரித்துள்ளது.

வீடு ஒன்றில் இருந்து இரு சடலங்கள் மீட்பு

நியூயோர்க், மே 14

அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தில் இருந்த வீடொன்றில் இருந்து இரு உடல்களையும் கைப்பற்றியுள்ள பொலிஸார் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த 3 சிறுவர்களை 37 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

கடந்தவாரம் வீடு ஒன்றில் இருந்து 10 ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்ட மூன்று பெண்கள் மீட்டப்பட்ட சம்பவத்தால் ஏற்பட்ட பரபரப்பு அடங்கு முன்னர், அதேபாணியில் இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் மக்களை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

குறித்த வீட்டில் இருந்து கைப்பற்றட்ட உடல்களில் ஒன்று 44 வயதுடைய கெர்மெலிரா ஸ்டீபன் என்ற பெண்ணுடையது என்றும் மற்றையது அவருடைய 13 வயதுடைய மகனுடையது என்றும் பொலிஸார் கூறுகின் றனர்.

''கெர்மெலிரா ஸ்டீபனும் கடந்த ஒருவாரத்துக்கு மேலாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று அவருடைய உறவினர் ஒருவர் எமக்கு முறையிட்டிருந்தார். அதையடுத்து நாம் மேற்கொண்ட விசாரணைகளில் ஸ்டீபனின் குழந்தைகள் கடந்த 12 நாள்களாக பாடசாலைக்கு வரவில்லை என்று தெரியவந்தது. அதையடுத்தே உஷாரடைந்தோம்'' என்று தெரிவித்தார் அந்தப் பகுதி பொலிஸ் அதிகாரியான ரல்ப் ரிவரா.

கெர்மிலா ஸ்டீபன் தனது 4 குழந்தைகளுடன் குறித்த வீட்டில் ரொறனே மர்பி என்பவருடன் சில மாதங்களாக வாழ்ந்து வந்துள்ளார் என்று தெரியவந்தது. இதுகுறித்து மெர்பியிடம் விசாரணை மேற்கொள்ள பொலிஸார் சென்றபோது,

> ''வீட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 பிள்ளைகள் பாதுகாப்பாக காப்பாற்றப்பட்டனர்''

வீட்டில் இருந்து துர்நாற்றம் ஏற்பட்டதை அவர்கள் உணர்ந்தனர். மெர்பியின் வீட்டுக்குள் நுழைந்தபோது அந்த வீட்டின் மேற்பகுதி யில் இருந்த மெர்பி தன்னிடம் வெடிபொருள்களும், துப்பாக்கியும் இருக்கின்றன என்றும் ஸ்டீபனின் மூன்று குழந்தைகள் தன்னுடன் இருக்கின்றனர் என்றும் பொலிஸாரை உள்ளே வரவேண்டாம் என்றும் அச்சுறுத்தினான். அதையடுத்து வீட்டை விட்டு வெளியேறிய பொலிஸார் மெர்பியுடன் தொடர்ப்பைப் பேணிய வண்ணம் இருந் தனர்.

''வீட்டின் மேல்தளத்தில் உள்ள அறை ஒன்றில் மெர்பியும், ஸ்டீபனின் 18, 16 வயதுடைய இரு மகள்களும், 4 வயதுடைய மகனும் இருந்தனர். அதனால் எம்மால் ஒன்றும் செய்யமுடியாதிருந்தது. அத்துடன் துர்நாற்றமும் வீசியது. அதனால் நாம் எச்சரிக்கையாகச் செயற்பட்டோம்'' என்றார் ரல்ப் ரிவரா.

மெர்பியுடன் பேச்சுகளை நடத்தி அவன் பிடியில் இருந்தவர்களை விடுவிக்கும் முயற்சியில் 37 மணி நேரமாக ஈடுபட்டிருந்தனர் பொலிஸார். மெர்பியுடன் பேச்சு நடத்தி அவனை வழிக்குக் கொண்டுவருவது முடியாத நிலையில் அதிரடி முயற்சியில் இறங்கியது பொலிஸ். மெர்பியின் வீட்டுக்குள் அதிரடியாக நுழைந்த பொலிஸார் மெர்பி மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மெர்பி பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான். அவனால் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஸ்டீபனின் குழந்தைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

''மெர்பி இருந்த அறையில் இருந்து ஸ்டீபனின் உடல் மீட்கப்பட்டது. மற்றொரு அறையில் இருந்து அவருடைய 16 வயது மகனின் உடல் மீட்கப்பட்டது. இவர்கள் இருவரும் சுமார் இருவாரங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் ஊகம் தெரிவித்தனர். மெர்பி யால் பயணக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த சமயத்தில் ஸ்டீபனின் குழந்தைகள் அடித்துத் துன்புறுத்தப்பட்டும், பாலியல் பீதியாக துன்புறுத்தப்பட்டும் உள்ளனர். கொலை நடைபெற்றதற்காக காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்பட வில்லை. விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன'' என்று தெரிவிக்கின்றனர் பொலிஸார். (ற)

கார்க் குண்டுத் தாக்குதல் துருக்கியில் 43 பேர் சாவு

அங்காரா, மே 14

துருக்கியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 43 பேர் உயிரிழந்துள்ளனர். துருக்கி - சிரியா எல்லை நகரமான ரெய்யானாலியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரண்டு கார்க் குண்டுகள்மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமை முதற்கட்ட விசாரணைகளில் இதுகுறித்து தெரியவந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். ரெய்யானாலியின் நகர மண்டபம் மற்றும் தபால் நிலையத்தை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள துருக்கி துணைப் பிரதமர் பெசில் அட்டாலி,

''இந்தத் தாக்குதலை சிரிய புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். சிரியப் புரட்சியாளர்களுக்கு துருக்கி அளித்து வரும் ஆதரவை அடுத்தே பொதுமக்கள் மீதான இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன,''- என்று தெரிவித்துள்ளார். (ற)

நண்பன் இந்தியாதான்

வோஷிங்டன், மே 14

அமெரிக்காவின் சிறந்த ஆசிய நண்பனாகத் திகழ்வது இந்தியாதான் என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

போஸ்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பாதுகாப்பு ஆய்வரங்கு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார் அமெரிக்க பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் றொபேர்ட் பிளேக்.

''21ஆம் நூற்றாண்டில் ஆசியாவில் குறிப்பிடத்தக்க நட்பு நாடாக இந்தியா விளங்குகின்றது. ஆசியாவில் சமனிலை நிலவ வேண்டும் என் பதே எமது விருப்பம். அது குறித்து இந்தியாவுடன் கலந்தாலோசித்து வருகின்றோம். ஆசியாவில் இந்தியாவை விட வேறு எந்த நாடும் அமெரிக்கா வின் முக்கிய நட்பு நாடாக விளங்கியதில்லை. என்று அவர் அங்கு உரையாற்றும் போது தெரிவித் தார்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வயது சிறுவனை தத்தெடுத்தது காங்.

ராகுலுக்கு இலவசமாக செய்தித்தாள் கொடுத்ததால்

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுலுக்கு, இலவசமாக செய்தித்தாள் கொடுத்த, 10 வயது சிறுவனை, மத்திய பிரதேச மாநில காங்கிரஸ் தத்தெடுத்துள்ளது. அவனது தந்தைக்கும், காங்கிரஸ், தலைவர் ஒருவரின் கல்லூரியில் வேலை கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய பிரதேச காங்கிரஸ் சார்பில், நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்க அந்தக்கட்சியின் துணைத் தலைவர் ராகுல், கடந்த மாதம் 25 ஆம் திகதி போபால் சென்றிருந்தார். அங்கு நடைபெற்ற நிகழ்வை அடுத்து டில்லி செல்வதற்காக, விமான நிலையத்துக்கு காரில் வந்து கொண்டிருந்தார்.

அவரின் கார் ஓர் இடத்தில் நின்ற போது, செய்தித்தாள் விற்பனையில் ஈடுபட்டிருந்த, ஐந்தாம் வகுப்பில் கற்கும் கவுசல் என்ற சிறுவன், ஒரு செய்தித்தாளை வாங்கிக் கொள்ளுமாறு ராகுலிடம் வேண்டினான்.

அவனிடமிருந்து செய்தித்தாளைப் பெற்றுக் கொண்ட ராகுல் ஆயிரம் ரூபா தாளை கவுசலிடம் வழங்கினார். ஆயிரம் ரூபாவுக்கு தன்னிடம் சில்லறை இல்லை எனக் கூறி, பணத்தை திருப்பிக் கொடுத்த கவுசல், தான் கொடுத்த செய்தித்தாளை இலவசமாக வைத்துக் கொள்ளுமாறு ராகுலிடம் கூறினான். இதனால், மனம் நெகிழ்ந்த ராகுல், அந்தச் சிறுவனுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். அப்போது, எதிர் காலத்தில் தான் மருத்துவராக வர விரும்புவதாக சிறுவன் கூறினான்.

இந்தநிலையில், ராகுலுக்கு இலவசமாக செய்தித்தாள் வழங்கிய கவுசலை மத்திய பிரதேச காங்கிரஸ் தத்தெடுத்துள்ளதாக, அந்த மாநில காங். தலைவர் காந்தி லால் பூரியா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை சிறுவன் கவுசலையும், அவனின் தந்தை துலிசந்த் சாக்கியாவையும் சந்தித்த கர்ந்திலால், சிறுவனை காங்கிரஸ் கட்சி தத்தெடுத்துள்ள விவரத்தை தெரி வித்ததோடு, அவனின் படிப்பு செலவுக்காக, மாதம் ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் கூறினார். அது மட்டுமின்றி கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான, சாஜித் அலி, தனக்குச் சொந்தமான கல்லூரியில், சிறுவனின் தந்தைக்கு பியூன் வேலையும் வழங்கியுள்ளார். (வ)

அணு நிலையத்துக்கு எதிராக

மீனவர்கள் இன்று வேலைநிறுத்தம்

நெல்லை, மே.14

கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மீனவர்களின் ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டம் இன்று நடை பெறும் என்று அணு உலைக்கு எதிரான இயக்க ஒருங்கிணைப்பாளர் சு.ப. உதய குமார் அறிவித்துள்ளார்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தை இயக்க தடை விதிக்க வேண்டும் என்று நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்ட மீனவர்களும், பொது மக்களும் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மேலும், கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு தடை விதிக்கக் கோரி பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் கூடங் குளம் அணு மின் நிலையம் இயங்கத் தடை இல்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என அணு உலைக்கு எதிரான இயக்க ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் அறிவித்தார்.

இந்தநிலையில் கூடங் குளம் அணு மின் நிலைய செயற் பாட்டுக்குத் தடை விதிக்கக் கோரி போராட்டக் குழுவினர் அடுத்த கட்டமாக இன்று செவ் வாய்க்கிழமை ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு திரட்டுவதற்காக உதயகுமார் கடல் வழியாக 4 படகுகளில் தனது ஆதரவாளர்களுடன் உவரி பகுதிக்கு வந்தார். அங்கு வேளாங்கண்ணி மாதா ஆலயம் முன்பு நடந்த ஆலோசனைகூட்டத்தில்கலந்துகொண்டு அவர் பேசியதாவது:-

குமரியில் இருந்து தூத்துக்குடி வரை உள்ள கடற்கரை கிராமங்களில் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் இன்று நடைபெறும்.

முற்பகல் 11 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும். இதையும் மீறி கூடங்குளம் அணு மின் நிலையத்தை இயக்குவோம் என்று அரசு அறி வித்தால் அடுத்த கட்டம் குறித்து ஆலோசனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இந்த அறிவிப்பால் இடிந்த கரை அருகே உள்ள தோமஸ் மண்டபம் விலக்கில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் குவிக்கப் பட்டுள்ளனர். இதனால் இடிந்த கரை மற்றும் அதன் சுற்றுவட்டார மீனவ கிராமங்களில் மீண்டும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (வ)

இளம் குற்றவாளிக்கான வயதெல்லையைக் குறைக்குக

மத்திய அரசுக்கு நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரை

டில்லி, மே.14

அதிகரித்து வரும் பாலி யல் குற்றங்களைத் தடுக்க, இளம் குற்றவாளிகளுக்கான வயது எல்லையை 18 இலிருந்து 16ஆக குறைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு நாடாளுமன்ற நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

நிலைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயது எல்லையைக் குறைப்பதற்கான காரணத் தையும் நிலைக்குழு விளக் கியுள்ளது. 2010ஆம் ஆண் டில் 22 ஆயிரத்து 740 குற் றங்களை இளம் குற்ற வாளிகள் செய் துள்ள தாகவும், 2011ஆம் ஆண்டில் மேலும் 10.57 அதிகரித்துள்ளதாகவும் விளக்க மளித்துள்ளது. (வ)

கர்நாடக முதல்வராக பதவியேற்றார் சித்தராமையா

பெங்களூர், மே.14

பெங்களூரில் நடைபெற்ற மிகப் பிரம்மாண்ட விழாவில் கர்நாடகத்தின் புதிய முதல் வராக சித்தரா மையா நேற்று பதவியேற்றார்.

பெங்களூர் கஸ்தூர்பா சாலையில் அமைந்துள்ள கண்டீரவா விளையாட்டுத் திடலில் முற்பகல் 11.35 மணிக்கு நடைபெற்ற விழாவில் ஆளுநர் எச்.ஆர். பரத்வாஜ், சித்தராமை யாவுக்கு பதவி பிரமாணமும், ரகசியக் காப்பு பிரமாணமும் செய்து வைத்தார். நேற்று சித்தராமையா மட்டும் முதல்வராக பொறுப்பேற்றார். அவருடன் வேறு எந்த அமைச்சர்களும் பதவியேற்க வில்லை. (வ)

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள புகழ் பெற்ற அஜ்மீர் தர்காவுக்கு புதுடில்லியில் நடை பெற்ற நிகழ்வில், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி புனித போர்வையை காணிக்கையாக வழங்கினார். நிகழ்வில் சோனியா காந்தியுடன் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மோஹினா கித்வாய், தஜ்தார் பாபர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் அலுவலக வழிகாட்டுதலில்

நிலக்கரிச் சுரங்க ஊழலில் சி.பி.ஐ. அறிக்கை திருத்தம்

அருண் ஜேட்லி குற்றச்சாட்டு

நிலக்கரிச் சுரங்க ஒதுக்கீடு முறைகேடு தொடர்பான சி.பி.ஐ. அறிக்கை, பிரதமர் அலுவலகத்தில் உள்ள சிலரின் வழிகாட்டுதலின்படிதான் திருத்தப்பட்டுள்ளது என்று பாரதீய ஜனதா கட்சி மூத்த தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான அருண் ஜேட்லி குற்றம்சாட்டியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அருண் ஜேட்லி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

சி.பி.ஐ. அறிக்கை திருத்தப் பட்ட விவகாரத்தில் உச்ச நீதி மன்றத்தின் கண்டனத்தை அடுத்து, முக்கிய விடயத்தை மூடி மறைக்கும் விதமாக அஸ்வனி குமார் ராஜினாமா செய்ய வைக்கப்பட்டுள்ளார். இந்த விவகாரம் அனைத்தும் பிரதமர் அலுவலகத்தில் உள்ள

யாரோ ஒருவரின் வழிகாட்டுதலின்படிதான் நிகழ்ந்துள்ளன.

அதிகாரிகளை பொறுத்தவரை, அவர்களாகவே இதுபோன்ற செயல்களில் ஈடுபடமாட்டார்கள். சிலரின் அறிவுறுத்தலின் படியே அவர்கள் செயற்பட்டுள்ளனர்-என்றார். (வ)

நக்சல் தாக்குதலில் 4 பொலிஸார் சாவு

சதீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்டுகள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் 4 பொலிஸார் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

பஸ்தர் மாவட்டத்தில் உள்ள மரெங்கா கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் 3 பொலிஸ் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

அங்கிருந்த தூர்தர்ஷனின் ஒளிபரப்பு கோபுரத்தை நக்சலைட்டுகள் தகர்க்க முயன்ற போது இந்தச்சம்பவம் நிகழ்ந்தது.

இந்தத் தாக்குதலை நக்சலைட்டுகள்தான் நடத்தினரா என்று உறுதியாகத் தெரியவில்லை என்று பொலிஸ் அதிகாரி ஜெனரல் ராம்நிவாஸ் தெரிவித்தார்.

தாக்குதலில் காயமடைந்த காவலர் ராய்ப்பூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தப்பியோடிய நக்சலைட்டுகளைத் தேடும் பணியில் போது காப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சுக்மா மாவட்டத்தில் உள்ள 9 மற்றும் 13 ஆவது பட்டாலியன் படைப் பிரிவு முகாம்களின் மீது நக்சலைட்டுகள் நடத்திய தாக்குதலில் சதீஸ்கர் இராணுவத்தைச் சேர்ந்த வீரர் ஒருவர் உயிரிழந்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில்

அபிவிருத்திக் குழுத் தலைவராக தமிழர் ஒருவரை நியமியுங்கள்

மட்டக்களப்பு,மே 14
பெரும்பான்மையாகத் தமிழர் வாழும் மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்கு அபிவிருத்திக் குழுத் தலைவராக தமிழர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைப்பற்று - ஆரையம்பதி பிரதேசசெயலகம், பிரதேச சபை பிரிவுகளில் பெரும்பான்மையாக தமிழர்களே வசித்து வருகின்றனர்.
இந்தப் பிரதேசம் 2081 முஸ்லிம் குடும்பங்களையும், 8150 தமிழ் குடும்பங்களையும் உள்ளடக்கியுள்ளது.
இந்தப் பிரதேச செயலகப் பிரிவில் அதிகாரமிக்க அரசியல் வாதிகளால், பல முரண்பாடுகள் அரசியல் இலாபம் கருதி திட்டமிட்டவாறு தோற்றுவிக்கப்படுகின்றன.
அதிகாரமுள்ள அரசியல்வாதிகளால் அரசினதும், நிதி நிறுவனங்களினதும் நிதியை ஒதுக்கீடு செய்யும்போது தமிழ்

சமூகம் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.
சில மாதங்களாக ஆரையம்பதி பிரதேச செயலகம், பிரதேசசபை ஆகிய இரு பகுதிகளிலும் நடந்து வருகின்ற முரண்பாடுகள் காரணமாக அங்கு தமிழ் சமூகத்துக்கு சேவையாற்றிய நல்லதொரு அதிகாரி முறைகேடான முறையில் இடமாற்ற முயற்சிக்கு உட்பட்டிருக்கின்றார்.
கடந்த காலத்தில் திரைமறைவில் தமிழ் சமூகத்துக்குப் பல விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்தேறியுள்ளன. இனி மேலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கு, இந்த மாவட்டத்தில் அந்தந்த சமூகத்துக்கு அந்தந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் அபிவிருத்தித் தலைவர்களாக இருப்பதுபோல், பெரும்பான்மையாக தமிழர்கள் வாழ்கின்ற மண்முனைப்பற்று பிரதேசத்துக்கென தமிழர் ஒருவரை அபிவிருத்திக் குழு தலைவராக நியமித்து முரண்பாடு தோன்றாமல் வாழ்வதற்கு அரசு வழிவகுக்க வேண்டும்.-என்று, தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

முதியவர்களுக்கு வழங்கும் கொடுப்பனவில் இழுத்தடிப்பு

அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் அசமந்தம்

அட்டாளைச்சேனை,மே 14
அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை ஆகிய தபாலகங்களில் முதியவர்களுக்கான 1000 ரூபா கொடுப்பனவு குறிப்பிட்ட காலத்துக்குள் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாகிறது என்று பாதிக்கப்பட்ட முதியவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
இந்தத் தாமதத்தால் கொடுப்பனவை எதிர்பார்த்து காத்திருக்கின்ற வயது முதிர்ந்தவர்கள் தபால் அலுவலகங்களுக்கு நாளாந்தம் சிரமத்துக்கு மத்தியில் வந்து சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றனர்.
70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற 1000 ரூபா சகல பிரதேச செயலகங்களாலும் தயாரிக்கப்பட்டு தபால் அலுவலகங்கள் ஊடாக கொடுக்கப்பட்டு வருகிறன.
இந்தக் கொடுப்பனவு மாதாந்தம் 5 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை வழங்கப்பட வேண்டும். ஆனால் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை ஆகிய தபாலகங்களில் இந்தக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாமல் உள்ளது. அதற்குரிய காரணம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தினால் உரிய காலத்துக்குள் இக்கொடுப்பனவு உறுதிச்சீட்டு தபால் அலுவலகங்களுக்கு வழங்கப்படாமையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த விடயத்தில் உயர் அதிகாரிகள் கவனமெடுத்து உரிய காலத்துக்குள் இந்தக் கொடுப்பனவை வழங்க உதவுமாறு பாதிக்கப்பட்ட முதியவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் புதிய கட்டடம் ஒன்றுக்கு அடிக்கல் நடும் விழாவில், மட்டக்களப்பு அம்பாறை மறைமாவட்ட ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை, சிரேஷ்ட அமைச்சர் தயாரத்ன, கல்முனை தமிழ்ப் பிரிவின் பிரதேச செயலர் கே.லவநாதன் உட்பட பலர் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துவரப்படுகின்றனர். (ச-31)

கிழக்கில் இடமாற்ற சர்ச்சை; இன்று சுகவீனப் போராட்டம்

இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தீர்மானம்

திருகோணமலை,மே 14
ஒரு நாள் சுகயீன லீவுப் போராட்டத்தை மேற்கொள்ள ஆசிரியர் சங்கங்கள் உத்தேசித்துள்ளன என்று இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் எம். ஆனஸ் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-
ஆசிரியர் இடமாற்றத்தை நிறுத்துமாறு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு விடுத்த கோரிக்கைக்கான காலக்கெடு, கடந்த வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்துள்ளது.
இதுவரை, எந்தச் செய்தியோ, பதிலோ கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளரிடமிருந்தோ, மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமிருந்தோ, ஆளுநரிடமிருந்தோ கிடைக்கவில்லை.
வழங்கப்பட்ட காலத்துக்குள் கோரிக்கை நிறைவேற்றப்படாததனால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், ஜனநாயக ஆசிரியர் சங்கம் ஆகிய மூன்றும் இணைந்து தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.
இன்று செவ்வாய்க்கிழமை ஒருநாள் சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுப உத்தேசிக்கப்பட்டுள்ளது.-என்றார்.(ச)

வறுமையால் பாதிக்கப்பட்டோரின் விவரங்களை திரட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு,மே 14
மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமையால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைத் திரட்டுவதற்காக அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டச் செயலர் பி.எஸ்.எம்.சார்ஸ் தெரிவித்தார்.
தேற்றாத்தீவு உதயம் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலாசார விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து பல வேறுபட்ட இடப்பெயர்வுகளையும் இன்னல்களையும் சந்தித்திருந்தனர்.
இந்த மாவட்டத்தில் தற்போது அபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 வருடங்களில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு இணங்க ஐந்தாண்டுத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதில் 40 வீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்குரிய வேலைப்பாடுகள் நடை பெற்று வருகின்றன.
அதற்குரிய நிதித் தேவைகள் குறித்து ஜரோப்பிய ஒன்றியம், மற்றும் ஏனைய அமைப்புக்களிடம் கலந்துரையாடல்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.
5 வருட நிறைவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்தின் நோக்கம் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் கட்ட தலைமைத்துவ பயிற்சி

திருகோணமலை,மே 14
கிழக்கு மாகாண பட்டதாரிப் பயிலுநர்களுக்கான மூன்றாம் கட்ட தலைமைத்துவப் பயிற்சி தற்போது இடம்பெற்று வருகின்றது.
இந்தப் பயிற்சியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களான மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 326 பேர் கலந்து கொண்டனர்.
கடந்த 9 ஆம் திகதி பொலநறுவை மாவட்ட மின்னேரியா கடற்படை பயிற்சி முகாமில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி நெறியில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொண்டனர்.
இரண்டு வாரங்கள் இடம் பெறும் இந்தப் பயிற்சி, மின்னேரியா கடற்படைப் பயிற்சி நிலையத்தின் பிரிகேடியர் வணசிங்க தலைமையில் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

வடிகான் புனரமைக்க ரூ. 3.5 மில்லி. ஒதுக்கீடு

திருகோணமலை,மே 14
பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே குச்சவெளி பிரதேச விவசாய வடிகான் புனரமைப்புக்காக 3.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.
கடந்த காலப் போரால் குச்சவெளிப் பிரதேசத்தின் பல்லாயிரக்கணக்கான வயல் காணிகளுக்கு சீரான விவசாய வடிகான் இன்மையால் செய்கைகள் இடம்பெறாமல் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

புத்தாண்டு சேமிப்பில் சாய்ந்தமருது சமூர்த்தி முதலிடம்

கல்முனை,மே 14
'திவிநெகும' புத்தாண்டு சேமிப்பு வாரத்தில் ஆகக் கூடுதலான சேமிப்புக்களை சாய்ந்தமருது சமூர்த்தி வங்கி சேமித்து அம்பாறை மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற்றுள்ளது.
தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் இலங்கை சமூர்த்தி அதிகார சபையும் இணைந்து 'திவிநெகும' புத்தாண்டு சேமிப்பு வாரத்தினை நாடளாவிய ரீதியிலுள்ள சமூர்த்தி வங்கிகளில் கடந்த ஏப்ரல்மாதம் 14ஆம்திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தியது.
அதற்கமைவாக அம்பாறை மாவட்டத்தின் 43 சமூர்த்தி வங்கிகளில் சாய்ந்தமருது சமூர்த்தி வங்கி அங்கீகரிக்கப்பட்ட வைப்புக்களின் மூலம் 2,176,335.00 ரூபா நிதியினை சேமிப்பாக சேமித்து முதலாம் இடத்தை பெற்றுள்ளதுடன், முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களை அம்பாறை வெருகடகொட சமூர்த்தி வங்கியும், நாவிதன்வெளி சமூர்த்தி வங்கியும் பெற்றுள்ளன. (ச)

பளை வைத்தியசாலையில் விரைவில் சேவைகள்

பளை,மே 14

சுகாதார அமைச்சால் பளையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மாவட்ட வைத்தியசாலை விரைவில் பிரதேச மக்களுக்கு சேவையை வழங்கவுள்ளது.

பளை மாவட்ட வைத்திய சாலைக்கென கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் காணப்படுகின்றன.

விரைவில் கட்டடம் கையளிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிர்வாக அலகு, வெளிநோயாளர் பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் விடுதி, பிரசவ விடுதி ஆகியவற்றை உள்ளடக்கிய தனிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்குரிய உபகரணங்கள், தளபாடங்கள் போன்றவை வந்ததும் வைத்திய சாலை இயங்கத் தொடங்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து ஐந்து வருடங்களாகியும் தனியார் கட்டட மொன்றில் வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ம-9)

எப்போது சிகிச்சை?

தென்மராட்சி,மே 14

கொடிகாமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆயுள்வேத மத்திய மருந்தகம் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவது எப்போது என்று பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

கொடிகாமம் ஏ-9 வீதியின் அருகே சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கு அருகில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத மத்திய மருந்தகத்துக்கான கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கிராமப்புற மக்களின் நலன்கருதி பிரதேச சபையால் ஆயுள்வேத மருந்தகங்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ம-9)

நீரிழிவு நோய்க்கு சிகிச்சை பெற்றனர் 2012 இல் 73 ஆயிரத்து 374 பேர்

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில்

குருநகர், மே 13

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்திய சாலைகளில் 2012 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நீரிழிவு நோய்க்கு சுமார் 73 ஆயிரத்து 374 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்கள் இந்தத் தகவல்களைத் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 19 ஆயிரத்து 369 பேரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 9 ஆயிரத்து 128 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 7 ஆயிரத்து 781 பேரும் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஆயிரத்து 745 பேரும்-

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் 5 ஆயிரத்து 776 பேரும் மாவட்ட வைத்தியசாலை நெடுந்தீவில் 546 பேரும் அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில் ஆயிரத்து 99 பேரும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் 2 ஆயிரத்து 664 பேரும்-

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 4 ஆயிரத்து 422 பேரும் காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் ஆயிரத்து 941 பேரும் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 5 ஆயிரத்து 404 பேரும் பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 370 பேரும் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் ஆயிரத்து 501 பேரும் வேலணை பிரதேச வைத்தியசாலையில் 191 பேரும்-

அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் ஆயிரத்து 191 பேரும் குருநகர் பிரதேச வைத்தியசாலையில் 565 பேரும் கரவெட்டி பிரதேச வைத்தியசாலையில் 2 ஆயிரத்து 562 பேரும் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலையில் 684 பேரும் கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் ஆயிரத்து 63 பேரும், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 651 பேரும் வரணி பிரதேச வைத்தியசாலையில் 440 பேரும் இளவாலை பிரதேச வைத்தியசாலையில் 426 பேரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு சுன்னாகத்தில் 932 பேரும் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு ஏழாலையில் 517 பேரும்-

ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு இணுவிலில் 493 பேரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு கைதடியில் 161 பேரும் ஆரம்ப மருத்துவப் பிரிவு கொக்குவிலில் 485 பேரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு பருத்தித்துறையில் 432 பேரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு புன்னாலைக்கட்டுவனில் 461 பேரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு புத்தூரில் 272 பேரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு பிரிவு தொல்புரத்தில் 60 பேரும் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு வட்டுக்கோட்டையில் 42 பேரும் இவ்வாறு நீரிழிவு நோய்க்கு கடந்த வருடம் சிகிச்சை பெற்றுள்ளார்கள். (ம-51)

யாழ். நகரிலுள்ள சில வீதியோரங்களில் புற்கள், செடிகள்

குருநகர்,மே.14

யாழ்.நகரிலுள்ள சில வீதிகளின் ஓரங்களில் புற்கள், செடிகள் வளர்ந்து பற்றையாகக் காட்சியளிக்கின்றன. இவைகளை வெட்டித் துப்புரவு செய்வதில் இந்த வீதிகளின் அருகில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களோ அல்லது யாழ்.மாநகர சபையோ எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

யாழ். நகரில் சப்பல்வீதி, 5ஆம் குறுக்குத் தெரு, மார்ட்டீன் வீதியோரங்களிலும் இவ்வாறு புற்கள் செடிகள் வளந்து காணப்படுகின்றன. (ஒ-51)

நல்லெண்ணெய் தற்போது கூடு



யாழ்ப்பாணம்,மே.14

எள்ளின் விலை உயர்வடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் நல்லெண்ணெய் விலை உயர்வடைந்துள்ளது. யாழ்.நகரிலுள்ள வியாபார நிலையங்களில் 750 மில்லிலீற்றர் நல்லெண்ணெய் போத்தல் ஒன்று 600 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (ஒ-51)

கடற்கரைகளில் கண்டல் மரங்கள்

யாழ்ப்பாணம், மே 14

தீவுப் பகுதியில் கடற்கரையோரங்களில் கண்டல் மரங்களையும், சவுக்கு மரங்களையும் நட்டு உலர்க் காற்றைத் தடுக்க விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

பரீட்சார்த்த முயற்சியாக மேற் கொள்ளப்படும் இந்த நடவடிக்கை மூலம் தீவுப் பகுதியில் பயிர்ச் செய்கைகளில் பயன்கள் ஏற் படவாய்ப்புக்கள் இருக்கலாம் எனவும் கூறப்பட்டது. (ம-7)

அச்சுவேலியில் சொந்தமாக

தபாலகக் கட்டம் அமைக்க கையளித்த காணி பற்றைக்காடாக

அச்சுவேலி, மே 14

அச்சுவேலி தபால் நிலையத்துக்குச் சொந்தமாகக் கொள்வனவு செய்து தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்ட காணி பற்றைக் காடாக புதர் மண்டிய நிலையில் காணப்படுகின்றது.

தபால் நிலையத்துக்கு உரிய முறையில் புதியகட்டம்அமைக்க நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி தபால் நிலையத்துக்கு நிரந்தரமான சொந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கும் இடம் இல்லை என்று தபால் திணைக்களம் தெரிவித்தது.

இதனை அடுத்து அச்சுவேலி தபால் நிலைய அபிருத்திச் சபையால் பொதுமக்களின் நிதி உதவியுடன் ஐந்து பரப்புக் காணி பல லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு அஞ்சல் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

அச்சுவேலி-சங்கானை வீதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் உள்ள காணி பல வருடங்களாக எந்த விதமான பராமரிப்போ உத்தியோக பூர்வமான அறிவித்தல் விளம்பரமோ இன்றி பற்றைக் காடாக புதர் மண்டிய நிலையில் காணப்படுகின்றது.

காணிக்கான எல்லைகள் கூட உரியமுறையில் நிர்மாணிக்கப்படாமல் இருப்பதால் தனியார் அத்து மீறி பிரயோகிக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி தபால் நிலையம் தனியார் கட்டடத்தில் செயற்படுகின்றது. அச்சுவேலியில் தபால் நிலையத்துக்குச் சொந்தமாக கட்டடம் அமைப்பதற்கு பொது மக்கள் நிதியில் காணி கொள்வனவு செய்து வழங்கியுள்ள நிலையில் கட்டடம் நிர்மாணிக்காமல் காலம் கடத்தப்படுவது அதிகாரிகளின் அக்கறையீனம் என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-11)

காலாவதியான பொருள்களை விற்ற 389 வர்த்தகர்கள் நீதிமன்றங்களில்

யாழ்ப்பாணம்,மே 14

யாழ்.மாவட்டத்தில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காக கடந்த வருடம் 389 வர்த்தகர்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து குற்றப் பணமாக 18 இலட்சத்து 51 ஆயிரம் ரூபா அறவிடப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகாரசபை அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருப்பவர்களுக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் 5 நீதிமன்றங்களிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, தண்டம் விதிக்கப்படுகிறது.

எனினும்காலாவதியான பொருள்களை ஏனைய வர்த்தகர்கள் தொடர்ந்தும் விற்பனைக்கு வைத்துள்ளனர். அதனால் திடீர் பரிசோதனைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

கடந்த ஜனவரியிலும் 26 வர்த்தகர்களுக்கு 82 ஆயிரம் ரூபாவும், பெப்ரவரியில் 66 வர்த்தகர்களுக்கு 2 இலட்சத்து

> குற்றப் பணமாக 18 இலட்சத்து 51 ஆயிரம் ரூபா அறவிடப் பட்டுள்ளது

22 ஆயிரத்து 500 ரூபாவும், மார்ச்சில் 45 வர்த்தகர்களுக்கு எதிராக ஒரு இலட்சத்து 56 ஆயிரமும், ஏப்ரலில் 5 வர்த்தகர்களுக்கு 22 ஆயிரம் ரூபாவும், மே இல் 48 வர்த்தகர்களுக்கு 2 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவும், ஜூனில் 21 வர்த்தகர்களுக்கு எதிராக ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

ஜூலையில் 7 வர்த்தகர்களுக்கு 22 ஆயிரத்து 500 ரூபாவும், ஒகஸ்டில் 15 வர்த்தகர்களுக்கு 62 ஆயிரத்து 500 ரூபாவும், செப்ரெம்பரில் 124 வர்த்தகர்களுக்கு 6 இலட்சத்து 33 ஆயிரத்து 500 ரூபாவும், ஒக்ரோபரில் 13 வர்த்தகர்களுக்கு 2 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாவும், நவம்பரில் 18 வர்த்தகர்களுக்கு 65 ஆயிரத்து 500 ரூபாவும், டிசம்பரில் ஒரு வர்த்தகருக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-4)

மீள்குடியமரும் சிறார்களின் நலன்களில் அக்கறை அவசியம்

உரிய தரப்பினரிடம் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 14

மீளக்குடியமர்ந்து வரும் சிறுவர்களின் கல்வி, போஷாக்கு மற்றும் நலச் சேவைகளில் அரசும், சர்வதேச தொண்டு நிறுவனங்களும் கூடுதல் அக்கறை காட்ட வேண்டும்.

இதற்கான அடிப்படைத் திட்டமிடலை சமூக சேவைகள் அமைச்சும், யாழ். செயலகமும் , சர்வதேச தொண்டு நிறுவனங்களும் செய்ய வேண்டிய காலம் இதுவாகும்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சிமகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி. தென்மேற்கு, வலி. மேற்கு, வலி. வடக்கு ஆகிய பிரதேசங்களில் போருக்குப் பின்னர் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

இவ்வாறான மக்களுடன் சிறுவர்கள், குழந்தைகள், மானவர்கள் எனப் பலரும் மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

இவர்களில் பெற்றோரை இழந்த சிறுவர்கள், கடும் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், அவயவங்களை இழந்த சிறுவர்கள், உளப் பாதிப்புகுள்ளான சிறுவர்கள், வறுமைக் குள்ளானவர்கள் எனப் பல பகுதியினர் உள்ளனர்.

இவர்கள் அடிப்படை வசதிகள் பல இன்றி உள்ளமை அவதானிக்கப்படுகின்றது. இந்த நேரத்தில் தான் உதவும் உள்ளங்கள் முன் வர வேண்டும்.

சிறுவர்கள் விடயத்தில் பொருத்தமான அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு தொண்டு நிறுவனங்கள் உதவுவதற்கு முன்வர வேண்டும்.

இந்த விடயத்தில் ஒருங்கிணைந்த வகையில் சகலரும்

ஒன்றிணைந்து மீளக் குடியமர்ந்த சிறுவர்களின் நலன்களை மையமாகக் கொண்ட திட்டங்களை முன்வைத்துச் செயற்படுத்த வேண்டும்- என்றார். (ம-50)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கோட்டமட்டப் போட்டியால் கற்றல் செயற்பாடுகள் இரத்து

சண்டிலிப்பாய் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கிலதினப் போட்டியால் தரம் 6 முதல் தரம் 11 வரையான வகுப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டன.

ஆங்கிலத் தினப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலேயேநடைபெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

சண்டிலிப்பாய் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப் போட்டிகள் வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கோட்டமட்ட போட்டியை சிறப்புற நடத்தும் நோக்கோடு அன்றைய தினம் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்கள் நடைபெறாது மாணவர்கள் வீட்டுக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர். இரத்தாகிய பாடசாலை நாளை மீண்டும் வைப்பது தொடர்பாக பாடசாலை சமூகத்தால் தெரிவிக்கப்படவில்லை. இதுகுறித்து அந்தப் பகுதி பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மேல திகாரிகள் கவனமெடுத்து போட்டிகளை நடத்தும்போது ஏனைய மாணவர்களின் கல்வியைப் பாதிக்காது நடத்த வேண்டும் என்றும் பெற்றோர் கூறினர். (ம-422)

விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தென்மராட்சி, மே 14

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள கடமை நிறை வேற்றும் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு தகைமை உடையவர் களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்புஐ அல்லது வகுப்பு 2:1 யைச் சேர்ந்த ஆகக் குறைந் தது மூன்று வருடங்க ளேனும் சேவையாற்றக் கூடிய வய தெல்லை உடையவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பிக்க விரும்பு வோர் உரிய படிவத்தினை வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் அறிவித்துள்ளார். (ம-9)

நாங்கள் தண்ணீரின்றி....! நீங்கள்....?

கொட்டடிப் பகுதி மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் தண்ணீர் பைப் ஒன்றின் முன்பாக தண்ணீர் வருவதற்குப் பலமணி நேரங்களுக்கு முன்பாகவே குடங்கள், கொள்கலன்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. (ம-111)

பாவனைக்கு உதவாத நிலையில் குழாயில் வரும் தண்ணீர்

வலி. வடக்கு மே 14

சுன்னாகம் கந்தரோடைப் பகுதிக்கு குழாய் மூலம் வழங் கப்பட்டு வரும் தண்ணீர் பயன் படுத்த உகந்ததாக இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக மிகவும் கலங்கிய நிலையில் சேற்று நீராக குழாய் மூலம் தண்ணீர் வருவதால் குழாய் நீரைப் பயன்படுத்தும் 250 இற்கும் மேற்பட்ட குடும் பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட குழாய் நீர் மூலம் தண்ணீர் பெறுவதில் உள்ள பிரச்சினை சம்பந்தமாக உடு வில் பிரதேச செயலகத்தின் மற்றும் உடுவில் பிரதேச சபை யின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள் ளதாகப் பொது மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது சம்பந்தமாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத் திலும் பாதிக்கப்பட்ட வர்கள் நேரடியாகவும் முறையிட்டுள்ளனர்.

கடந்த காலத்தில் சுன் னாகத்தில் உள்ள கிணற் றில் இருந்து இந்தப் பகுதிக்கான குழாய் நீர் விநியோகம் மேற் கொள்ளப்பட்டது.

சுன்னாகம் பகுதியில் அமைந் துள்ள மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து அகற்றப்பட்ட ஒயில் குறிப்பிட்ட பகுதிக் கிணறுகளில் கலந்ததைத் தொடர்ந்து தற்போது ஊரெழு பொக்கணை பகுதியில் புதிய கிணறு அமைக்கப்பட்டு குழாய் நீர் விநியோகம் நடைபெற்று வருகின் றது.

குறிப்பிட்ட கிணற்றில் இருந்து பெறப்படும் நீர் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள விடயம் சம்பந்தமாக நீர் வழங் கல் வடிகாலமைப்பினர் மேலதிக நடவடிக்கையை மேற் கொள்வ தாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்துள்ளனர். (ம-86)

தோல் நோய் சிகிச்சைப் பிரிவு தெல்லிப்பழையில்

வலி, வடக்கு. மே 14

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த வாரத்தில் இருந்து தோல் நோய்க்கான சிகிச்சைப் பிரிவு இயங்கத் தொடங்கியுள்ளது என்று தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எம்.உமாசங்கர் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை கடந்த இரண்டு வருடங்களாக சொந்த இடத்தில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள நிலையில் படிப்படியாக தனது சேவைகளை விஸ்தரித்து கடமைகளை மேற் கொள்ள ஆரம்பித்துள்ளது. குறிப்பாக பல்வேறுதர ஊழியர்களின் வளப் பற்றாக்குறை காணப்படுகின்றபோதிலும் கடமையாற்றும் ஊழியர்களின் மிகையான ஒத்துழைப்புடன் இத்தகைய கிளினிக்குகளை தற்போது மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாய் இருப்பார்
உன் துக்க நாள்கள் முடிந்து போகும் ஏசாயா 60:

வயது 18 08 1941 — விண்ணகம் 15 04 2013

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை

அமரர் வரப்பிரகாசம் பெனடிக்ற்

(திருகோணமலை வரப்பிரகாசம் அன்சன்ஸ், அன்ரோ ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர்)

எங்கள் தகப்பனாரின் மரணச் செய்தி கேட்டு எங்களுக்கு ஆறுதல் கூறி துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள், குருக்கள், துறவியர், வெளிநாட்டிலும், வெளி மாவட்டங்களிலும் இருந்து நேரிலும், தொலைபேசியிலும் துயர் பகிர்ந்த அனைவருக்கும் விசேட விதமாக தகப்பனார் நோயுற்றிருந்த போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவரை அன்போடு அனுசரித்து, சேவை புரிந்த வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு நாளை (15.05.2013) புதன்காலை 10 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் ஆத்ம இளைப்பாற்று திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து இல.48, புனித அந்தோனியார் வீதியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிகைக்காக பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்.

இல.48, புனித அந்தோனியார் வீதி, சுன்னாகம்.

தகவல் குடும்பத்தினர்.

ஸ்ரீ ராம ஜெயம்

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்
தீர்த்தத் திருவிழா

இடம்:- பரராச பிள்ளையார் தீர்த்த மண்டபம்
காலம்:- 15.05.2013 புதன்கிழமை
(தமிழ் வைகாசி மாதம் 1ஆம் திகதி)

முக்கிய குறிப்பு:- தீர்த்தம் மாலை 4.30 மணி. தவில், நாதஸ்வர கச்சேரியும் இடம்பெறும்.

தீர்த்த உபயகாரர்கள்.

தூய ஆவி பெருவிழா

கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி மாதா

யாத்திரைத் தலத்தில் 18.05.2013 இரவு 8.30 மணிக்கு திருப்பலியுடன் நிறைவு பெறும்.

★ 15, 16, 17 ஆம் திகதிகள் மாலை 4 மணிக்கு ஆயத்த வழிபாடுகள் இடம்பெறும்.

பெந்தக்கோஸ்து விழா நாளில் தூய ஆவியானவரின் அருட்பொழிவை பெற வாரீர்... வாரீர்.
அன்போடு அழைக்கின்றோம்.

பங்கு திருச்சபை, கரம்பொன்.

பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விஜய வருடம் வைகாசித் திங்கள் 01ஆம் நாள் 15.05.2013 புதன்கிழமை மு.ப 10.41 மணி தொடக்கம் 11.51 வரையுள்ள புனர்பூச நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபவேளையில் எமது திருநிறைச் செல்வி

தமிழ்நிலா

அவர்களுக்கு இறைவன் திருவருள் துணைகொண்டு எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டு விழா நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்னாள் தன்னை தல்வரவை விரும்பும்

திரு.திருமதி. உதயன்
குடும்பத்தினர்.

(நிலா அன் உதயன் டிஜிற்றல் வீடியோ அன் போட்டோ)

"அம்மன் கோவிலடி"
குரும்பசிட்டி கிழக்கு, குரும்பசிட்டி.

வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனியில் வேலை செய்ய 18-55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

(35169)(6.11)

பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.

தொடர்பு: 077 3033 803

(36170) (6.11)

தேவை

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC தயாரிப்பு கம்பனியில் வேலை வாய்ப்பு. 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்கு மிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
0776289655

(35160) (10.6)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் சுப்பையா
பொன்னுத்துரை (மாப்பிளை)

தோற்றம் 12.02.1920
மறைவு 14.04.2013

ஐயா! புகழ் பூத்தவரே
(மாப்பிளை) எனும் பெயர் தனில்
பாரினில் பெயருடன் நாம்
வாழவழி தந்தவரே மறவோம்
நெஞ்சிருக்கும் வரை உங்கள்
நினைவிருக்கும் உங்கள்
ஆத்மா இறைவனடி சேர இந்நாளில்
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

கோண்டாவில் வீதி, இருபாலை.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

(சி/8869)(45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிவேக நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைக்கிறது அரசு

கொழும்பு,மே 14

கட்டுநாயக்கா - கொழும்பு அதிவேக பாதையில் களனிக்கு அருகில் புதிய மேம்பாலத்தை நிர்மாணிக்க அரசு தீர்மானித்துள்ளது என்று பெருந்தெருக்கள் அபிவிருத்தி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

நவலோக்க சுற்று வட்டப் பகுதியிலும் ஒறுகொடவத்த பகுதியிலும் ஏற்படுகின்ற வீதி நெருக்கடி காரணமாக அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அதிவேகப் பாதையில் 90 வீதப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன என்று அமைச்சர் தெரிவித்தார்.

புதிய மேம்பாலம் நிர்மாணிக்கப்படும் வீதிக்கு அருகில் தற்போது வசிக்கும் 300 சேரிப் புற குடும்பங்களுக்காக புதிய வீடமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

புதிய மேம்பாலத் திட்டத்தின் கீழ் வீடமைப்புத் திட்டத்தையும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று அவர் கூறினார்.

மேம்பாலத் திட்டத்தை மேற்கொள்ளும் நிறுவனத்துக்கே வீடமைப்புத் திட்டமும் ஒப்படைக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

உகண்டாவில் வெற்றிபெற்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அசுமன் கியிங்கி தலைமையிலான குழுவினர் வரவேற்பளித்தனர். (ச-ரி)

குப்பைகளைச் சேகரிக்க இரண்டு லட்சம் பைகள்

கொழும்பு மாநகர சபை நடவடிக்கை

கொழும்பு,மே 14

குப்பைகளைச் சேகரிக்கும் இரண்டு லட்சம் பைகளை கொழும்பிலுள்ள வீடுகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் குப்பைகளைச் சேகரிக்கும் புதிய மீள்சுழற்சி திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக கொழும்பு மாநகர ஆணையாளர் பத்திரணி ஜயவர்தன குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மற்றும் வகைப்படுத்தப்படாத கழிவுகள் வெவ்வேறாகச் சேகரிக்கப்படும் என்று அவர் கூறினார்,

வாரத்தில் ஒரு தடவை விசேட வாகனமொன்றின் ஊடாக வகைப்படுத்தப்பட்ட கழிவுகள் சேகரிக்கப்படவுள்ளன. வகைப்படுத்தப்பட்ட கழிவுகளைச் சேகரிக்கும் நோக்கில் கொழும்பில் மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

பஸ் கட்டணத்தை உயர்த்தாவிட்டால்

நாடளாவிய ரீதியில் 20 இல் வேலைநிறுத்தம்

கொழும்பு, மே 14

இந்த ஆண்டுக்கு உரிய நூற்றுக்குப் 10 வீதமான பஸ் கட்டணத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தனியார் பஸ் உரிமையாளர்களின் ஒத்துழைப்புடன் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தென் மாகாண தனியார் துறை பஸ் நிறுவனங்களின் சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

பஸ்களுக்கு வர்ணம் பூசப்பட வேண்டும் என்று அரசு விதித்துள்ள சட்டம் உடனடியாகவே ரத்துச் செய்யப்பட வேண்டும். பஸ்கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த சட்டம் ரத்துச் செய்யப்படாது விடின், பஸ்களுக்கு வர்ணம் பூசுவதற்கு ஒரு பஸ்ஸிக்கு 1,75,000 ரூபா வழங்கப்பட வேண்டும் என்று சம்மேளனத்தின் தலைவர் ஜீ.சந்தன சொய்ஸா தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டுக்கான பஸ்கட்டண உயர்வு கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும் டீசலின் விலை லீற்றருக்கு ஆறு ரூபாவால் உயர்ந்து சென்றிருந்தும் கூட பஸ் கட்டணங்களை மீளாய்வு செய்வதற்கோ, நிவாரணத்தை வழங்குவதற்கோ, அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் கூறினார்.

இந்த ஆண்டில் வழங்கப்பட வேண்டியுள்ள பஸ் கட்டண மீளாய்வு மூன்று மாதங்கள் கழிந்து சென்றுள்ள நிலையில், பஸ் கட்டணங்களுடன் சம்பந்தப்படும் செலவினங்களும் அதிகரித்துள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மின்கட்டணங்களை எதிர்வரும் 20 திகதிக்கு முன்னர் ரத்துச் செய்யா விட்டால் 21 ஆம் திகதி வேலை நிறுத்தம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

அருள்சாமி மீண்டும் தொழிலாளர் காங்கிரஸுக்கு

கொழும்பு, மே 14

தொழிலாளர் விடுதலை முன்னணியின் முன்னாள் செயலர் எஸ்.அருள்சாமி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியில் மீண்டும் இணைந்து கொண்டுள்ளார்.

கடந்த காலத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைப் பிரதிநிதித்துவப்படுத்தி மத்திய மாகாண சபைக்குப் போட்டியிட்ட எஸ். அருள்சாமி, மத்திய மாகாண சபையின் தமிழ்க் கல்வி அமைச்சராகவும் பதவி வகித்திருந்தார்.

பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்தும் வெளியேறி மலையக மக்கள் முன்னணியில் இணைந்து செயலாற்றியுள்ளதோடு அடுத்த நகர்வாக அந்த முன்னணியில் இருந்தும் வெளியேறி தொழிலாளர் விடுதலை முன்னணியை உருவாக்கிக் கொள்வதற்கு செயற்பட்டிருந்தார்.

தற்போது அந்த முன்னணியிலிருந்தும் வெளியேறி மீளவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார். (ச-22)

வெளிநாட்டு மாணவர்களுக்கு

பல்கலைகளில் 1,292 வெற்றிடங்கள்

கொழும்பு, மே 14

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்கு 1,292 வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று உயர்கல்வி அமைச்சர் எஸ். பீ.திஸாநாயக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் நூற்றுக்கு 5 வீதமான இடம் வெளிநாட்டு மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

எனினும் மருத்துவ, விஞ்ஞானக் கற்கை நெறியை



விடுத்து ஏனைய கற்கை நெறிகளுக்கு வெளிநாட்டுத் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கையர்களோ அல்லது வெளிநாட்டு மாணவர்களோ விண்ணப்பித்துக் கொள்ளாமையே வெற்றிடம் ஏற்பட காரணமாகியுள்ளது என்று கூறினார்.

மருத்துவ, விஞ்ஞான கற்கை நெறிக்கு 41 வெற்றிடங்களும், பல்சத்திர சிகிச்சை விஞ்ஞான கற்கை நெறிக்கு 3 வெற்றிடங்களும், பொறியியல் விஞ்ஞான கற்கை நெறி தொடர்பாக 12 வெற்றிடங்களும், உயிரியல் விஞ்ஞான கற்கை நெறிகள் தொடர்பாக 57 வெற்றிடங்களும், கணினி விஞ்ஞான பாடநெறி தொடர்பாக 11 வெற்றிடங்களும் காணப்படுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

கலைத்துறை பாடநெறிகள் தொடர்பாக 240 வெற்றிடங்களும், முகாமைத்துவக் கற்கை நெறிகள் தொடர்பாக 172 வெற்றிடங்களும், மாணிக்கக்கல் கற்கை நெறி தொடர்பாக 23 வெற்றிடங்களும், பௌதிக விஞ்ஞான கற்கை நெறிகள் தொடர்பாக 87 வெற்றிடங்களும் நிலவுவதாக அவர் தெரிவித்தார். (ச-22)

ரம்ழானுக்காக சவூதி வழங்கிய 200 மெ.தொன் பேரீச்சம் பழம்

கொழும்பு, மே 14

புனித ரம்ழான் பெருநாளை முன்னிட்டு நோன்பாளிகளுக்கு வழங்கவென சவூதி அரேபிய அரசு 200 மெற்றிக் தொன் பேரீச்சம் பழங்களை இலவசமாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான சவூதி அரேபியா தூதுவர் அப்துல் அஸீஸ் பிரதமர் டி.எம்.ஜயரத்தனவிடம் இவற்றைக் கையளித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, பிரதி அமைச்சர்கள் எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன, அப்துல் காதர் மற்றும் மேல் மகாகாண ஆளுநர் அலவி மௌலானா, முஸ்லிம் சமயப் பணிப்பாளர்

உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கிடைக்கப்பெற்ற பழங்களை இலங்கையில் உள்ள சகல பள்ளிவாசல்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்று முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் எம்.எச். எம்.ஸமீல் தெரிவித்தார். (ஒ-ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனிதர்களின் மனதில் கோடிக்கணக்கில் சிந்தனைகளும், ஆற்றலும் தேங்கிக் கிடக்கின்றன. அதை வீணடிப்பவர்கள் பலர். கடலோர மணலில் காணப்படும் விலையுயர்ந்த தாதுக்களை முறைப்படி சுத்திகரித்து அதிலிருந்து பிரிக்க முடியும். அதன்பிறகுதான் அதன் பெருமை உலகுக்குத் தெரிய வருகிறது. மனிதர்களின் ஆற்றலும் அதைப் போன்றதுதான்.

வாழ்வின் வெற்றிக்கு...

அ.பிறேமினி

தன்னம்பிக்கை இருந்தால்தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். ஒவ்வொரு வருமே திறமையானவர்கள்தான். அவர்களுக்குள் இருக்கும் அறிவாற்றல் பெறுமதிமிக்கது. அதை வெளிக் கொணர்ந்தால் மட்டுமே பிரகாசம் தெரியும்.

ஆழ்கடலில் இருக்கும் சகதியில் மூழ்கி தேடிக் கண்டுபிடித்த பிறகுதான் விலை மதிப்புமிக்க முத்துக்களைப் பெற முடியும். அனைத்து மலர்களும் நறுமணமிக்கவை. அதில் வேறுபாடு இருப்பதில்லை. பூவை நாடிச் செல்லும் வண்டுகளும் வேறுபாடு பார்ப்பதில்லை. அதன் நோக்கம் தேன் சேகரிப்பது மட்டுமே.

மனிதர்களின் மனதில் கோடிக் கணக்கில் சிந்தனைகளும், ஆற்றலும் தேங்கிக் கிடக்கின்றன. அதை வீணடிப்பவர்கள் பலர். கடலோர மணலில் காணப்படும் விலையுயர்ந்த தாதுக்களை முறைப்படி சுத்திகரித்து அதிலிருந்து பிரிக்க முடியும். அதன்பிறகுதான் அதன் பெருமை உலகுக்குத் தெரிய வருகிறது. மனிதர்களின் ஆற்றலும் அதைப் போன்றதுதான்.

கிரேக்க தத்துவ ஞானி சோக்ரடீஸ் செய்த தவறு, ஏன்? எதற்கு? எப்படி? என்று வினா தொடுத்ததுதான். அப்படிக் கேள்வி எழுப்பியதால்தான் தலைசிறந்த தத்துவஞானியாக அவரின் திறமை உலகுக்குத் தெரிய வந்தது. எனவே வாழ்க்கையில் முன்னேற மனோதிடம், உறுதி, எதையும் எதிர்கொள்ளும் பக்குவம் வேண்டும். முயற்சிதான் முன்னேற வழி வகுக்கும். விண்ணில் பிரகாசிக்கும் சந்திரனின் தொலைவு அதிகம். ஆனாலும் அதன் வெளிச்சம் உலகம் முழுவதும் ஒளிர்கிறதல்லவா?

எழில் நிறைந்தது இந்த உலகம். எதையுமே பெறலாம். ஆனால் கடின முயற்சி வேண்டும். மலையிலிருந்து பெயர்க்கப்பட்ட கற்பாறையில் சிற்றுளியால் செதுக்கும்போது கிடைக்கும் உயிர், நம்மை பிரமிக்க வைக்கிறது. வாழ்க்கையும் அது போலத்தான்.

இரு ரசாயனக் கலவையை தனித் தனியே எடுத்து ஒரு குச்சியால் ஒன்றைத் தோய்த்து மற்றொன்றின் மீது உரசியதன் விளைவு தீ பறந்தது. தீக்குச்சியும், தீப்பெட்டியும் கண்டுபிடிக்க அது தூண்டுகோலாக அமைந்தது.

தினமும் 24 மணிநேரத்தை நமக்கு இயற்கை வரப்பிரசாதமாக அளித்துள்ளது. இதில் 6 மணி நேரம் உறக்கத்தில் கழிகிறது. இப்படியே போனால் ஓராண்டுக்கு நாம் தூங்கிக் கழிப்பது 2190 மணித்துளிகள். இதை நாள்களாக மாற்றினால் 96 நாள்களும் 6 மணிநேரம் தூக்கத்தில் கழிக்கிறோம். அப்படியானால் மீதமுள்ள 261 நாள்களில் நாம் செய்யும் செயல்கள் என்ன? அதன் மூலம் நாம் அடையும் பலன்கள் என்ன?.

ஏதோ உழைத்தோம். உண்டோம், உறங்கினோம் என்ற பீதியில்தான் வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. மனிதர்களின் சராசரி ஆயுள்காலம் 70 ஆண்டுகள் என்கிறது மருத்துவம். அந்த எண் ணிக்கை இன்று குறைந்து வருகிறது.

இந்த வயதுக்குள் நீ சாதித்தது என்ன என்று உள்மனம் கேட்கும் போது நம்மை நாமே திட்டிக்கொள்கிறோம். ஆக, நேரம் கிடக்கிறது; அதை பயன்படுத்தத் தெம்பில்லை. தைரியமில்லை.

ஆகவே தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். கிடைக்கும் நேரம் விலை மதிப்புமிக்கது என்ற உணர்வும், உண்மையும் ஒவ்வொரு வருக்குள்ளும் இருந்தால் வாழ்க்கையில் நாம் வெற்றிபெற்றவராகிறோம். எத்தனை கண்டுபிடிப்புகள், எத்தனை சாதனைகள் ஒவ்வொரு நிமிடமும் நிகழ்த்தப்படுகின்றன.

இந்தப் பொன்னான வாய்ப்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் உலகையே திரும்பிப் பார்க்க வைக்க முடியும். அது எந்தத் துறையாக இருந்தாலும் சரி. நினைத்ததைச் சாதிக்க முடியும். ஆனால் அனைத்துக்கும் பொறுமை, விவேகம் வேண்டும். ★

'சும்மா' உட்கார்ந்திருப்பது ஓய்வு அல்ல.....

ஆர். பரணீதரன்

ஓய்வு என்றால் என்ன? எந்த வேலையும் செய்யாமல் 'சும்மா' உட்கார்ந்திருப்பதுதான் ஓய்வு என நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், ஓய்வு என்பது நாம் செய்து கொண்டிருக்கும் வேலையில் தவறு மற்றும் சலிப்பு ஏற்படாமல் இருக்க, தாற்காலிகமாக வேறு பணியைச் செய்து நம் உடலையும், மனதையும் உற்சாகப்படுத்திக் கொள்வதாகும்.

காலம் பொன் போன்றது; மனிதன் தன் வாழ்க்கையில் பணம், பதவி, பொன், பொருள் என எதை இழந்தாலும் மீண்டும் பெற்று விடலாம். ஆனால், காலம் என்ற ஒன்றை மட்டும் மீண்டும் பெறவே முடியாது. ஓய்வு என்ற பெயரால் காலத்தை வீணடிக்கும் சோம்பேறித்தனமே நம் முன்னேற்றங்களுக்கெல்லாம் முட்டுக்கட்டையாக அமைகிறது.

ஓய்வுபற்றிய இந்த சோம்பேறிக் கோட்பாடு, நமது குழந்தைகள் இதயத்திலும் வேரூன்றத் தொடங்கியுள்ளன. ஆண்டு முழுவதும் படித்துக் களைத்து பரீட்சைகளும் முடிந்து விட்டால் காலைப் பொழுது விடிந்தது முதல், இரவு உறங்கச் செல்லும்வரை தொலைக்காட்சிப் பெட்டியே கதியெனக் கிடந்து தங்கள் உடலையும், மனதையும் கெடுத்துக் கொள்கின்றனர். அல்லது கொளுத்தும் கோடை வெயில் முழுவதும் என் தலையில் தான் என கையில் கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக் கொண்டு மைதானத்துக்கு ஓடிவிடுகின்றனர்.

ஒவ்வொரு ஓய்வுகாலத்திலும் மாணவன் கற்றுக் கொள்ளும் ஏதேனும் ஒரு விஷயம், அவன் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பயனளிக்கும் என்பதை அவர்களின் விடுமுறைக் காலத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க நாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

உதாரணமாக, இப்போதெல்லாம் ஒவ்வொரு வீட்டிலும் அப்பாவுக்கு, அம்மாவுக்கு, அண்ணனுக்கு என நான்கைந்து கைத்தொலைபேசிகள் உள்ளன. அவற்றில் பழுது ஏற்பட்டால் சரி செய்ய உதவும் கைத்தொலைபேசிகள் சர்வீஸிங் பயிற்சிக்கு ஆண் பிள்ளைகளை அனுப்பலாம். இதன் மூலம் தங்கள் வீட்டு கைத்தொலைபேசிகள் மட்டுமின்றி, நண்பர்கள் மற்றும் அக்கம்பக்கத்தினருள்ளவர்களின் கைத்தொலைபேசிகளைப் பழுது நீக்கி, பகுதிநேரத் தொழிலாகக் கூட செய்யலாம். இவ்வாறு செய்வதன் மூலம் இயற்கையாகவே அவருக்கு அத் துறையில் ஆர்வம் ஏற்பட்டு, எதிர்காலத்தில் மிகச் சிறந்த பொறியியளாராகவோ அல்லது விஞ்ஞானியாகவோ கூட வர வாய்ப்புள்ளது.

பெண் குழந்தைகளைத் தையல் பயிற்சிக்கு அனுப்புவதன் மூலம் தங்களுக்கும் தங்கள் குடும்ப உறுப்பனர்களுக்கும் தேவையான ஆடைகளை அவர்களே தைத்துக் கொள்வதோடு மட்டுமின்றி, அக்கம் பக்கத்தினருக்கும் தைத்துக் கொடுக்க வாய்ப்பளிக்கலாம்.

தன்னுயிரை மட்டுமின்றி, ஆபத்துக் காலங்களில் பிற உயிர்களையும் காக்க உதவும் நீச்சல் பயிற்சி, வீட்டு உபயோகப் பொருள் பழுதுநீக்கும் பயிற்சி, தற்காப்புக் கலைப் பயிற்சி மற்றும் கணிப்பொறி, என ஏராளமாக பயிற்சிகள் உள்ளன. சிறு குழந்தைகளுக்கு ஓவியப் பயிற்சி, கணிதம், கையெழுத்துப் பயிற்சி என தினசரி 2 மணி நேரம் ஒதுக்கினாலே போதும், அவை அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் நற்பயனை அளிக்கும். இவ்வாறு பல துறைகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்கள் எத் துறையில் ஆர்வத்துடன் செயல்படுகிறார்கள் எனக் கண்டறிந்து, அவர்களை அத் துறையிலேயே ஈடுபடுத்தி வாழ்வை வளமாக்க முடியும்.

ஆனால், நாமோ நமது நேரத்தையெல்லாம், டி.வி. மற்றும் கணிப்பொறி முன் செலவிட்டு ஓய்வு என்ற பெயரில் சோம்பேறியாக வாழவே நமது குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுக்கிறோம்.

மகாத்மா காந்தியடிகள் கூறியது போல ஒரு மாணவன் ஒரு நாளைக்கு 4 மணி நேரம் புத்தகப் படிப்பையும், 4 மணி நேரம் தொழில் படிப்பையும் பயில வேண்டும், அதுவே அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.

பரவாயில்லை, முடிந்தால் உங்கள் உறவினர்களின் வீடுகளுக்காவது விடுமுறைக்குச் சென்று வாருங்கள். அப்போது தான் மாமா, அத்தை, சித்தி, சித்தப்பா, தாத்தா, பாட்டி என உறவுகளின் மகத்துவத்தைக் குழந்தைகள் உணர்வார்கள். வீணாக தொலைக்காட்சி, கணினி முன் அமர்ந்து மனதையும், வெயிலில் அலைந்து உடலையும் கெடுத்துக் கொள்ளாமல் விடுமுறைக் காலத்தை பயனுள்ளதாகப் பயன்படுத்திய திருப்தி நமக்குக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பிராந்தியம்:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:

கிளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, நெல்லியடி மொனோன்ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி ஸ்டோர்ஸ்' – மானிப்பாய் : 0232220052 'நீசாலைகஜானன்' – கண்டி வீதி, நீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி ஸ்டேஷனரி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி.

தினமும் அன்னையர் தினமே

ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம். ஏராள மானோர் பெற்ற தாயை வணங்கினார்களோ இல்லையோ பேஸ்புக்கிலும், எஸ்.எம்.எஸ்களிலும் அன்னையர் தினத்தை நினைவூட்டி கொண்டாடி, "நாங்கள் அன்னையை தெய்வமாக மதிப்பவர்கள்" என்று மற்றவர்களுக்கு பாடம் கற்பித்தவர்களை மறுக்கவில்லை.

சிலவேளைகளில் இவர்கள் மனதாரவே இந்தச் செய்திகளை அனுப்பியிருக்கலாம் எனலாம். ஆனால் சமூக வலைத்தளங்களில் அன்றைய தினம் தாய் பற்றிய பதிவிட்டவர்கள் எல்லோருமே பதிவுத்துடனும் தமது அன்னையர் மீது பாசமழை பொழிபவர்களாக இருந்தால் வாடி முதியோர் இல்லங்களில் இணைக்கப்படும் மூதாட்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்?

சமூகப் பிரயோசனத்துக்காக நமது பெற்றோர் மீது நாங்கள் அளவற்ற பாசத்தை வைத்திருக்கின்றோம் என்று வெளிப்படையாகக் காட்டினாலும், நில்லாது சுழன்றுகொண்டே இருக்கும் நவீன உலகில் பெரும்பாலானோருக்கு 'அன்னையும் பிதாவும் முன்னறிவக்கு இவை குருசல் தான்'. ஆயினும் தாயது உண்மையான முகத்தை இன்றைவரை வெளிக்காட்டுவதில்லை. ஒரு வகையில் பெற்றோர் தம்மை வேதனைப்படுத்துவதை இலாபமாக இவர்கள் கருதுவதும் இதற்கு ஒரு காரணம்.

பணம் மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட வாழ்வில் கணவனும் மனைவியும் வேலைக்குச் சென்றுவிட்டால் அவர்களின் பிள்ளைகளைப் பராமரித்தல், உணவூட்டுதல், வீட்டை சுத்தப்படுத்தி பொருத்தி சுத்தமாக வைத்திருத்தல், பாதுகாப்பு என்று இன்னோரன்ன செயல்களை பெற்றோரே செய்கிறார்கள். இவ்வனைத்துக்கும் கணக்குப் பார்த்தால் அவர்கள் இருப்பது மிகப் பெரும் இலாபம். எனினும் பெற்றோர் செயலற்றவர்களாக முடங்கிப் போகும் நிலை ஏற்படும் போதே பிள்ளைகளின் உண்மை முகம் வெளித்தெரிய ஆரம்பிக்கிறது.

பிள்ளைகளின் தயவை நம்பியிருக்கும் வயதான பெற்றோர் மீது கள்ளென்ற சுடுசொற்கள் வந்து விழ ஆரம்பிக்கும். அவர்களாகவே பிள்ளைகளை விட்டு ஒதுங்கிச் செல்லும் வகையில் புறக்கணிப்புகளும் அவமதிப்புகளும் தொடரும். அப்படியும் பெற்றோர் போக்கிடமின்றி ஓட்டிக் கொண்டிருக்கும் போதுதான், அவர்களை முதியோர் இல்லங்களுக்குள் சேர்ப்பிக்கும் காரியங்களில் பிள்ளைகள் இறங்குகிறார்கள். உண்மையில் தமது குழந்தைப் பராயத்தில் வெள்ளை பெற்றோர் தம்மை பேணி வளர்த்தார்கள் என்பதை ஒரே ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் கூட தமது அன்னையோ தந்தையையோ முதியோர் இல்லங்களில் தனித்துத் தவிக்கவிடும் முடிவை எந்த ஒரு பிள்ளையும் எடுக்க முடியாது. ஆனால் பாழாய் இரையீரும் பணத்துக்கும் நமக்குத் தான் இல்லையே. அதனால் தான் முதியோர் இல்லங்களையும், அதில் இணைவோர் தொகையையும் ஒவ்வொரு நாளும் அதிகரிக்கச் செய்து விட்டு வருத்தில் ஒரு நாள் மாத்திரம் 'அன்னையர் தினம்', 'தந்தையர் தினம்' என்று பெயருக்குக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். கலாசிதைவு பெற்றோரைக் கண்ணும் கருத்துமாக அன்போடு கவனிப்பவர்களுக்கு தினமும் அன்னையர் தினம்தான். ஏனெனில் அன்பிற்கு மறுபெயர் அம்மா அல்லவா.

பொலிஸ், காணி அதிகாரம் இல்லையென்றால்

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
■ கோகுலன்

13 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு அமைவாக வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசில் இருக்கும் பங்காளிக் கட்சிகள் குறிப்பாக தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெலஉறுமய ஆகியவை கடும்எதிர்ப்பை முன் வைத்துள்ளன. அவைகளின் தலைவர்களான விமல் வீரவன்சவும், சம்பிக்க ரணவக்கவும் 13 ஆவது திருத்தத்தின்படி மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படுவதை மூர்க்கமாக எதிர்த்து வருகிறார்கள்.

இதற்கு ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் 19 ஆவது அரசமைப்பு திருத்தம் ஒன்றை அறிமுகப்படுத்தி அதில் மேற்படி இரு அதிகாரங்களையும் இல்லாமல் செய்துவிடலாம் என்ற வகையில் ஜக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது. வேறு சில விடயங்களையும் இந்தத் திருத்தத்தில் அறிமுகப்படுத்த உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. இந்த விதமான இரு கருத்துள்ள பங்காளிகளோடும், சிரேஷ்ட அமைச்சர்களோடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனைகள் நடத்தியுள்ளார். அதன் பின்னர் நேற்றுமுன்தினம் அவர் மூன்று நாள் பயணமாக உகண்டாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். பேச்சுவார்த்தைகளை அவர், நாடு திரும்பிய பின்னர் மீண்டும் ஆரம்பிப்பார் என்று தெரிகின்றது. 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டிய சிக்கலான நிலைமை ஏற்பட்டிருப்பதானது நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருப்பதே காரணம். இந்த இரு பங்காளி கட்சிகளைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் இந்தக் கருத்துக்கு ஆதரவளிப்பதாக இல்லை. சில மூத்த அமைச்சர்களும் அதே கருத்தை உடைய வர்களாகவே உள்ளனர்.

கூட்டமைப்பின் நிலைப்பாடு

இது இவ்வாறு இருக்க, இன்னொரு பக்கம் வடமாகாணத் தேர்தலில் முக்கிய பங்கு வகிக்கப் போகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது மேற்குறித்த அரசமைப்பு மாற்றங்கள் செய்யப்படுமானால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கப் போவதாகத் தெரிய வந்துள்ளது. இந்தியாவின் நெருக்குதலினால் வடமாகாண சபைத் தேர்தலானது வரும் செப்ரெம்பர் மாதம் முதலில் வரும் சனிக்கிழமையன்று நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் -நாடாளுமன்றத்தில் அதிக தமிழ் உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட முன்வந்திருப்பதானது வடமாகாண சபைத் தேர்தலை நல்லிணக்கச் செயற் பாட்டின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பதாகக் கருதப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுவ தானது நல்லிணக்கச் செயற்பாடு முன் நகர்த்தப்படுவதாக சர்வதேச சமூகத்துக்கு அரசு எடுத்துக் காட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைய முடியும் என்றாலும், அரச தரப்பில் ஒரு பகுதியினர் மத்தியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமுக நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள இலங்கை அரசு முயன்று கொண்டிருக்கும் நிலையில் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் மாற்றம் செய்வதில் இந்தியாவின் பிரதிபலிப்புகள் எப்படியிருக்கும் என்ற கேள்வியே.

இன்னமும் இது குறித்து நம்பிக்கை உருவானதாகத் தெரியவில்லை.

நாங்கள் இன்னமும் அரசமைப்பு திருத்தம் எதுவும் குறித்து ஒரு முடிவுக்கு வரவில்லை. இப்பொழுது விரிவான ஆலோசனைகள் , வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்களையும் சேர்த்து-நடத்திக் கொண்டிருக்கிறோம். என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து நாம் முதலில் ஒரு தெளிவான முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது என்று பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறினார்.

வடமாகாண சபைத் தேர்தலில் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் மூன்று விரிவான பிரிவுகளாக போட்டியிடுவார்கள். முதல் பிரிவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இருப்பார்கள். அடுத்ததில் ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள மற்ற பங்காளிகள் இருப்பார்கள். மூன்றாவது பிரிவில் தொழில்சார் பிரமுகர்கள், கல்விமான்கள் மற்றும் வடமாகாணத்தில் கௌரவமான அந்தஸ்தில் இருப்பவர்கள் உள்வாங்கப் படுவார்கள் என்றார் அமைச்சர். போட்டியிடவிருப்பவர்கள் தமது விண்ணப்பங்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கும்படியான விளம்பரங்கள் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகளில் இடம்பெறும் என்றும் அமைச்சர் பஸில் தெரிவித்தார்.

வடமாகாண முதலமைச்சர்

ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இன்னமும் அதன் முதலமைச்சர் யாராய் இருக்க வேண்டும் என்பது பற்றி அதிகாரபூர்வமாக தீர்மானம் ஒன்றை எடுக்கவில்லையென்று அமைச்சர் பஸில் கூறினார். தேர்தல் முடிவடையும் வரை இந்தப் பதவி பற்றிய பிரச்சினை அப்படியே விட்டு வைக்கப்படும். தேர்தலில் எங்கள் கூட்டணி வெற்றி பெறுமானால் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெறுபவர் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்படுவார் என்று அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் ஆலோசனை

இந்தியாவிலிருந்து கடந்த வெள்ளிக் கிழமை நாட்டுக்குத் திரும்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் ஆர்.சம்பந்தன் அவசரமாக தமது சகாக்களுடன் மூன்று மணி நேரம் ஆலோசனைகள் நடத்தினார்.

தேர்தலுக்கு முன்னதாக தமது பங்காளிக் கட்சிகள் அனைத்தையும் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கட்சியான தமிழரசுக் கட்சிக்குள்ளேயே ஒன்றாக வைத்திருப்பது அவரது முக்கிய முயற்சியாக இருந்தது. அவர்கள் அனைவரும் கூட்டமைப்பினர் என்று பொதுவாக அறியப்பட்டாலும், அதிகார பூர்வ செயற்பாடுகளுக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் கொடியின் கீழேயே செயற்படுகின்றார்கள்.

ஆனால் இந்தக் கூட்டணியில் இருந்து செயற்படும் நான்கு வேறு கட்சிகள் வித்தியாசமான ஒரு கருத்தை உடைய வர்களாக இருக்கின்றார்கள்.

நேற்று முன்தினம் சம்பந்தனும், அவரது குழுவினரும் மன்னாருக்குச் சென்று அங்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடன் ஆலோசனை கலந்தார்கள். சகல தரப்பினரையும் ஒன்றாக இணைத்து பொது நலனுக்காக செயற்படும்படியாக ஆயர் ஆலோசனை வழங்கியதாகத் தெரிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவதற்கான பேச்சுக்கள் சாதகமான வகையில் முடிவுற்றதாக ரெலோ அமைப்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவது மற்றும் எதிர்கால அரசியல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பது நிலுவையில் இருக்கும் அதே சமயம் 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான பணிகள் அமைச்சர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. கொண்டுவரப்படவிருக்கும் திருத்தங்களின் தன்மைகளைக் கருத்திற்கொண்டு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அந்தப் பொறுப்பு கொடுக்கப்படவில்லை.

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை நீக்குவது மட்டுமன்றி ஜனாதிபதியின் இப்போதைய பதவிக் காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாகக் குறைப்பதும் இதில் ஒன்றாக இருக்கும் என்று தெரிகின்றது.

அதில் இன்னுமொன்று ஜனாதிபதியானவர் 4 வருடங்களில் மறு தேர்தலை நாடலாம் என்றிருப்பதை மூன்று ஆண்டுகள் பதவியிலிருந்த பின் மறு தேர்தலை நாடலாம் என்பதாகும்.

இந்த விடயமானது ஜனாதிபதித் தேர்தலை அரசு அடுத்த வருடமே நடத்துவதற்கு திட்டமிடுவதாகக் கருத இடம் அளித்துள்ளது. அரசுதரப்புவட்டாரங்களில் இந்தக்கருத்தே நிலவுகின்றது. கொமன்வெல்த் தலைவர்கள் மாநாட்டை இலங்கையில் நடத்திய பெருமையை வைத்து இந்தத் தேர்தல் நடத்தப்படலாம் என்று தெரிகிறது.

இன்னுமொரு விடயம் பிரதம நீதியரசரின் பதவிக் காலத்தை மூன்று வருடங்களாக மட்டுப்படுத்துவதாகும். ஆனால் இந்தமாதிரியான மாற்றங்களுக்கெல்லாம் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்குமா என்ற கேள்வியும் எழுகின்றது. அதிலும் கூட பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாற்றுவதற்கு எத்தனை கட்சிகள் ஆதரிக்கும் என்ற கேள்வி எழுகின்றது. இதில் இன்னும் முக்கியத்துவமான விடயம் என்னவென்றால் இப்பொழுது சுமுக நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள இலங்கை அரசு முயன்று கொண்டிருக்கும் நிலையில் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் மாற்றம் செய்வதில் இந்தியாவின் பிரதிபலிப்புகள் எப்படியிருக்கும் என்ற கேள்வியே.

புலமைப் பரிசில் வெற்றியாளர் இலங்கை வங்கியால் கௌரவிப்பு

அச்சுவேலி, மே 14

2012 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற இலங்கை வங்கிக் கணக்கைப் பேணும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் வேணுகா சண்முகரட்ணம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய பிரதம விருந்தினர், "ஆரம்பத்தில் வறிய மாணவர்களுக்கு உதவும் திட்டமாகக் கொண்டு வரப்பட்ட புலமைப் பரிசில் திட்டம் இன்று பிரபல கல்லூரிகளின் அனுமதிக்கான போட்டிப் பரீட்சையாக மாற்றம் பெற்றுள்ளது. விளையாடுவதற்குக் கூட நேரமின்றி மாணவர்கள் கற்கிறார்கள். அவர்களை ஊக்குவிக்க வேண்டியது அவசியம்.

அதே நேரம் இந்தப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் ஏற்படும் மன உளைச்சலைத் தவிர்க்க முடியாது. மாணவர்கள் சுயதேடல் மூலமாகவே அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். முயற்சியும் பயிற்சியும் இணைந்தே வெற்றியை உருவாக்குகின்றது.

எனவே மாணவர்களின் தொடர் வெற்றிகளைப் பதிவாக்க ஆசிரியர்களும், பெற்றோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்''-என்றார்.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டாளர் மாணிக்க சிங்கி உரையாற்றுகையில்;

''மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே இந்த உதவித் தொகை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆரம்பத்தில் பரீட்சையில் வெற்றி பெற்ற ஆயிரம் மாணவர்களை கௌரவித்த இலங்கை வங்கி இன்று 2, 000 மாணவர்களைக் கௌரவித்துள்ளது. இனிவரும் காலங்களிலும் இலங்கைவங்கி இவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும்'' -என்றார். (ம-ரி)

ஹற்றன் நஷனல் மல்லாவிக் கிளையின் சித்திரைப் புதுவருட கொடுக்கல், வாங்கல் நிகழ்வும் வாடிக்கையாளர் நிதி ஒழுங்கு பற்றிய அறிவூட்டல் நிகழ்வும் அண்மையில் வங்கி வாடிக்கையாளர் சந்திப்பு மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வுக்கு வங்கிக் கிளையின் அனைத்து நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்களும் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சிறிய நடுத்தர முயற்சியாளர்களும் விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர். இந்த நிகழ்வு புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுடன் இனிதே ஆரம்பமானது. தொடர்ந்து கிளையின் முகாமையாளர் செ.சர்வேஸ்வரன் அறிமுக உரை நிகழ்த்தினார். அவரது உரையில் சேமிப்பின் முக்கியத்துவம், வங்கியின் புதிய தொழில் நுட்ப வருகை போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. (ம-415)

HNB Assurance இன் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு குடிதண்ணீர்

வசதிகள் குறைந்த கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கு சுகாதாரமான குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும் திட்டமொன்றை HNB அசூரன்ஸ் ஆரம்பித்துள்ளது. அதன் அடிப்படையில் அண்மையில் எம்பிலிப்பிட்டிய பகுதியில் உள்ள இரு பாடசாலைகளுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டு காலமாக வசதி குறைந்த கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளைத் தெரிவு செய்து அவற்றின் அடிப்படைத் தேவைகளை HNB அசூரன்ஸ் நிறைவு செய்து வருகின்றது. எம்பிலிப்பிட்டிய தியபொத மஹா வித்தியாலயத்தில் தற்சமயம் 175 மாணவர்கள் கல்வி கற்பதுடன் இவர்களின் பெற்றோர் பெரும்பாலும் சுயதொழில்களிலும் விவசாயத்திலும் ஈடுபடுபவர்கள் ஆவர். இப்பகுதியில் உள்ள மற்றுமொரு அடிப்படை வசதிகள் குறைந்த பாடசாலையான வீரபா வித்தியாலயத்தின் சுமார் 500 மாணவர்கள் கல்வி கற்பதுடன் இவர்களில் பெரும்பாலானோர் வறிய குடும்பங்களை சேர்ந்தவராவர்.

மேற்படி இரு பாடசாலைகளுக்கும் சுகாதாரமான குடிதண்ணீர் தொடர்பான பிரச்சினை இருந்து வந்ததுடன் தற்போது HNB அசூரன்ஸ் குடிதண்ணீர் திட்டம் ஊடாக அக்குறை நிவர்த்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நான்கு மாத காலப் பகுதியில் 1,000 பேருக்கு உதவிகள்

பிரதேச அபிவிருத்தி வங்கி வழங்கியது

யாழ்ப்பாணம், மே 14

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கி கடந்த 4 மாதகாலப் பகுதிக்குள் மட்டும் 1,000 பேருக்கு சுயதொழில்களுக்கான கடன் உதவிகளை யாழ்.மாவட்டத்தில் வழங்கியுள்ளது என்று பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் எஸ்.சிவலோகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்க் காலச் சூழலின் போது பாதிப்படைந்த குடும்பங்களில் வாழ்வாதார மேம்பாட்டுக்கான சேவைத்திட்டமாக கடந்த 2 வருடங்களாக யாழ்.மாவட்டத்தில் பிரதேச அபிவிருத்தி வங்கி சேவையாற்றி வருகிறது.

இதன் முக்கிய செயற்றிட்டமாக வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுயதொழில்களுக்கான கடன் உதவிகளை வழங்கி வருகிறது.

வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இதுவரை ஆயிரத்து 800 இற்கும் மேற்பட்டவர்களுக்கு சுயதொழில் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 4 மாதகாலப் பகுதிக்குள் மட்டும் 1,000 பேருக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிராம ரீதியாக மகளிர் குழுக்களை அமைத்து அந்தந்தக் குழுக்களில் உள்ள மகளிர் அங்கத்தவர்களின் சுயதொழிலுக்கான கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வியங்காடு, கோண்டாவில், கொக்குவில், நெட்டிலிப்பாய், கட்டைப்பிராய், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மட்டுவில், நாயன்மார் கட்டு உட்பட மகளிர் குழுக்களைக் கொண்ட குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு இதுவரை கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (ம-14)

விமானத்துறை தொழில்வாய்ப்பு பற்றிய கருத்தரங்கு யாழ்ப்பாணம் கேற்வே கணினி மற்றும் மொழி வள நிலையத்தில் இடம்பெற்றது. ஏசியன் ஏவியேஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கருத்தரங்கு கடந்த வாரம் இடம்பெற்றது. ஆரம்ப நாளன்று பிரசந்த டி சில்வா மற்றும் லக்ஹித அபயவர்த்தன ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு விமானத்துறை பற்றியும் தொழிற்பயிற்சி பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. (ம-ரி)

வடிகட்டிய தண்ணீரை வழங்கும் ஈ.யு.எவ். தனியார் நிறுவனம்

யாழ்ப்பாணம், மே 14

வடக்கில் கல்லடைசல் உள்ளிட்ட நோய்களைத் தடுப்பதற்காக தனியார் நிறுவனம் ஒன்றின் அனுசரணையில் தண்ணீர் வடிகட்டி மூலமாக நீர் விநியோகிக்கப்படுகிறது.

முதற்கட்டமாக காங்கேசன் துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸாருக்கும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் வடி கட்டிய நீர் இலவசமாக வழங்கப்படுகிறது என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஏக்கநாயக்க தெரிவித்தார். வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஈ.யு.எவ். எனும் தனியார் நிறுவனம் இதற்கு உதவுகிறது. அடுத்தகட்டமாக இளவாலை மற்றும் பருத்தித்துறை பிரதேசங்களுக்கு வடிகட்டிய நீரை வழங்கத் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் நாளொன்றுக்குத் தலா 2 லீற்றர் தண்ணீர் இலவசமாக வழங்கப்படவுள்ளது. பின்னர் ஏனைய இடங்களுக்கு இது விரிவுபடுத்தப்படும். என்றும் அவர் கூறினார். (ம-4)

யாழ்.மின்சார நிலைய வீதியில் சுமார் 400 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கியின் புதிய கட்டடம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வங்கியின் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜொனதன் அலஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து வங்கிச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கக் கிளை திறந்து வைப்பு

கிளிநொச்சி கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் 8 ஆவது கிளை வட்டக்கச்சி சந்தைப் பகுதியில் திறந்து வைக்கப் பட்டது. சங்கத் தலைவர் ப.கணேசலிங்கம் இந்தக் கிளையைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் சங்கத்தின் பொது முகாமையாளர் மு.யோகலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். செல்வக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-18)

மருத்துவர் ஒருவர் மட்டுமே பணியில்
நீண்ட நேரம் காத்திருக்கும் நோயாளிகள்

ஒட்டுசுட்டான் மருத்துவமனையில் அவலநிலை

முல்லைத்தீவு,மே 14

ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் ஒரு மருத்துவர் மட்டும் கடமையில் உள்ளதால் அங்கு செல்லும் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்த வைத்தியசாலையானது சகல வசதிகளையும் கொண்டுள்ளபோதிலும் மருத்துவர் பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேலும் ஒட்டுசுட்டான் வைத்தியசாலை இடப்பெயர்வுக்கு முன்னர் மத்திய மருந்தகமாகச் செயற்பட்டு வந்தது. போர்ச் சூழ்நிலை காரணமாக சேதமடைந்து செயலற்றுக் காணப்பட்டது. மக்கள் மீள் குடியமர்ந்தன பின்னர் இந்த வைத்தியசாலையில் மீள் கட்டுமானங்கள் இடம்பெற்று புதுப்பொலிவு பெற்றுள்ளது. பிரசவ விடுதி உட்பட நோயாளி விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது ஒரு மருத்துவர் மட்டுமே இங்கு கடமையில் உள்ளார். இந்த மாவட்டத்தில் கல்வி கற்று பல்கலைக் கழகம் சென்று மருத்துவராக வெளியேறிய பலர் வேறு மாவட்டங்களிலும், வெளி நாடுகளிலும் பணிபுரிந்து வருகின்றனர். சகோதர மொழி பேசும் மருத்துவர் ஒருவரே நியமனம் பெற்று சேவையாற்றி வருகின்றார். 27 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட இந்தப் பிரதேசத்தில் இந்த வைத்தியசாலையானது மிகவும் அவசியமானதாகக் காணப்படுகின்றது.

> மக்கள் மீள் குடியமர்ந்தன பின்னர் இந்த வைத்தியசாலையில் மீள் கட்டுமானங்கள் இடம்பெற்று புதுப்பொலிவு பெற்றுள்ளது.

தினமும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இங்கு சிகிச்சை பெறச் செல்கின்றனர். ஆனால் ஒரு மருத்துவர் மட்டுமே சிகிச்சை அளித்து வருவதால் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. தற்போது கடமையாற்றி வரும் மருத்துவர் நோயாளிகளுடன் அன்புடன் கதைத்து தம்மால் இயன்ற மருத்துவ சேவையை ஆற்றி வருகிறார். எனவே உள்ளக, வெளிநோயாளர் பகுதிகளைக் கொண்ட இந்த மருத்துவமனைக்கு மேலும் வைத்தியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதே இங்குள்ள அனைவரதும் கோரிக்கையாக உள்ளது.

இந்தக் கோரிக்கை நிறைவு பெறுவதற்கு பொதுச் சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

மந்தகதியில் இடம்பெறும் வீட்டுத் திட்டப் பணிகள்

நெளுக்குளம், மே 14

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கில் இந்திய வீட்டுத்திட்டப் பணிகள் மந்த கதியில் இடம்பெறுவதாகத் தெரிய வருகின்றது.

மணல் அள்ளுவதில் ஏற்படும் தடைகள் காரணமாகவே இந்த நிலை தோன்றியுள்ளதாக வீட்டுத் திட்டப் பயனாளிகள் கவலையுடன் தெரிவித்தனர்.

கடந்த 15 நாள்களுக்கு முன்னர் உரிய தரப்பினரின் அனுமதியைப் பெற்று மணல் அள்ளச் சென்றவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதால் தற்போது மணலை எடுத்து வருவதற்கு மக்கள் அச்சமடைந்த நிலையில் உள்ளனர். இதனால் வேறு தரப்பினரிடம் அதிக பணத்தைக் கொடுத்து மணலைப் பெற வேண்டியுள்ளதாகவும் வீட்டுத் திட்டப் பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் பிரதேச செயலகத்தில் முறைப்படி அனுமதியைப் பெற்று மணலை அள்ளி எடுக்கின்ற போதிலும் சிராட்டிக்குளத்திலுள்ள இராணுவ முகாமிலும் அனுமதி பெற வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்படுவதாகவும் இவற்றை எல்லாம் தாண்டி மணலை எடுத்து வரும்போது வீதியில் காணப்படும் இராணுவத்தினர் அனைவருக்கும் பதில் சொல்ல வேண்டிய நிலை உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மாந்தை கிழக்கில் இந்திய வீட்டுத் திட்டப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

மேலும் இதற்குத் தேவையான மணல் சிராட்டிக்குளத்திலுள்ள பறங்கியாற்றில் அள்ளி எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-402)



உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையினரால் அமைக்கப்பட்ட தண்ணீர்ப் பந்தலில் மக்கள் சிலர் தாகசாந்தி செய்வதற்காகக் காத்திருக்கின்றனர். (க-421)

வீதிகள் புனரமைப்பு

நெளுக்குளம்,மே 14

வவுனியாவிலுள்ள பல உள்ளக வீதிகள் தூரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் வவுனியா நகரத்தை அண்மித்த மற்றும் கிராமங்களைச் சேர்ந்த வீதிகள் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது துரவிக்குளம் வீதி, கல் நாட்டிய குளம் வீதி, நூலக வீதி என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க இன்னமும் பல முக்கிய வீதிகள் புனரமைப்பின்றிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-42)

மரக்கன்றுகள் இலவசமாக



நெளுக்குளம்,மே 14

வவுனியாவில் பாடசாலைகள் தோறும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு மரக்கன்றுகளை இலவசமாக வழங்கும் திட்டத்தின் கீழேயே இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வொன்று வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் பி.நேசராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மா, தோடை, தேசி ஆகிய மரக்கன்றுகள் இங்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-421)

பொழுதுபோக்கு வசதிகளை சிறுவர்களுக்கு வழங்க வேண்டும்

கிளி. அரச அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,மே 14

பெற்றோர்கள் ஆரோக்கியமான பொழுதுபோக்குச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான வசதிகளை சிறுவர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும். அப்போது தான் அவர்களின் எதிர்காலம் நல்ல முறையில் அமையும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி டிப்போச் சந்திப் பகுதியில் அமெரிக்க நிதியுதவியுடன் சுமார் 12 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

மீள்குடியமர்தலின் பின்னர் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் நகரின் மையப் பகுதியில் சிறுவர் பூங்கா இல்லாத குறை காணப்பட்டது. இதனையடுத்து அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் ஆரோக்கியமான பொழுதுபோக்கு வசதிகளைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்கமைவாகவே குறித்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அவர்கள் ஒரு ஆரோக்கியமான வாழ்வைப் பெற முடியும் என்றும் மேலும் தெரிவித்தார். (க-6)

குடிதண்ணீருக்காக அலையும் ஒட்டுசுட்டான் பேராறு மக்கள்

முல்லைத்தீவு,மே 14

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பேராறு கிராமத்தில் குடிதண்ணீர் தேடி மக்கள் அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

பேராறு கிராமத்தில் வசிக்கின்ற அநேகர் விவசாயத் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். பொருளாதார நிலையைப் பொறுத்தவரையில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இவர்கள் காணப்படுகின்றனர்.

இவர்கள் வசிக்கின்ற காணிகளுக்குரிய அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்படவில்லை.



இங்கு ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த குழாய்க்கிணறுகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. இறுதியாக ஒரு குழாய்க்கிணறு மட்டுமே பாவனையில் இருந்தது. தற்போது அதுவும் பழுதடைந்து விட்டது. இதனால் குடிதண்ணீரைத் தேடி நீண்ட தூரம் அலைந்து திரிய வேண்டிய அவலநிலை இங்குள்ள மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் தற்போது கடும் வெப்பம் நிலவி வருவதால் இந்த மக்களின் நிலை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது.

எனவே தமது அவலநிலையைக் கருத்தில் கொண்டு பழுதடைந்த குழாய்க் கிணறுகளைச் சீர் செய்து தருமாறு இந்தப் பகுதி மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

நாள்

வைகாசி-01 புதன்கிழமை 15.05.2013
திதி: பஞ்சமி பி.ப. 03.28 வரை
நட்சத்திரம்: புனர்பூசம் மு.இ. 08.37 வரை
சுபநேரம்: 04.23 - 05.53 வரை
இராகுகாலம்: 11.53- 01.23 வரை

மேஷம்: திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும்.

ரிஷபம்: முக்கிய கோப்புகளை கையாளும்போது அலட்சியமாக இருக்க வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக பிரச்சினைகள் ஏற்படும். எதிலும் நிதானமாக இருங்கள்.

மிதுனம்: கணவன்,மனைவிக் குள் மனம் விட்டு பேசுவீர் கள். வீட்டை புதுப்பிக்க திட்ட மிடுவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

கடகம்: தவறு செய்பவர்களைத் தட்டி கேட்பீர்கள். உடன்பிறந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களை சந்தித்து எதிர்காலம் குறித்து ஆலோசிப்பீர்கள். சிந்தனைத் திறன் அதிகரிக்கும்.

சிங்கம்: புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் லாபம் அதிகரிக்கும். உத்யோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.

கன்னி: உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.

துலாம்: வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். தாய்வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். எதிலும் முன்யோசனையுடன் செயற் படுங்கள்.

விருச்சிகம்: எதிர்பாராத பணவரவு உண்டு. உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு அதிகரிக்கும்.

தனுசு: குடும்ப வருமானத்தை உயர்த்த புது வழி பிறக்கும். உங்களைச் சுற்றி யிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். புதிய நட்பு மலரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

மகரம்: எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். புதிய வேலை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

கும்பம்: குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப் படுவீர்கள்.

மீனம்: சுறுசுறுப்புடன் செயற்பட்டு தேங்கிக் கிடந்த வேலைகளை முடிப்பீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உடல் நலம் சீராகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

சுடோக்கு

எண் விளையாட்டு

		6	8	2		4	9	
						1		
	3	2	1	4				6
8		1	7	6	3	5		
		7				2		
		5	9	1	2	6		7
2				7	1	3	6	
		3						
	6	4		5	8	9		

நேற்றைய சுடோக்கின் விடை

4	8	5	3	1	2	7	6	9
7	2	3	6	9	8	1	4	5
1	9	6	7	5	4	8	3	2
2	1	7	5	6	3	9	8	4
9	3	4	8	2	7	5	1	6
5	6	8	9	4	1	3	2	7
3	5	9	4	8	6	2	7	1
8	4	2	1	7	9	6	5	3
6	7	1	2	3	5	4	9	8

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபபகுதிகள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரண்டு தடவைகள் வராமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானிய சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பிரபலமாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

'களமின்றி தவிக்கின்றனர் திறமையான கவிஞர்கள்'

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட இசைத்துறை மாணவனாகிய க.யோகேஸ்வரனின் மூன்றாவது தொகுப்பான 'காற்றிடை வெளியே' கவிதை நூல் வெளியீட்டுவிழா புதன்கிழமை மருதனார்மடம் நுண்கலைப் பீடத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட மகரகம தேசிய கல்வி நிறுவன அழகியல் துறை உதவி விரிவுரையாளர் ராகினி திருக்குமரன் உரையாற்றும் போது,

"கவிஞன் என்பவன் உருவாக்கப்படுவதில்லை. அவன் பிறக்கின்றான். ஓர் ஆசிரியரால் நடனமாணியை, இசைக் கலைஞனை உருவாக்கிவிட முடியும். ஆனால் கவிஞனை உருவாக்கிவிட முடியாது. அவன் தானே உருவாக வேண்டும்.

திறமையானவர்கள் களமின்றி தவிக்கின்றார்கள்.

அந்த வகையில் யோகேஸ்வரனுக்கு களம் அமைத்துக் கொடுத்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்கு பாராட்டுக்கள்.

பண்பாட்டுடன் ஆளுமையுள்ள ஒருவராக பல்கலைக்கழக மாணவர்கள் வெளிவர வேண்டும். எதிர்காலத்தில் நீங்கள் உங்களை தரமுயர்த்திக் கொள்ள வேண்டும்.-என்றார். (ம-ரி)

மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், உயர்தரப் பரீட்சையில் மாவட்டமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் ஆகியோரை பாராட்டிக் கௌரவித்துள்ளது.

இந்த நிகழ்வு கடந்த வாரம் சங்கத் தலைவர் இ.பூரணச் சந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

சங்க எல்லைக்கு உட்பட்ட 30 வரையான மாணவர்கள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

> உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் ஆகியோரை பாராட்டிக் கௌரவித்துள்ளது

(ம-17)

விடுதி ரீவி நிறுத்தப்பட்டு விட்டதால் தற்போது நிம்மதியான சிகிச்சை

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற நோயாளி கருத்து

தென்மராட்சி, மே 14

தொலைக்காட்சி பெட்டி நிறுத்தப்பட்டதால் நிம்மதியாக மன உளைச்சலின்றி சிகிச்சை பெற முடிந்தது.

இவ்வாறு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை ஐந்தாம் இலக்க விடுதியில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய மிருசுவில் வாசி ஒருவர் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இருதய நோயாளியான நான் ஐந்தாவது தடவையாக சாவகச்சேரி ஆதார வைத்திசாலை ஐந்தாம் இலக்க விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுள்ளேன்.

இந்த முறை நிம்மதியாக மன உளைச்சலின்றி சிகிச்சை பெறமுடிந்ததுடன் ஓரிரு

> இந்த முறை நிம்மதியாக மன உளைச்சலின்றி சிகிச்சை பெறமுடிந்தது

தினங்களுக்கு முன்பாகவே குணமடைந்து வெளியேறியுள்ளேன்.

ஏற்கனவே சிகிச்சை பெற்ற போது விடுதியில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தம் இதயத்தை உறைய வைக்கும். உடலுக்கு அதிர்ச்சி தரக்கூடிய காட்சிகளை நள்ளிரவு 12 மணி வரை ஒளிபரப்புவதால் நோயின் வலி ஒரு புறம். தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தம் மறுபுறம் என நிம்மதியாக உறங்க முடியாத நிலையில் நோயின் நிலையில் அதிகரித்த தன்மை ஏற்பட்டது.

விடுதிக்கு பெரிய மருத்துவர் வரும் போது மட்டும் தொலைக்காட்சிப் பெட்டி நிறுத்தப்படும். மற்றைய வேளைகளில் இயங்கிய வண்ணமே இருக்கும். ஆனால் இம்முறை சிகிச்சை பெறச் சென்ற வேளையில் தொலைக்காட்சிப் பெட்டி நிறுத்தப்பட்டதால் விடுதியிலிருந்த என்னைப் போன்ற நோயாளர் உட்பட அனைத்து நோயாளர்களும் நிம்மதியாக இரவு 9 மணி யுடன் உறங்க முடிந்தது- என்றார்.

இந்த விடயம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

விடுதிகள் மற்றும் வெளி நோயாளர் பிரிவுகளில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த வைத்தியசாலை அபிவிருத்திச் சபையிடம் நான்கு மாதங்களுக்கு முன்னர் 4 சி.டிபிளேயர்கள் வாங்கித் தருமாறு கேட்டுள்ளோம்.

அவர்கள் வாங்கித் தந்ததும் விடுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் மூலம் விழிப்புணர்வு காட்சிகள் காண்பிக்கப்படும் -என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

வலிகாமம் வலயத்தில் சிங்கள தினப்போட்டி

வலி. வடக்கு, மே 14

சிங்கள தினப் போட்டி வலிகாமம் கல்வி வலயத்தில் முதல் தடவையாக பெரும் எடுப்பில் அதிக மாணவர்களின் பங்குபற்று தலுடன் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலை மாணவர்களுக்கு இடையே இரண்டு நாள்கள் இடம் பெற்ற போட்டியில் சுமார் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்துகொண்டதாக வலிகாமம் கல்வி வலய சிங்கள மொழி மூல ஆலோசகர் திருமதி சயந்தன் சிவசக்தி தெரிவித்தார்.

ஆரம்பப் பிரிவில் 54 பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 250 இற்கு மேற்பட்ட மாணவர்களும் இடை நிலை மற்றும் மேற் பிரிவுகளில் இருபது பாடசாலைகளை சேர்ந்த 350இற்கும் மேற்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டுள்ளார்கள். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் கடந்த இரண்டு நாள்களாக போட்டிகள் இடம்பெற்றன. போட்டியில் எழுத்தாக்கம், பேச்சு, கட்டுரை, நாடகம், குழுப்பாடல் என்பன இடம்பெற்றன.

(ம-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கைதடி முதியோர் இல்ல விடுதிகளுக்கு இலக்கங்கள்

குருநகர்,மே 14

கைதடி அரச முதியோர் இல்லத்தின் விடுதிகளை இனம் காணும் நோக்குடன் அந்த நிர்வாகத்தின் ஏற்பாட்டில் பெயர்ப் பலகைகள் தொங்க விடப்பட்டுள்ளன.

ஆண்கள் விடுதிகள், பெண்கள் விடுதிகள் எனப் பொறிக்கப்பட்டு 1,2,3,10,11, ஆண்கள் விடுதிகள் எனவும், 4,5,6,7, பெண்கள் விடுதிகள் எனவும் நுழைவு வாயிலில் பெயர்ப் பலகை உள்ளது.

ஒவ்வொரு விடுதி இலக்கங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதால் அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ளவர்களைச் சந்திக்க வரும் உறவினர், நண்பர்கள் அவர்களிடம் இலகுவாகச் செல்லக்கூடியதாக உள்ளது. (ஒ-51)

முல்லைத்தீவு அதிகஷ்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள்

கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு வழங்கவில்லை எனக் கவலை

ஆளுநர், கல்வி அமைச்சுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், மே 13

முல்லைத்தீவில் அதிகஷ்டப் பாடசாலைகளாக 11 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்ட போதும் அங்கு கற் பிக்கும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை என்று கவலைத் தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண ஆளுநர் மற்றும் வடமா காணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் அந்தப் பாடசாலைகளை அதி கஷ்ட பாடசாலைகளாக இன்னும் அங்கீகரிக்காமையாலேயே இந்த நிலைமை ஏற் பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதை அங்கீகரித்து உடனடியாக அங்குள்ள அதிபர், ஆசிரியர்களுக்கு கஷ்டப் பிரதேச கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வடக்கு ஆளுநருக்கு கடந்த 3 ஆம் திகதி கடிதம் மூலமாகக் கோரியுள்ளது என்று சங்கத் தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

கோப்பாப்பிலவு ஜி.ரி.எம்.எஸ்., ஆறு முகத்தான் குளம் ஜி.ரி.எம்.எஸ்., கொக்குத் தொடுவாய், ஜி.ரி.எம்.எஸ், கருநாட்டுக் கேணி, ஜி.ரி.எம்.எஸ்., முள்ளிவாய்க்கால் கிழக்கு, ஜி.ரி. எம்.எஸ்., முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட வித்தியாலயம், வலைஞர் மடம், ஜி.ரி.எம்.எஸ்.அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயம், புதுமாத்தளன் ஆர்.சி., ஆனந்தபுரம் ஜி.ரி.எம்.எஸ்., முல்லை. அரசரட்ணம், ஜி.ரி.எம்.எஸ்., சிவநகர் தமிழ் வித்தி யாலயம், புதுக்குடியிருப்பு ஆர்.சி மற்றும் ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே அதிகஷ்டப் பாடசாலைகளாகத் தெரிவு செய் யப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி 28 ஆம் திகதி இந்தத் தெரிவு இடம்பெற்றது. ஆசிரிய தொழிற் சங்கங்களும், கல்வி அதிகாரிகளும் இணைந்து இந்தப் பாடசாலைகளை அதி கஷ்டப் பாடசாலைகளாகத் தெரிவு செய்தன.

ஆனால் இன்று வரை இதை ஆளு நரும், வடக்கு கல்வி அமைச்சின் செயலரும் அங்கீகரிக்கவில்லை என்று சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது:

மீள்குடியமர்வின் பின்னர் அதிகஷ் டப் பாடசாலைகளாக இவை தெரிவு செய்யப்பட் டுள்ளன. இது தொடர்பான விடயங்களை கட்டமைப்புக் குழு எமக்கு வழங்கும். அதனை அங்கீகரித்து நாம் கொடுப் பனவுகளை வழங்குவோம்.

இன்னும் இரண்டு வாரங்களில் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கி விடுவோம் -என்றார்.

(ம-4)

பளை நகரில் மைதானம்
10 மில்லியன் செலவில் புனரமைக்கத் திட்டம்

பளை,மே 14

பளை நகரப் பகுதியில் உள்ள பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானம் பத்து மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

பிரதேசத்துக்கென ஐந்து ஏக்கர் காணியில் விளையாட்டு மைதானம் இருந்த போதிலும் அது புனரமைக்கப்படாததால் பிரதேசத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் பயிற்சிகளை மேற் கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்கின.

இந்த விடயம் தொடர்பாக பிரதேச விளையாட்டுக் கழகங்கள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரிடம் முறையிட்டதை அடுத்து பொருளாதார அபி விருத்தி அமைச்சின் புறநெகும திட்டத்தின் கீழ் 9.9 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிதி மூலம் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டு வருகிறது. அத்துடன் மைதானத்தைச் சுற்றி வேலி அமைப்பதுடன் அங்கு அரங்கும் நிர்மாணிக்க பிரதேச சபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

18 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பளைப் பிரதேசத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியாத நிலையும் பிரதேசத்தில் உள்ள 20 க்கு மேற்பட்ட விளையாட்டுக் கழகங்கள் போதிய பயிற்சிகளைப் பெறமுடியாத நிலையும் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பழைய மாணவியர் சங்க கொழும்புக் கிளையால், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. "வறுமையும் திறமையும்" என்ற அடிப்படையில் 3 லட்சம் ரூபா நிலையான வைப்பிலிட்டு பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது. நிகழ்வில் வடமராட்சி கல்விப் பணிப்பாளர் அதிபரிடம் காசோலையைக் கையளிக்கின்றார். (ந-253)

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் அனைத்து வீதிகளுக்கும் பெயர்ப்பலகை

தென்மராட்சி,மே 14

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் பெயர்ப் பலகைகள் பொருத்தப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை எஸ்.லோன் குழாய் உற்பத்தி நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிறுவனத்தினரால் 'மேலும் ஒரு சேவை' என்னும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஏ-9 வீதியில் நகர சபை எல்லைக் குட்பட்ட மீசாலை தொடக்கம் நுணாவில் சந்தி வரையான சுமார் 4 கிலோ மீற்றர் நீள மான வீதியில் இரு மருங்கிலும் உள்ள வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் நடப்பட்டன.

சபை எல்லைக்குட்பட்ட ஆதனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதையடுத்து நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார். அதனை அடுத்த சபை எல்லைக்குட்பட்ட 158 வீதிகளுக்கும் பெயர்ப்பலகை போடுவதற்கு எஸ்.லோன் குழாய் உற்பத்தி நிறுவனத்தினர் முன் வந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ந-9)

சுகாதாரக் குழு அமைப்பு

வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதியில் திண்மக் கழிவகற்றல் தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்கும் பொருட்டு, உறுப்பினர்கள் 7 பேரைக் கொண்ட சுகாதாரக் குழு ஒன்று சபையால் தெரிவு செய்யப் பட்டது.

சபைத் தலைவர் ந.அனந்தராஜ் தலைமையில் நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுகாதாரக் குழு வைத் தெரிவு செய்வதற்கான தீர்மானத்தை உறுப்பினர் கு. சே.குலநாயகம் முன்மொழிய உறுப்பினர் ம.மயூரன் அதனை வழி மொழிந்தார். உப தலைவர் க.சதீஸ் தலைமையில் உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ம.மயூரன், க.ஜெயராசா, கோ.கருணானந்தராசா, பொ.தெய்வேந்திரன், இகைலாஜினி ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். (ந-8)

புதிய உறுப்பினருக்கு சபையில் வரவேற்பு

வடமராட்சி, மே 14

வல்வெட்டித்துறை நகரசபையில் ஆளும் கட்சியின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்ட கோ.கருணானந்தராசா முதன் முதலாக சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது சபை உறுப்பினர்களால் வரவேற் கப்பட்டார்.

சபையின் ஆளும்கட்சி உறுப் பினராக இருந்த தி.ஜெகதீஸ் என்பவர் கடந்த மூன்று கூட் டங்களுக்கு மேலாக சபைக் கூட்டத்தில் கலந்து கொள் ளாததைத் தொடர்ந்து அவர் உறுப்புரிமையை இழந்தார்.

இதனைத் தொடர்ந்து தி.ஜெக தீஸின் வெற்றிடத்துக்கு ஆளும் கட்சிப் பட்டியலில் அடுத்த நிலையில் இருந்த கோ.கருனானந்தராசா வல்வெட்டித் துறை நகரசபை உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினால் தேர்தல் திணைக்களத்துக்கு பரிந்துரை செய்யப் பட்டிருந்தார்.

சபையின் கூட்டத்தில் இவர் முதன்முதலாகக்கலந்துகொண்ட போது சபை உறுப்பினர்கள் அவரை வரவேற்று உரையாற் றினர். (ம-8)

திருட்டுப் பொருள்கள் எவையும் மீட்கப்படவில்லை

பொலிஸார் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மையில் இடம் பெற்ற திருட்டுக்கள் தொடர்பில் பொலிஸார் இதுவரை எவரையும் கைது செய்யவில்லை. திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்படவில்லை என்று அறிவித்துள்ளதாக பதில் பணிப் பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலையில் சில வாரங்களுக்கு முன்னர் தண் ணீர் இறைக்கும் மின்மோட்டார்களின் பித்தளைப் பாகங்களைத் திருடிச் சென்றுள்ளனர். அதற்கு முன்னர் ஜெய்க்கா திட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த ஒலி எழுப்பும் கருவிகளைத் திருடியுள்ளனர்.

இதுவரை திருட்டுப் பொருள்கள் எதுவும் மீட்கப்படவில்லை. சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை.

திருடப்பட்ட மின்மோட்டார் பாகங்கள் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா என்று பணியாளர்கள் தெரிவித்தனர். (ம-4)

மதுப்பிரியரின் வீதியாக மாறிய கந்தப்பசேகரம் வீதி

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணம் கந்தப்பசேகரம் வீதி மதுப்பிரியர்களின் கவனத்தை ஈர்த்துள்ள வீதியாக மாறிவிட்டது என்று அந்தப் பகுதியில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர் கூறினார்.

மானவர் தேவைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் பற்றிய கலந்துரையாடல் யாழ். மாநகரசபை மண்டபத்தில் முதல்வர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மேற்கண்டவாறு கூறப்பட்டது.

கந்தப்பசேகரம் வீதியில் பெருங் குடிமக்கள் மதுப்போத்தல்களுடன் நடமாடி வருகின்றனர்.

கலாசார சீர்கேடுகளின் மையமாக இந்த வீதி மாறிக் கொண்டிருக்கிறது. இது தொடர்பில் கூவனம் தேவை. உரியவர்கள் இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (ம-7)

வாழைப் பழத்தின் விலையில் வீழ்ச்சி



குருநகர்,மே 14

யாழ்ப்பாணத்தில் வாழைப் பழத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. குருநகர் பொதுச் சந்தையில் இதரை, கதலி வாழைப்பழங்கள் கிலோ ரூபா 50 ஆக விற்பனை செய்யப்படுகின்றன.கடந்த வாரங்களில் இவற்றின் விலை ரூபா 60 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.(ஒ-51)

இரு வீதிகள் புனரமைப்பு

பளை,மே 14

பளைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இரு வீதிகள் 'புற நெகும' திட்டத்தில் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதியினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. இயக்கச்சி விநாயகபுரம் வீதி, கச்சார் வெளி- புலோப் பளை வீதி ஆகிய இரு வீதிகளுமே புனரமைக்கப்படவுள்ளன. (ந-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணை இழுத்துச் சென்ற முதலை

கொழும்பு,மே 14

மஹியங்கனை, உல்கிட்டிய ஓயாவில் குளித்துக் கொண்டிருந்த பெண் ஒருவரை முதலை பிடித்துச் சென்றுள்ளது. தனது கணவன் மற்றும் பிள்ளைகள் இருவருடன் குறித்த பெண் குளித்துக் கொண்டிருக்கும்போதே இந்த விபத்துக்கு முகங் கொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. முதலையிடமிருந்து பெண்ணை மீட்பதற்கான நடவடிக்கைகளில் தம்முடன் இணைந்து படையினரும் ஈடுபட்டனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

மரண அறிவித்தல்

சந்தாம்பிள்ளை வேதநாயகம்



மன்னார் உயிலங்குளத்தைப் பிறப்பிடமாகவும், மருதங்குளம் ஓமந்தையை வதிவிடமாகவும் கொண்ட சந்தாம்பிள்ளை வேதநாயகம் 11.05.2013 அன்று அகால மரணமடைந்தார்

அன்னார்காலஞ்சென்ற வர்களான திரு.திருமதி சந்தாம்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், லலிதாம்பாளின் அன்புக் கணவரும், கலைச்செல்வன் (ஆசிரியர்), கலையரசி (வாணி), தமிழ்ச்செல்வன் (மதன்), லாவணியா (ஜெசி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி (சுகந்தி-ஆசிரியை), குகனேஸ்வரன் (குகன்), கலையரசன் (ரகு) ஆகியோரின் மாமனும், நிலா, கஜாணன், அகிநிதா, பவிசா ஆகியோரின் அன்புப் பேரனும், பாக்கியராசா, நாகராசா, மலர், ஞானப்பிரகாசம், கபிரியேல், பத்திநாதன், யோகராசா ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓமந்தை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதங்குளம், ஓமந்தை. [3517/6]

தகவல்: குடும்பத்தினர்.

அதிகாலை வேளை கிழக்கு மக்களை பீதியடைய வைத்தது 'மகாசேன்'

மரங்கள் வீழ்ந்தன; மீனவர் தொழிலுக்குச் செல்லவில்லை

அம்பாறை, மே 14

கிழக்கில் திருகோணமலைக்கு வடக்கே வங்காளவிரிகுடாவில் நகர்ந்து கொண்டிருந்த மகாசேன் சூறாவளி நேற்று கிழக்கு மக்களைப் பீதிக்குள்ளாக்கியது.

நேற்று அதிகாலை மூன்று மணிக்கு கிழக்கில் கடலை அண்டிய கரையோரப் பிரதேசமெங்கும் சூறாவளிக் காற்று வேகத்தில்வீசத்தொடங்கியது.

இடி, மின்னல், மழையுடன் வீசிய சூறாவளிக் காற்றால் வீடுகளின் கூரை ஓடுகள், தகடுகள் உடைந்து சேதமுற்றதுடன் மரங்கள் விழுந்தும், மின் கம்பங்கள் சாய்ந்தும் சேதங்களேற்பட்டுள்ளன.

அதிகாலை மூன்று மணிக்கே



விழித்துக் கொண்ட மக்கள் பீதியுடன் விடியும் வரை விழித்திருந்து அவலங்களுக்குள்ளாகினர்.

இந்தப் பிரதேசங்களில் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டதால், மீனவர் கடலுக்குச் செல்லவில்லை. எனினும் சில இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன் பிடிப் படகுகள் சேதமுற்றதுடன், கடலில் மூழ்கியும் காணப்பட்டன.

எனினும் குறித்த மகாசேன் சூறாவளி அபாயம் கிழக்கில் தொடரும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளதால் மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

நிந்தவூரில் பல இடங்களில் மின்கம்பங்கள் முறிந்து சாய்ந்துள்ளதுடன் , நிந்தவூர் கடற்கரையில் நபர் ஒருவரின் சடலம் ஒன்றும் கரை ஒதுங்கியுள்ளது. நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதிக்கு முன்பாக கூரையிடப்பட்டிருந்த கூரைத் தகடுகள் கீழே வீழ்ந்து சேதங்களேற்பட்டதால், வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று நோயாளர்கள் அச்சத்தில் வெளியேறிச் சென்றனர். பிரதான வீதிகள் சிலவற்றில் மரங்கள் சாய்ந்து போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நேற்றுப்பிற்பகல் 11.30 மணி அளவில் கடும் காற்று வீசியதோடு மழையும் பெய்து வருவதால் மானவர்கள் பாடசாலைகளில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். (ச-30)

நீங்கா நினைவலைகளில்....

ஐந்தாம் ஆண்டு

செல்வன்
சண்முகநாதன் சஞ்சீவன்
(மாணவன், கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, திருவையாறு மகா வித்தியாலயம்)

துளிராய்
14.02.1986

விதையாய்
14.05.2008

மூன்றாம் ஆண்டு

செல்வன்
சண்முகநாதன் சுஜீவன்
(பொறியியல் பீட மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகம்)

துளிராய்
17.01.1989

விதையாய்
27.05.2010

நேற்று எம்முடன் இருந்து
நெடுந்தூரம் காற்றிடை சென்றீரோ?
ஆற்றிடா துயரத்தால் அரற்றுகிறோம்–எம் செல்வங்களே
வற்றிடா நதியாய் எமக்கு அன்பு காட்டி
விழிநீர் சொரிய விதிவசத்தால் சென்றதெங்கே?
விம்மியழுதபடி விழிகளில் உமை சுமந்தபடி
நாம் .....

முருகன் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
66/2, திருவையாறு, கிளிநொச்சி.

(37100)(10.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியிலிருந்து இன்று பாதயாத்திரை ஆரம்பம்

கதிர்காமக் கந்தனை நாடி

வடமராட்சி, மே 14

கதிர்காமக்கந்தன் பெருந்திருவிழாவை ஒட்டி வருடந்தோறும் நடைபெற்று வரும் பாதயாத்திரை இம்முறை இன்று செவ்வாய்க்கிழமை தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்தி விநாயகர் கோயில் தர்மகர்த்தாவான வேல்சாமி என அழைக்கப்படும் ச.மகேஸ்வரன் தலைமையிலான பக்தர்கள் குழுவினர் இந்தப் பாதயாத்திரையை கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் ஊடாக 55 தினங்கள் பயணித்து கதிர்காமக் கந்தன் கொடியேற்ற தினமான ஜூலை 8 ஆம் திகதியன்று கதிர்காமத்தைச் சென்றடைவார்கள்.

இன்று செல்வச்சந்நிதி கோயிலில் இருந்து ஆரம்பமாகும் பாதயாத்திரை அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், வாதரவத்தை, மட்டுவில், இராமாவில், கொடிகாமம், பளை, உமையாள்புரம், பரந்தன், முரசுமோட்டை, தர்மபுரம், விசுவமடு, வள்ளிபுனம் ஊடாக எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பை அடையும். அங்கிருந்து கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், கூடான்முறிப்பு, முல்லைத்தீவு, வற்றாப்பளை, ஊற்றங்கரை, மாமூலை, குமுழமுனை, செம்மலை, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், தீரியாய், குச்சவெளி, நிலாவெளி ஊடாக ஜூன் 7 ஆம் திகதி திருகோணமலையை சென்றடையும்.

மறுநாள் 8 ஆம் திகதி அங்கிருந்து புறப்படும் பாதயாத்திரைக் குழுவினர் சீனன்குடா, மூதூர், கிளிவெட்டி, வாகரை, சந்திவெளி ஊடாக கிண்ணையடியை அடைவர். அங்கிருந்து சித்தாண்டி, செங்கலடி, மாமாங்கம், கல்லடி, களுவாஞ்சிக்குடி ஊடாக மண்டூர், கல்லாறு வழியாகப் பாண்டிருப்பைச் சென்றடைந்து 24 ஆம் திகதி காரைதீவை அடைவர்.

காரைதீவில் இருந்து அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில், பாணமை ஊடாக ஜூலை முதலாம் திகதி உகந்தை மலை முருகன் ஆலயத்துக்கு யாத்திரைக் குழுவினர் போய்ச் சேருவர். அங்கிருந்து காடுகள் வழியாக முழுக்கன் நாவலடி, வியாழை அம்மன் ஆறு, வீரச்சோலை வழியாக ஜூலை 8 ஆம் திகதி கதிர்காமத்தை அடைவார்கள். (ஒ-8)

அன்னாசிப்பழ சீசன் ஆரம்பித்துள்ளதையடுத்து யாழ்.நகரில் பல இடங்களிலும் பெருமளவில் அன்னாசிப்பழங்கள் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு பழம் 60 ரூபா முதல் 120 ரூபா வரை விற்பனையாகிறது. (ந-135)

பெரும்பாலும் வானம் மேகக் கூட்டத்துடன் காணப்படும்.

பருத்தித்துறைக்கு புதிய சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்

வடமராட்சி, மே 14

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு புதிய சத்திர சிகிச்சை வைத்திய நிபுணராக வவுனியா அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்டர் பி.பாஸ்கரன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வைத்தியசாலையில் முன்னர் பணியாற்றிய சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.கிரிதரன் தெல்லிப்பழை புற்றுநோய் ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (ந-8)

சமய சந்நிதிகளில்

நீர்வேலி வடக்கு சப்த கன்னிகள் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவமும், 108 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. தினமும் ஆலய பூசைகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஆவரங்கால் மேற்கு ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவம் நடைபெறும். தினமும் காலைப் பூசைகள் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும். (ந)

★ ★ ★

சாவகச்சேரி சப்பச்சிமாவடிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-9)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி ஆதீன மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-9)

★ ★ ★

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 23 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந)

★ ★ ★

நாரந்தனை- சரவணை கர்ணந்தோட்டம் சிவசுப்பிரமணிய ஆலய பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட மன்றுளாடும் விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ந-135)

சனசமூக நிலையங்களுக்கு இன்னும் இல்லை நன்கொடை கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு உள்ளூராட்சி சபைகளினால் வழங்கப்படும் நன்கொடைப் பணத்தின் கடந்த வருடத்துக்குரிய நன்கொடைக் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தந்த உள்ளூராட்சி சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கு அவற்றின் தரத்துக்கு ஏற்ற வகையில் இந்தக் கொடுப்பனவு வருடாந்தம் வருட இறுதியில் வழங்கப்பட்டு வருவதாகவும் கடந்த வருடத்துக்குரிய கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக உள்ளூராட்சி சபை ஒன்றுடன் தொடர்பு கொண்டபோது:-

சனசமூக நிலையங்களுக்குரிய நன்கொடை வருடாவருடம் பிராந்திய உள்ளூராட்சி திணைக்களத்தினால் அனுப்பப்பட்டு சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த வருடத்துக்குரிய நன்கொடை நிதி இதுவரை தமக்குக் கிடைக்காததால் தம்மால் அதனை வழங்க இயலவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

வைகாசிப் பெருவிழா

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வைகாசிப்பெருவிழாநடை பெறவுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு சந்நிதி முருகன் கோயிலில் நடைபெறும் இந்தப் பெருவிழா விசேட பூஜை அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகின்றது. சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவை நிர்வாகக் குழு உறுப்பினர் கே.அருணகிரிநாதன்தலைமையில்இடம்பெறும். பெருவிழா நிகழ்வில் வீணை, வயலின், மிருதங்க இசைகளோடு சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறும். (ந-9)

பணியாளர்கள் தேவை

எமது நிறுவனத்தின் புதிய கிளைகளான வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு சிங்களம் கதைக்கத் தெரிந்த, கணினி அறிவுள்ள பெண்கள் தேவை. தொ.பே: 071 598 0980, 071 872 2353, 045 498 0980 (36934)(6.11)

பணியாளர் தேவை

ஹாட்வெயர் கடையில் முன் அனுபவம் உள்ள தனியாகக் கடையைக் கொண்டு நடத்தக் கூடிய பணியாளர் தேவை.

தொ.பே: 004 178 658 4117 (SMS செய்யவும்) (C/9190)(6.11)

வீடு வளவு விற்பனைக்கு

தண்ணீர் தொட்டி வீதி, மூளாய் தெற்கு சுழிபுரத்தில் 14 ¼ பரப்பு வீடு வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவும்: T.P: 021 4912180 (37244)(10.6)

விற்பனைக்கு

குழாய் கிணறு அடிக்கும் இயந்திரங்கள்

Drilling rig 03 விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 959 1425 (37309)(5.6)

திறப்பு விழா பிற்போடப்பட்டது

புதிதாக அமைக்கப்பட்ட பாலையூர் இறங்குதுறையின் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ். கணேசமூர்த்தி அறிவித்துள்ளார்.

திறப்புவிழாவுக்கானதிகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ந-117-135)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி சுதாமதி சிவானந்த மூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்

லீலாவதி கந்தையா

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீரைக் காணிக்கை ஆக்குவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் கழகம்,
யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை, நீர்வேலி.
(C/9189)(6.11)

மரண அறிவித்தல்

சுந்தரம் நாகராசா (பர்ரா)

(ஓய்வுபெற்ற இ.போ.ச.நடத்துநர்)

மறவன்புலோ மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் நாகராசா நேற்று (13.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கண்மணியின் பாசமிகு கணவரும், சிவகுமாரனின் பாசமிகு தந்தையும், தம்பித்துரை (ஓய்வுபெற்ற அதிபர் - சுன்னாகம்), மாணிக்கவல்லி (கொழும்பு), பாலசிங்கம் (இ.மி.சபை - யாழ்), கணபதிப்பிள்ளை (கொழும்பு), உருத்திராவதி (மறவன்புலோ), சண்முகலிங்கம் (கனடா), சந்திரன் (கனடா), ஜெயசிங்கம் (மறவன்புலோ), ஜேந்தினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகலிங்கம், சரஸ்வதி, கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், தர்சிகாவின் மாமனும், மதுஷா, இந்துஷா, டினோஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ தனிப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மறவன்புலோ மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: சிவகுமாரன் (மகன்)
077 229 9344

(2.6)(36583)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஜித் என்ர பிறைசஸ்
விற்பனையாளர் தேவை

எமது நிறுவனத்திற்கு சிங்களம் பேசத் தெரிந்த விற்பனையாளர் தேவை.
மாதாந்தம் ரூபா 30,000/=வரை சம்பாதிக்கலாம்.
தொடர்பு: 92 ஆவது சந்தி, திருகோணமலை வீதி,கந்தளாய்.
077 159 9484,021 227 0586
(C/9279)(6.11)

கைதடிப் பாலத்தில் விபத்து

கைதடிப் பாலத்தில் இரண்டு பயணிகள் வாகனங்கள் நேற்று நேருக்கு நேர் மோதிக் கொண்டன. அவற்றில் பயணித்த பலர் காயமடைந்தனர். காயமடைந்த பயணிகள் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். காயமடைந்த நால்வர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.வாகனங்கள் விபத்துக்குள்ளானதை அடுத்து சிறிது நேரம் பாலம் ஊடாக போக்குவரத்து தடைப்பட்டது. (ஒ-9)

மின்தடையால் வைத்திய சேவை நேற்று பாதிப்பு

தென்மராட்சி,மே 14

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று ஏற்பட்ட மின்தடையால் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் வைத்திய சேவைகள் பாதிக்கப்பட்டன. பிரதேசத்தில் மின்தடை ஏற்படும் நேரங்களில் இயங்கி வந்த ஜெனரேற்றரும் பழுதடைந்த தால் வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு வரப்பட்ட நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சிறுகதைவேளை

சுன்னாகம் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி மாணவர்களுக்கான சிறுகதை வேளையும், சிறுவர்களுக்கான நூல் கண் காட்சியும் நாளை புதன்கிழமை சுன் னாகம் சிவன் முன் பள்ளியில் நடை பெறவுள்ளது.

சுன்னாகம் பிரதேச சபை உறுப்பினர் க.கருணைநாயகம் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் சுன்னாகம் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர் கள் பங்கு பற்றுவர். (ம-14)

வேலைக்கு ஆள் தேவை

கோழிப்பண்ணையில் தங்கி வேலை செய்யக்கூடிய ஆள்கள் தேவை.
NEW R.S.K FARM,UDUVIL
077 039 1517, 077 392 7132
(36537)(6.11)

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருவிழா உற்சவம்-2013

வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் (27.05.2013) திங்கட்கிழமை பொங்கல் திருவிழாவுடன் ஆரம்பமாகி, 09.06.2013 வரை விசேட நிகழ்ச்சிகளுடன் நடை பெறும்.

தேர்த்திருவிழா- 08.06.2013 சனிக்கிழமை
தீர்த்தத் திருவிழா-09.06.2013 ஞாயிற்றுக்கிழமை

ஆலய சுற்றாடலில் தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரஞ் செய்ய விரும்பும் வியாபாரிகள் இடங் களைப் பதிவு செய்து கொள்வதற்காக 19.05.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர், ஆலய பரிபாலன சபை,
சிட்டிவேரம் கண்ணகை அம்மன்.
(C/9192)(6.11)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 18.10.1964 — மறைவு 16.04.2013

அமரர் கனகசபை யோகேந்திரன்

கடந்த 16.04.2013 செவ்வாய்க்கிழமை அமரத்துவ மடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் கனகசபை யோகேந்திரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 16.05.2013 வியாழக்கிழமை அதிகாலை 5 மணியள வில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அல்வாய் மேற்கு, திக்கம். குடும்பத்தினர்.
(36536)(10.6)

புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் நிலைய திறப்பு விழா அழைப்பு

15.05.2013 புதன்கிழமை மாலை 4.00மணிக்கு A-35 பரந்தன் வீதி,புதுக்குடியிருப்பில் புதிதாக அமைக்கப்பெற்ற மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளதால் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது நிலையத்தில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்,ஒயில் என்பன விற்பனை செய்யப்படுவதுடன், 24 மணி நேர சேவையும் நடைபெறும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

தலைவர்,பொதுமுகாமையாளர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
(சி/9194)(5.6)

3rd edition

சஞ்சாரக உதாவ
Sancharaka Udawa
2013

சஞ்சாரக உதாவ
சுற்றுலாத்துறை விரிவாக்கல் ஒன்றுகூடல் சந்தை

சர்வதேச பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் எதிர்வரும் (2013 யூன் மாதம் 14ஆம் திகதி) வெள்ளிக்கிழமை (15 ஆம் திகதி) சனிக்கிழமை ஆகிய திகதிகளில் காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறும்.

ஒருங்கே
- தொழில்துறை வழிகாட்டல் நிகழ்ச்சி நிரல்
- கட்டுரை போட்டி

Exhibition Secretariat - BConnected (Pvt) Ltd
No: 100, Jawatta Road, Colombo 05, Sri Lanka
Tel: 011 3158416, 2507345 Fax: 011 2507345
E-mail: info@sancharakaudawa.lk www.sancharakaudawa.lk

ஏற்பாட்டாளர்கள் — ஊடக ஆதரவாளர்கள் — நிகழ்ச்சி முகாமையாளர்கள் — நிகழ்ச்சி நடைபெற இடம் தந்து உதவியவர்கள்

Slaito — Ministry of Economic Development — sila — SL — BMICH

METHODIST GIRLS' HIGH SCHOOL
POINT PEDRO
OLD GIRLS' ASSOCIATION
COLOMBO BRANCH

நம் வருங்காலச் சந்ததிகள் தொடர்ந்து கையேந்தி வாழாமல், கைகொடுத்து வாழ பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பழைய மாணவர் சங்கக் கொழும்பு கிளை அங்கத்தவர்களாகிய நாம் உங்களிடம் கையேந்தி நிற்கின்றோம். வடமராட்சி கிழக்கு முதல் வன்னி வரை எமது கல்விப் பயணம் தொடரும். 08.05.2013 ஆம் திகதி முதற் பாடசாலையாக, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கு ரூபா 300,000/= (மூன்று இலட்சம்) நிலையான வைப்பிலிடப்பட்டு, அதன் வட்டிப்பணம் திறமையும் வறுமையும் என்ற அடிப்படையில் கொடுக்கப்படும்.

எமது கல்விப் பயணம் தொடர உங்களால் இயன்ற நிதியுதவி வழங்கி எங்களை ஊக்குவிக்கும்படி வேண்டுகின்றோம்.

எமது கணக்கு இலக்கம் - 1-0070-1-9662-2
M.G.H.S., O.G.A. COLOMBO. N.S.B.WELLAWATHA.

பற்றுச்சீட்டுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:
T.P.: 077 902 2140, 077 180 7429
(36368)(6.6)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலார்டின் அதிரடியில் அடங்கியது சன்றைசர்ஸ்

பொலாட்டின் அதிரடி ஆட்டத்தின் மூலம் சன்றைசர்ஸை வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ் அணி. ஐ.பி.எல் தொடரின் 62ஆவது போட்டி நேற்று மும்பையில் இடம் பெற்றது. இதில் ஹைதராபாத் சன்றைசர்ஸை அணியும் மும்பை இந்தியன் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சன்றைசர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அணிசார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பார்த்திப் பட்டேலும் டுவானும் களமிறங்கினர். ஆரம்பம் முதலே அதிரடியில் இறங்கிய இந்த இணை 38 ஓட்டங்களை பெற்றபோது பட்டேல் (26) ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்தில் வெளியேறினார். அடுத்து வந்தார் விஹாரி. இருவரும்சிறந்தஇணைப் பாட்டத்தை அணிக்கு கொடுத்தனர். 41 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 59 ஓட்டங்களை குவித்தார் டுவான். பதிலுக்கு மறுமுனையில் விஹாரியும் சரவெடியாய் வெடித்தார். அணி 111 ஓட்டங்களை பெற்றிருந்தபோதுடுவான் 59 ஓட்டங்களுடன் ஜோன்சனின் பந்தில் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டார். விஹாரியுடன் இணைந்தார் வைற்.



கடந்த போட்டிகளில் சிறப்பாக பிரகாசிக்காத வைற் இந்தப் போட்டியில் வெளுத்து வாங்கினார். 3 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 43 ஓட்டங்களை விளாசினார் வைற். அணி 166 ஓட்டங்களை பெற்றபோது விஹாரி (41) ஓட்டங்களுடன் மலிங்கவின் வேகத்தில் வீழ்ந்தார். இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 178 என்ற மிகப்பெரும் இலக்கை மும்பைக்கு எதிராக நிர்ணயித்தது சன்றைசர்ஸ்.

மும்பை அணி சார்பில் பந்துவீச்சில் மலிங்க 2 இலக்குகளையும், ஜோன்சன் ஒரு இலக்கையும் சரித்தனர். 179 என்ற வெற்றி இலக்குடன் மும்பையின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஸ்மித்தும், சச்சினும் களமிறங்கினர். மிகப்பெரும் இலக்கை விரட்டிய இந்த இணை வேகமாக ஓட்டங்களைச் சேர்த்தது. அணி 26 ஓட்டங்களைப் பெற்றபோது ஸ்மித் (21) ஓட்டங்களுடன் சர்மாவின் பந்தில் போல்ட்டானார். சச்சினுடன் இணைந்தார் கார்த்திக். இருவரும் வேகமாகவும் அதிரடியாகவும் ஓட்டங்களைப் பெற்றனர். அணி 94 ஓட்டங்களைப் பெற்றபோது சச்சின் (38) ஓட்டங்களுடன் ஆடுகளத்தில் இருந்து வெளியேறினார்.

மும்பை அணிக்கு இலக்குகள் கைவசம் இருந்தாலும் வெற்றியிலக்கு தொலைவிலேயே இருந்தது. கார்த்திக் (30) ஓட்டங்களுடன் சர்மாவின் பந்தில் வைற்றிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ரோஹித் சர்மாவுடன் இணைந்தார் ராயூடு. எனினும் வந்த வேகத்திலேயே ராயூடு (2) பவிலியன் திரும்பினார். அணி 99 ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் 3 இலக்குகளை இழந்து தடுமாறியது. வந்தார் பொலார்ட். வெற்றிவாய்ப்பு இதுவரை சன்றைசர்ஸ் அணி பக்கமே இருந்தது. புதிதாக வந்த பொலார்ட் சரவெடியாக வெடித்தார். சன்றைசர்ஸ் அணி பந்து வீச்சாளர்களின் பந்துகள் பொலர்ட்டின் துடுப்பில் பட்டு வானத்தை நோக்கி சீறிப் பாய்ந்தன. 8 ஆறு ஓட்டங்கள் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 27 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 66 ஓட்டங்களை விளாச, வெற்றிவாய்ப்பு மும்பை பக்கம் சரிந்தது. 19.3 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது மும்பை.

பொலார்ட் (66), ரோஹித் சர்மா (20) ஓட்டங்களுடன் களத்திலிருந்தனர். பந்துவீச்சில் சன்றைசர்ஸ் அணி சார்பில் சர்மா இரு இலக்குகளையும், இஷாந் சர்மா ஒரு இலக்கையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக அதிரடியாக ஆடி வெற்றிக்கு வித்திட்ட பொலார்ட் தெரிவானார். (16)

மரண அறிவித்தல்கள்

சுப்பையா கனகம்மா

மண்டைதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு ஆடியபாதம் வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கனகம்மா நேற்று (13.05.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தவனம்-அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற குமாரமூர்த்தியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விசாலாட்சி மற்றும் செல்லாச்சி, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவநீதரம்பையின் (முகாமைத்துவ உதவியாளர் யாழ். மாநகரசபை) பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தத்தின் அன்பு மாமியும், லிபூசன், கேசவநாத், கனிமொழி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல. 22, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு. 077 0782260 (37355)(14-16-17)

தம்பிமுத்து இரத்தினம்

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிமுத்து இரத்தினம் நேற்று (13.05.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுந்தரம் மற்றும் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தலாதேவியின் பாசமிகு கணவனும் காலஞ்சென்ற கவிதாலயனி மற்றும் கலாஜினி (ஆசிரியை, யா/முத்துத் தம்பி மகாவித்தியாலயம்), கலாரமணன், சிறிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும் மணிராஜாவின் (பணிப்பாளர், ஜாவா கொன்ஸ்ரக்சன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்) மாமனும் அஸ்வத், ஆஷிக்கா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் தருமலிங்கம், யசோதரன், தங்கராசா, இராசன், ரவீந்திரராஜா, அசோகசீலன், செல்வகலா, சிவகலா, தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சண்முகவடிவேல், தேவராணி (பிரான்ஸ்), காந்தராசா, ரவீந்திரராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக நண்பகல் 12 மணியளவில் அச்சுவேலி வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (36526) (23-16-14)
021 205 8586

மரண அறிவித்தல்

துரையப்பா சுப்பிரமணியம்

காரைக்கால் இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிமாகவும் கொண்ட துரையப்பா சுப்பிரமணியம் நேற்று(13.05.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்லம்மா, இராசமணி மற்றும் தில்லையம்பலம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், குழந்தைவேலு, ஆறுமுகம் மற்றும் இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மகாலட்சுமி, வாலாம்பிகை, தெய்வேந்திரம், நடேசலிங்கம், விஜயலட்சுமி, இராசலட்சுமி, இராசலிங்கம், ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனும், புஸ்பராணி காலஞ்சென்ற புஸ்பராசா, யோகராணி, யோகராஜா, யோகேந்திரம், ஜெயராணி, ஜெயராஜா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

லிங்கம் அகம்
காரைக்கால், இணுவில் கிழக்கு. (37355)(14-16-17)

துயர் பகிர்கின்றோம்

யாழ். போதனா வைத்தியசாலையின்
உணர்வழியியல்துறை வைத்தியர் (Anaesthetist)

Dr. லோஷனி லக்ஷ்மன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இணுவில். K.R.சுந்தரமூர்த்தி குடும்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 ஆவது பட்டத்தை கைப்பற்றினார் செரீனா வில்லியம்ஸ்



ரென்னிஸ் வரலாற்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஒற்றையர் பிரிவில் தனது 50 ஆவது பட்டத்தை வென்றெடுத்துள்ளார்.

மெட்ரிட்பகிரங்கசாம்பியன்பட்டத்தை வெற்றிகொண்ட தன் மூலம் இந்த மைல் கல்லை எட்டிய 10ஆவது வீராங்கனையாக அவர் பதிவாகியுள்ளார்.

மெட்ரிட் பகிரங்க ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்தில், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை 2-0 என்ற நேர் செற் கணக்கில் செரீனா வில்லியம்ஸ் வெற்றிகொண்டார்.

ஆட்டத்தின் முதல் செற்றை 6:1 என்ற கணக்கில் கைப்பற்றிய செரீனா வில்லியம்ஸ், இரண்டாவது செற்றையும் 6:4 என்ற கணக்கில் தன் வசப்படுத்தினார். 2004 ஆம் ஆண்டிற்கு பின்னர் செரீனா வில்லியம்ஸை, மரியா ஷரபோவா வெற்றி கொள்ளவில்லை. (ற)

பங்களாதேஷிடம் சிக்கியது சிம்பாப்வே

சமனிலையில் முடிந்தது '20/20' தொடர்

சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது '20/20' ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 34 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சிம்பாப்வே சென்றுள்ள பங்களாதேஷ் அணி இரண்டு ஆட்டங்கள் கொண்ட '20/20' தொடரில் பங்கேற்கின்றது. முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்று சிம்பாப்வே 1:0 என தீதியில் முன்னிலை வகித்தது. இரண்டாவது ஆட்டம் புலவாயோ நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (43), சாகிப் அல் ஹசன்(40),நாசிர்ஹொசைன் (27), அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹிம்(17) ஆகியோர் கைகொடுத்தனர். ஏனைய வீரர்கள் ஏமாற்ற, பங்களாதேஷ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. சிம்பாப்வே அணி சார்பில் உட்சேயா 2 இலக்குகளை வீழ்த்தினார்.

வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட ஆரம்பித்த சிம்பாப்வே அணிக்கு ஹாமில்டன் மசகட்சா (2) ஏமாற்றமளித்தார். சிபண்டா(32), சிகந்தர் ரஜா(32) ஆகியோர் சிறிது நம்பிக்கைய எளித்தனர். ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் கைவிரிக்க சிப்பாப்வே அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்கள் மட்டுமே பெற்றுக் கொண்டது. பங்களாதேஷ் அணி 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணி சார்பில் சாகிப் அல் ஹசன் 4 இலக்குகளையும், அப்துர் ரசாக், ஷபியுல் இஸ்லாம் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகன் விருதை பங்களாதேஷ் சகலதுறை ஆட்டக்காரர் சாகிப் அல் ஹசன் தட்டிச் சென்றார்.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு ஆட்டங்கள் கொண்ட '20/20' தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையானது. முன்னதாக டெஸ்ட் தொடர் சமனிலை ஆனது ன். ஒருநாள் தொடரை சிப் பாப்வே அணி (2-1) கணக் கில் கைப்பற்றியமை குறிப் பிடத்தக்கது. (ற)

சம்பியன்ஸ் தொடரைப் புறக்கணிப்போம்

இந்திய கிரிக்கெட் சபை எச்சரிக்கை

இங்கிலாந்தில் இடம்பெற வுள்ள சம்பியன்ஸ் கிண் ணத் தொடரைப் புறக்கணிக் கப் போவதாக இந்தியக் கிரிக்கெட் சபை எச்சரித்துள் ளது என்று தகவல்கள் வெளி யாகியுள்ளன. சர்வதேசக் கிரிக்கெட் சபையின் நடவடிக் கைகளுக்கு எதிர்ப்புத் தெரி வித்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான செய்தி களை இந்தியாவின் ஊடகங் கள் வெளியிட்டு வருகின்றன. சர்வதேசக் கிரிக்கெட் சபை யின் கிரிக்கெட் செயற் குழுவுக்கான வீரர்களின் பிரதிநிதியாக லக்ஷ்மன் சிவ ராமகிருஷ்ணன் தெரிவு செய் யப்பட்டமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பு விடுத்த கோரிக்கையை சர்வதேசக் கிரிக்கெட் சபை ஏற்றுக் கொண்டதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது என்று அறிய வருகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் வீரர்களின் அமைப்பின் இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டமை தொடர்பாக இந்தியக் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிருப்தியடைந்துள்ளது என்றும், அதற்கு எதிர்ப்புத் தெரி விக்கும் விதமாகவே இந்தக் கருத்தை இந்தியக் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

சர்வதேசக் கிரிக்கெட் சபை யின்கிரிக்கெட்செயற்குழுவின் வீரர்களுக்கான பிரதிநிதித் தேர்தலில், சர்வதேசக் கிரிக் கெட் வீரர்களின் அமைப்பின் பிரதம செயற்பாட்டு அதிகாரி யான ரிம்மேனை, லக்ஷ்மன் சிவராம கிருஷ்ணன் தோற் கடித்தமையும், அந்தத் தேர்த லில் முறைகேடுகள் இடம் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப் படுவதும் தெரிந்ததே. (ற)

உபாதைக்குள்ளானார் மெஸ்சி

ஆஜென்ரீனா மற்றும் பார் சிலோனா ஆகிய அணிக ளின் முன்கள வீரரான லயனல் மெஸ்சி உபாதைக் குள்ளாகியுள்ளார்.

அட் லிட்டிகோ மெட்ரிட் அணிக்கெதிரான ஆட்டத் தின்போது தொடைப் பகுதி யில் அவருக்கு காயம் ஏற் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

25 வயதான லயன் மெஸ்சி நேற்றையதினம் உபாதை தொடர்பான பரிசோத னைக்கு உட்படுத்தப்படவி ருந்தார்.

கடந்த மாதம் சம்பியன் லீக்

ஆட்டத்தின்போது ஏற்பட்ட உபாதையில்இருந்துமுழுமை யாக உடற்தகுதி பெறுவதில் மெஸ்சி சிரமத்தை எதிர் நோக்கியுள்ளார்.

இந்த நிலையில் பருவ காலப் போட்டிகளில் அவர் தொடர்ந்து விளையாடுவது சந்தேகத்திற்கு இடமாகியுள் ளது. (ற)

அணித் தலைமையில் இருந்து விலகியமை தவறானது

பங்களாதேஷ் அணித் தலைவர் முஸ்கிகூர் ரஹீம்

தலைமைப் பதவியில்இருந்து விலகியமை தவறான ஓர் விடயம் என்று இப்போது உணர்வதாக பங்களாதேஷ் அணித் தலைவர் முஸ்பிகூர் ரஹீம் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணிக்கெதி ரான இரண்டாவதும் இறுதியு மான சர்வதேச '20/20' ஆட் டத்தில் வெற்றிபெற்றதன் பின்னர் அவர் இதனைக் கூறியுள்ளார்.

சிம்பாப்வே அணிக்கெதி ரான சர்வதேச ஒருநாள் தொடரை இழந்ததை தொடர்ந்து தலைவர் பதவி யில் இருந்து விலகுவதாக முஸ்பிகூர் ரஹீம் கூறியிருந் தார்.

அத்துடன்அணியாகஇணைந்து பணியாற்றுவதில் பிரச் சினை காணப்படுவதா லேயே தலைவர் பதவியில் இருந்து தாம் விலகியதாக வெளிவந்த தகவலையும் அவர் நிராகரித்துள்ளார்.(ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட பாடசாலை பெண்களுக்கான எல்லே

மணற்காடு றோ.க.த.க. சம்பியனாகத் தெரிவு

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது

கடந்த வெள்ளிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியின் அரையிறுதியாட்டத்தில் மணற்காடுறோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது.

முதலில் ஆடிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி தமக்கு வழங்கப்பட்ட 35 பந்துகளில் 6 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

7 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் படசாலை அணி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி அணியினுடைய களத்தடுப்புகளை எல்லாம் உடைந்தெறித்து பந்துகளை நாலாபுறம் விரட்டியடித்தனர். 18 பந்துகள் மீதமிருக்கையில் இலகுவாக வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி.

அன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பாடசாலை அணி களமிறங்கியது. விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை 7 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய பருத்தித்துறை மெதடிஸ் உயர்தரப் பாடசாலை அணியால் மணற்காடு றோ.க.த.க. அணியின் திறமையான களத்தடுப்பால் ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. இறுதியில் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணி 7:3 என்ற ரீதியில் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. (ற-23)

இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 14

பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் அல்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடந்தும் 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:-

பருத்தித்துறை ஜக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம். (ற-23)

உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 14

பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கின் அனுமதியுடன் அவ்வாய் வடக்கு நக்கீரன் விளையாட்டுக்கழகம் நடந்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்றஅணிகளின்விவரங்கள்:-

சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் டயமன்ஸ் வி.கவை எதிர்த்து மனேகரா வி.க. மோதியது. அதில் இரு அணியினரும் தலா 2 கோல்களை பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஞாயிறுக்கிழமை இடம் பெற்றஆட்டத்தில்வதிரிபெமர்ஸ் வி.கவும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கவும் மோதிக் கொண்டன. அதில் வதிரி பொமர்ஸ் வி.க. 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் சம்பியனாகத் தெரிவாகிய மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை அணி. (ற-23-422)

19 வயதுப்பிரிவுக்குபட்ட உதைபந்தாட்டம்

முல்லை ம.வி. சம்பியனானது

புதுக்குடியிருப்பு, மே 14

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவாகியது.

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வியாழக்கிழமை உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

இதன் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணியை எதிர்த்து அலம்பில் றோ.க.வித்தியாலயம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் அபாரமாக விளையாடினர். இந்தச் சூழ்நிலையில் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படுவதற்கு 6 நிமிடங்கள் இருக்கையில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணி முன்னணி வீராங்கனை அற் புதமான கோல் ஒன்றைப் பெற்றுக்கொடுத்தார்.

அதனைத் தொடர்ந்து மேலதிக கோல் எதுவும் பெறப்படாத நிலையில் 1:0 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் போட்டியில் கூடு பிடிக்கத் தொடங்கியது. இரு அணியினரின் கோல் பிரதேசங்களை பந்து போய் வந்ததே தவிர இரு அணியினராலும் கோல் எதனையும் பெறமுடியவில்லை. இடைவேளையின் பின் இரு அணியினராலும் மேலதிக கோல் எதனையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் 1:0 என்ற கோல் அடிப்படையில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ற-400-433)

முல்லை. மாவட்ட கபடி முடிவுகள்

புதுக்குடியிருப்பு, மே 14

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கபடிப் போட்டியில் 15 வயது ஆண், பெண் இரு பிரிவுகளிலும் கள்ளப்பாடு அ.த.க. வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவாகியது.

19 வயது ஆண்கள் பிரிவில் கற்சிலைமடு மகா வித்தியாலயமும், 19 வயது பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவாகின

இந்த இறுதியாட்டங்கள் முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

15 வயது ஆண்கள் பிரிவில் கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை பாலிநகர் மகா வித்தியாலயத்தைத் தோற்கடித்துச் சம்பியனகத் தெரிவாகியது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை வன்னி விளாங்குளம் பெற்றது.

19 வயது ஆண்களுக்கான போட்டியில் கற்சிலைமடு மகாவித்தியாலய அணி பாலிநகர் மகா வித்தியாலயத்தைத் தோற்கடித்து சம்பியானாகியது.

15 வயதுப் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை, கற்சிலைமடு மகா வித்தியாலயத்தைத் தோற்கடித்து சம்பியனாகியது. அதில் மூன்றாமிடத்தினை முல்லைத்தீவு மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 19 வயதுப் பெண்களுக்கான ஆட்டத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அணி முத்தயன் கட்டு வலகரை மகாத்தியாலயத்தை தோற்கடித்து சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தினை சிலவாத் தமிழ் வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ற-400-433)

நாமகள் வி.க. உதைபந்தாட்டதொடர்

ஊரெழு றோயல் சம்பியனானது

50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணம், மே 14

தெல்லிப்பழை நாமகள் சனசமுக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம் ஆகிய வற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி சம்பியனாகத் தெரிவாகியது.

நேற்றுமுன்தினம் ஞாயிறுக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா 2 கோல்களை பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப் பட்டன. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

ஆட்டத்தின் சிறந்த வீரராக ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தின் கோபன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த கோல் காப்பாளராக மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியின் கோல் காப்பாளர் சயந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற 3 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா 2 கோல்களை பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. அதையடுத்து வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதைப்பில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தூதரகம் உகண்டாவில் திறப்பு

கொழும்பு,மே.14
உகண்டாவுக்கான இலங்கைத் தூதரகம் முதன்முதலாக நேற்று உத்தியோகபூர்வமாக தலைநகர் கம்பாலாவில்திறந்துவைக்கப்பட்டது. உகண்டா ஜனாதிபதி யோவேரி முஸவேனி தூதரகத்தை திறந்து வைத்தார்.

உகண்டாவுக்கு நான்கு நாள் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உகண்டாவுக்கான இலங்கைத் தூதுவராக வேலுப்பிள்ளை கணநாதனை நியமித்தார்.

இலங்கைத் தூதரகத்தினால் உகண்டா மாணவர்களின் நன்மை கருதி தொழிற் பயிற்சி நிலையமொன்று புனரமைத்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது 200 மாணவர்கள் கல்வி பயிலும் தொழிற்பயிற்சி கூடத்தின் வசதிகளை சுமார் 400 மாணவர்கள் பயன் பெறக் கூடிய வகையில் புனரமைத்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16)

உணவு புரைக்கேறியதால் குழந்தை பரிதாபச் சாவு

நல்லூரில் நேற்றுமுன்தினம் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 14
பிஸ்கட் ஊட்டிய பின்னர் பாலூட்டியதை அடுத்து அவை புரைக்கேறியமையில் அவதிப்பட்ட 6 மாதக் குழந்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டும் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் விசாரணை மற்றும் பரிசோதனை அறிக்கையில் இது உறுதியாகியுள்ளது.

சம்பவம் நல்லூர் அரசடி வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெயராஜசிங்கம் கணதீபன் (வயது-6 மாதம்) என்ற ஆண் குழந்தையே உயிரிழந்தது.

தாயார் குழந்தைக்கு பிஸ்கட் ஊட்டியுள்ளார். அதன் பின்னர் பாலூட்டியுள்ளார். சிறிது நேரத்தில் குழந்தை மூச்சுத்திணறி அவதிப்பட்டது. இதனையடுத்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் குழந்தை மயங்கியது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட சுமார் 45 நிமிடங்களின் பின்னர் குழந்தை அங்கு உயிரிழந்தது. மரண விசாரணையை ந.பிறேம்குமார். மேற்கொண்டார். (த-4)

வடமாகாண சபைத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்று கோட்டையில் நிலையத்தின் முன்பாகத் துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டார். (த 16)

மன்னாரிலும் புயல்தாக்கம்

யாழ்ப்பாணம்,மே 14
மன்னாரில் நேற்று அதிகாலை வீசிய புயல் காற்றினால் 10 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமாகின.

மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்துக்களும் பாதிப்படைந்தன.

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விடத்தல்தீவுக் கிராமத்திலேயே சுமார் பத்து வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதால் மக்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

விடத்தல்தீவு கிராமத்தில் காலை 8.45 மணியளவில் வீசிய சுழல்காற்று சுமார் மூன்று நிமிடங்கள் கோரத் தாண்டவமாடியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சேதமடைந்த வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டார். (த-16)

வெள்ளத்தில் மூழ்கி பாட்டியும், பேர்த்தியும் சாவு

வெள்ளத்தில் சிக்கி பாட்டியும், அவரது பேர்த்தியும் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று ஹட்டன் டிக்கோயா பகுதியில் இடம்பெற்றது.

நாட்டில் நேற்று ஏற்பட்ட அசாதாரண நிலையால் பல்வேறு பகுதிகளும் பாதிப்புக்குள்ளாகின. குறித்த இருவரும் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளை கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து பெருக்கெடுத்த வெள்ளம் இவர்களது வீட்டுக்குள் புகுந்தது.

அந்த வெள்ளத்தில் சிக்கியே இருவரும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 60 வயதுடைய மூதாட்டியும் அவரது 7 வயதுப் பேர்த்தியுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இருவரது சடலமும் தற்போது லிந்துலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-16)

எட்டு வருடங்களின் பின்னர் சிவராம் கொலை விசாரணை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஊடகவியலாளர் குசல் பெரேரா நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார். தர்மரத்தினம் சிவராம் கடத்திச்செல்லப்பட்டதை தான் நேரில் கண்டார் என குசல் பெரேரா தெரிவித்தார். கறுப்பு நிற பஜிரோ வாகனத்தில் வந்தவர்கள் அவரைக் கடத்திச் சென்றதாகவும் அவர்களை அடையாளம் காணமுடியாமல் போனதாகவும் சாட்சியாளர் குசல் பெரேரா கூறினார். அந்தச் சந்தர்ப்பத்தில் தான் மது அருந்தியிருந்தபடியால் அருகிலிருந்த பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்யத் தயங்கியதாகவும் அரச சட்டத்தரணியின் குறுக்குக் கேள்விக்குப் பதிலளித்தபோது அவர் தெரிவித்தார்.

வழக்கின் மேலதிக விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த)

ஒருவரை காணோம் ஒன்பது பேர் காயம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வல்வெட்டித்துறை ஆதி கோயிலடிப் பகுதியில் கடலில் படகில் நின்றுகொண்டிருந்த இருவர் மீது நேற்று 6.30 மணியளவில் இடி தாக்கியது.

இதனால் படகிலிருந்த ஒருவர் கடலில் தூக்கி வீசப்பட்டார். மற்றையவர் படகில் மயக்கமடைந்த நிலையிலிருந்து மீட்கப்பட்டார். இடி தாக்கியதில் படகில் எரிந்த அடையாளங்கள் காணப்பட்டன.

கடலில் தூக்கி வீசப்பட்ட தங்கவேல் அருளானந்தம் (வயது-18) என்பவர் நேற்று மாலை வரை கண்டுபிடிக்கப்படவில்லை. கடற்படையினரின் அதிவேகப் படகுகள் மூலமும் தேடுதல் நடைபெற்றது.

வசாவிளான், குட்டிப் புலம் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் மின்னல் தாக்கியதில் 4 பேர் காயமடைந்தனர்.

புயல் காரணமாக பனை மரம் சரிந்து வீழ்ந்ததில் மாவை கலட்டியில் ஒருவரும், மல்லாகம் கோணப் புலம் முகாமில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும் காயமடைந்தனர்.

கோணப்புலத்தில் வீடு மீது பனை மரம் விழுந்ததனால் வீட்டில் நித்திரையில் இருந்த சூசைதாசன் சுஜீவன் (வயது-18), சூசைதாசன் சுகன்ஜா (வயது-16), சூசைதாசன் சுயந்தன் (வயது-13) ஆகிய 3 பேரும் காயமடைந்தனர்.

இவர்களில் சுகன்ஜா தொடர்ந்தும் மயக்கமான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றையவர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-5-4-8-86)

புயல் அபாயம் நீங்கியது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையே இன்றும் நீடிக்கும் என யாழ். மாவட்ட செயலக பேரிடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவிலிருந்து 800 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருந்த 'மகாசென்' புயல் நேற்றுக் காலை யாழ். குடாநாட்டுக்கு மேலாகக் கரையைக் கடந்தது.

இன்றும் வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்படுவதுடன் மழை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலையிலிருந்து காலை 8.30 மணி வரை 62.5 மில்லி மீற்றர் மழையும் காலை 8.30 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் 4.5 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியது. (த-5-4)

கைதடியில் விபத்து 48 பயணிகள் காயம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த இரண்டு பயணிகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு ஆரம்ப சிகிச்சையின் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். காயமடைந்தவர்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இருவரும் அடங்குவர். முற் பகல் 11 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி சென்ற பஸ்ஸும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளுடன் வந்த பஸ்ஸுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பக்கம் மாறிச் சென்று எதிரே வந்த பஸ்ஸுடன் மோதியதாக அதில் பயணித்து காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் தெரிவித்தார்.

விபத்தையடுத்து கைதடி ஊடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது. அதனால் சாவகச்சேரி- தனங்களப்பு வீதி ஊடாகவே பஸ்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்தன.

சாவகச்சேரிப் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டனர்.

(த-4-2-86)

Personal /Group Classes
ஆங்கிலம்,சிங்களம் அனைவருக்கும்.
கணிதம் O/L மாணவர்களுக்கு
தொடர்பு: 077 640 8622 (36535)(6.11)

CANADA
Work Permits
* Male / Female Age 20- 35 Years
* Basic English Knowledge
* 2 Years Work Contract
தொடர்புகளுக்கு
Closing Date 23-05-2013
ICS Integrated Corporate Solutions Pvt Ltd.
No 77, Clock Tower Road, JAFFNA.
021 - 7306000

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்).
France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. சர்வதேச நிறுவனமொன்றில் French கற்றிட இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்பு: சனி, ஞாயிறுகளில்... 2pm-4pm
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

காண்பியல் கலைக் காட்சி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலையும் வடிவமைப்பும்
3ஆம் வருட மாணவர்களின் காண்பியற்கலைக் காட்சி
இடம் - கலைக்கூடம்
(கலைப்பீட புதிய கட்டடத் தொகுதி- யாழ். பல்கலைக்கழகம்)
நேரம் - காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை
காலம் - 16, 17, 18 . 05/2013
அனுசரணை - குமரன் கட்டடப் பொருள் விற்பனையாளர்
கந்தசாமி கோயிலடி, இணுவில் மேற்கு, இணுவில்.
T.P- 0774002263, 0771754667

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
14/05/2013

மாற்று வலுவுள்ளோருக்கான பொருளாதார வலுவூட்டலும் துணைச்சாதனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும்

கௌரவ அமைச்சர்

டக்ளஸ் தேவானந்தா

அவர்களின் தலைமையில்
மாற்று வலுவுடையோருக்கான
பொருளாதார வலுவூட்டலும் துணைச்சாத
னங்கள் வழங்குவதற்கான ஏற்பாடும்
நாளை (15.05.2013)
புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு
நடைபெறும்.

இடம்:

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபம்.

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ள
பயனாளிகள் இந்த நிகழ்வில்
கலந்துகொண்டு பயன்பெறுமாறு
கேட்கப்படுகிறீர்கள்.



போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

பூநகரி பிரதேச செயலகத்திலிருந்து காலை 8.00 மணி
முழங்காவில் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.00 மணி
தர்மபுரம் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.30 மணி
வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.30 மணி
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திலிருந்து காலை 8.30 மணி

மேலதிக தொடர்புகளுக்கு: **021-228 5393**

மகேஸ்வரி நிதியம்

(C/9199)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
06*04*1951
விண்ணில்
15*04*2013

அமரர் சிவப்பிரகாசம் சாம்பசிவம்

கண்களில் நீர் பொங்குதையா கடலலையா
உள்ளமிங்கு வேகுதையா வெந்தணலாய்
புன்னகையுன் பொக்கிஷமாய் உலவிவந்தாய்
இன்று உன் உறவுகளைத் தவிக்க விட்டு
எங்கு சென்றாய்.

கடந்த 15.04.2013 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்ப விளக்கின் பிரிவால் நாம் துயருற்றிருந்த போது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியவர்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (14.05.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

147, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

கால நீடிப்பு

தென்மராட்சி,மே 14

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் ஆக்கங்கள் கோரப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கு காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி என அறிவிக்கப்பட்ட போதிலும் போட்டியாளர்களின் வேண்டு கோளுக்கிணங்க எதிர்வரும் 20ஆம் திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

நாஹா மருத்துவ நிலையம்

* அதி தீவிரமான ஆஸ்மா, நீரிழிவு, பாரிசவாதம், சிறுநீரக செயலிழப்பு: - அற்புத மருந்தியல்
* குழந்தையின்மைக்கு விசேட சிகிச்சை.

கிழமைநாள்:- 3 pm - 6 pm (36539)
சனி, ஞாயிறு :- 8.30 - 2pm (6.2)

வங்கி முன்லேன், சாத்தாவத்தை வையிரவர் கோயிலடி (ஜெகாதி வீடு), மானிப்பாய். T.P. 077 321 2740

காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயில் வீதியில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(பகுதியாகவும் பிரித்து விற்பனை செய்யலாம்)
தொடர்பு: 071 497 7019
(சி/9198)(6.2)

தவறிவிட்டது

புங்குடுதீவைச் சேர்ந்த பா.கேதாரகௌரி என்பவருடைய முக்கிய ஆவணங்கள் (உறுதி, வங்கிப்புத்தகம், அடவுச் சீட்டுகள்) என்பன யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 580 1112 (36540)(6.2)

மரண அறிவித்தல்

திருமதி ஆழ்வாப்பிள்ளை செல்வரத்தினம்

அளவெட்டி, சீனட்டிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை செல்வரத்தினம் (12.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் -பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், புலோலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளையின் அன்பு மனைவியும், நித்தியானந்தன் (லண்டன்), யோகானந்தன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத்தாயாரும், விஜயராணி (லண்டன்), றஜனி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சனா, நிந்துசா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.05.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
P.கணேஸ்வரலிங்கம்
புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.
021 224 1265

சீனட்டிப்பாய்,
கணேஸ்வரம், அளவெட்டி (36542)(6.11)

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் புகையிரதப் பாதை கடந்த 23 வருடங்களாகக் கழன்று வேறாகிக் கிடந்தது. பெரும் அழிவுகளை ஏற்படுத்திய யுத்தத்தின் காரணமாக ஓமந்தை காங்கேசன்துறை மற்றும் மதவாச்சி தலைமன்னார் இறங்குதுறையை இணைக்கின்ற இரும்புப் பாலங்கள் முற்றாக அகற்றப்பட்டு வேறாக்கப்பட்டிருந்தது. நாட்டில் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த சமாதானம் உருவாக்கப்பட்டவுடன் இந்திய அரசாங்கத்தால் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் எமது வரலாற்றுத் திருப்பத்தினை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக பாரியதொரு பங்களிப்பு வழங்கப்பட்டது.

IRCON INTERNATIONAL LIMITED
(A Government of India Undertaking)

இலங்கைக்கு நல்வாழ்த்துக்கள்

மடு மதவாச்சி புகையிரதப் பாதையை மீளமைத்து பொதுமக்களுக்கு வழங்கும் கொண்டாட்டம்

மேன்மைமிகு இலங்கை ஜனாதிபதி அவர்களின் செய்தி

மதவாச்சியிலிருந்து மடு வரையிலான புகையிரதப் பாதையைப் பூர்த்தி செய்து அதனை மக்களுக்கு ஒப்படைக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதற்கானதொரு வாழ்த்துச் செய்தியை வழங்கக் கிடைத்ததையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏறக்குறைய 30 வருட காலங்கள் தொடர்ந்திருந்த பயங்கரவாதத்தின் கொடூர யுத்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் மத அனுஷ்டானங்கள், சமூக மற்றும் கலாச்சார அபிவிருத்தி போன்றன கடுமையாகப் பாதிப்புக்குள்ளயிற்று. அவர்களைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்டு முழு நாட்டுக்கும் நிரந்தர சமாதானத்தை உருவாக்கியது சமபந்தமாக மக்களினுள் குடிகொண்டுள்ள மகிழ்ச்சியை நாம் காண்கின்றோம். அது எமக்கும் மகிழ்ச்சியையே ஏற்படுத்துகின்றது. அவ்வாறே வலுவிழந்த மக்கள் வாழ்க்கை அதி வேகமாக முன்னேற்றமடைவதே அரசாங்கத்தினதும் நோக்கமாகும். அருநோக்கில் பிரமாண்டமான பல அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது. அதில் ஒரு கட்டம் பூர்த்தியாகி மக்கள் கையில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

முன்னொரு காலத்தில் வடக்கையும் தெற்கையும் இணைப்பதில் புகையிரதப் பாதைகள் முக்கிய பங்கிணை வகித்து வந்தது. அதனால் பிரயாணிகள் மற்றும் பொருட்கள் இடம் பெயருதல் மிக இலகுவாக இருந்தது. பயங்கரவாதிகள் தமது அடாவடித்தனத்தை நடத்தி புகையிரதப் பாதைகளை அழிப்பதன் மூலம் வடக்கிற்கும் தெற்குக்கும் உள்ள தொடர்பை முற்றாக அறுத்தெறிந்தனர். நாம் வடக்கையும் தெற்கையும் இணைத்த மீளமைக்கப்பட்ட புகையிரதப் பாதை, அழித்தெழிக்கப்பட்ட அபிவிருத்தியை மாத்திரம் அல்ல, இருசுறாக்கப்பட்ட மனித தொடர்பையும் அணமிக்கச் செய்வதற்கான அடித்தளத்தை அமைத்துள்ளோம்.

மதவாச்சி முதல் மடு வரை செல்கின்ற புகையிரதப் பாதை மடு கோயில் காரணமாக கிறிஸ்தவர்களுக்கும் மிக அண்மியதாகவே இருக்கின்கின்றது. இத்திட்டம் அக்கொண்டாட்டத்தில் இவ்வருடம் கலந்து கொள்ளும் பக்தர்கள் புகையிரதப்பாதை வழியாகச் அங்கு செல்லத்துரும் மடு மாதாவின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது என்றே கூற வேண்டும். இது இந்நாட்டின் கிறிஸ்தவ மக்களுக்கு மாத்திரமின்றி இந்நாட்டு மக்கள் அனைவரினதும் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

அபிவிருத்தியடைந்து வருகின்ற மேற்கின் மக்கள் வாழ்க்கை மேலும் மேலும் வேகமாக அபிவிருத்தியடைய இன்று மக்கள் கையில் ஒப்படைக்கும் இந்த புகையிரதப் பாதை ஒரு காரணமாகவே இருக்கட்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்
இலங்கை சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி

இந்திய உயர்ஸ்தானிகரின் செய்தி

மீளமைக்கப்பட்ட மதவாச்சி மடு ஆகிய இடங்களுக்கிடயிலான புகையிரதப் பாதையை இன்று பொது மக்கள் பாவனைக்காக திறந்த வைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தில் இலங்கை அரசுக்கும் அதன் பொதுமக்களுக்கும் இதயபூர்வ வாழ்த்துக்களைத் தெரிவித்தக் கொள்ளக் கிடைத்ததையிட்டு நான் பேரானந்தம் அடைகின்றேன்.

இலங்கையின் சமாதானம், சௌபாக்கியம் மற்றும் அபிவிருத்திக்காக இந்தியா ஆர்வம் செலுத்துகின்றது இதனூடாக இரு சாராரும் தமது தொடர்புகளை திடப்படுத்திக் கொண்டுள்ளனர். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபின் ஆரம்பிக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களில் இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான சூழலொன்று உருவாக்கப்பட்டுள்ளது. வடக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக இந்திய அரசாங்கம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை சலுகை அடிப்படையில் கடனாக வழங்கியுள்ளது. அக்கடன் வடக்கு புகையிரதப் பாதைகளை மீளமைத்தல், சமிக்ஞைகள் மற்றும் தொலைத் தொடர்புப் பிரிவுகளை அமைத்தல் மற்றும் இவை சார்ந்த ஏனைய பொருட்களைக் கொள்முதல் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். அவ்வாறே தலைமன்னாரில் புதிய துறைமுகம் ஒன்றும் அமைக்கப்படும். தலைமன்னார் மற்றும் ராமேஸ்வரத்துக்கிடையில் மீண்டும் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டு இரு நாடுகளினதும் வரலாற்று இணைப்புக்கள் மீண்டும் புதுப்பொலிவுறும்.

252 கிலோ மீட்டர்கள் மீளமைக்கும் வட புகையிரதப் பாதையின் முதல் கட்டம் மதவாச்சி மடுவுக்கு இடைப்பட்டதாகும். இதற்காக 81 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டுள்ளது. இதனை மிக நேர்த்தியாகச் செய்து முடித்த நிறுவனத்திற்கு எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

மீளமைக்கப்படுகின்ற போக்குவரத்துக்கான உட்கட்டமைப்பு வசதிகள் காரணமாக வட பகுதிப் பொது மக்களின் அன்றாட வாழ்க்கை அபிவிருத்தியடைவது மாத்திரமன்றி முழு நாட்டிலும் அன்னியோன்னிய தொடர்பு ஏற்படும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. இத்தொடர்பின் காரணமாக மீண்டும் அபிவிருத்தியும், சமாதானமும் உருவாகும். 2014 ஆம் ஆண்டு மார்ச மாதமளவில் தலைமன்னார் மற்றும் யாழ்ப்பாணம் வரையிலான புகையிரதச் சேவையை நடாத்துவதற்கு இரு நாடுகளும் முழு முயற்சியில் இறங்கியிருப்பது இரு நாடுகளினதும் புரிந்துணர்வு, அன்னியோன்னியமான மீளகட்டமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக புது இலக்குக்கு நல்லினைக்கத்துடன் இட்டுச் செல்லும் ஒரு ஒன்றிணைப்பு என்று கூறலாம்.

இப்புகையிரதப் பாதையின் அமைப்பில் மிக ஆர்வத்துடன் செயலாற்றுகின்ற இலங்கையின் போக்குவரத்து அமைச்சு உட்பட மற்றும் அரசின் ஏனைய நிறுவனங்களுக்கும் இங்கு நன்றி கூறுவதுடன் இத்திட்டத்தைக் குறிப்பிட்ட காலத்தில் அமைத்து முடித்ததற்கான எமது அன்னியோன்னிய ஒத்துழைப்பு இங்கு மிக முக்கியமாக அமைந்தது என்பதனைக் குறிப்பிடவும் வேண்டியுள்ளது. இரு நாடுகளும் ஒன்றிணைந்த இத்திட்டம் எம்மிரு நாடுகளினதும் பாரம்பரிய நற்புறவைத் தெளிவாக படம் போட்டுக் காட்டுகின்றது என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அசோக் கே. காந்தா
இந்திய உயர் ஸ்தானிகர்

எமது இணையாளர்கள்:
SHIPPING (PVT) LTD
Sanken
SRC Company
ENGINEERS & CONTRACTORS
LANKA RSK
INFRASTRUCTURE PVT. LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org